உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்து மாதகல்

மயில்வாகனப்புலவர்

இயற்றிய

# புலியூரந்தாதி

மூலமும்,

உரையாசிரியர்

**ம. க. வேற்பிள்ளையவர்கள்**

செய்த

**புத்துரையும்.**

இவை

பருத்தித்துறை புத்தகவியாபாரம்:

சு. ப. சுல்தான்சிக்கந்தர்

வேண்டுகோளின்படி

ஷை உரையாசிரியரின் சிரேஷ்டபுத்திரரும்

மட்டுவில் இந்து ஆங்கிலதிராவிடவித்தியாசாலைப்

பிரதமஉபாத்தியாயருமாகிய

**திருஞானசம்பந்தப்பிள்ளையால்**

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டுப்

பிரகடனஞ்செய்யப்பட்டன.

விசுவாவசு௵ மாசி௴.

இரண்டாம் பதிப்பு.

1906.

(COPYRIGHT REGISTERED.)

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

நல்லூர்

## ஸ்ரீமத் வே. கார்த்திகேயோபாத்தியாயர்.

பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புகழ்கின்ற வீழத்தி யாழ்ப்பாண மாதகற் புனிதமயில் வாகனப்பேர்
புலவரரு ளியபரம பதிமகிமை துதிசெயும் புலியூரி னந்தாதியை
யுகள்கின்ற கல்வியறி வாசார வியதிகளி னுைப்பிலது பூதிமானு
யுயர்நல்லை யாறுமுக நாவல வருட்குருவி னுண்மையன் புறுசீடரிற்
றிகழ்கின்ற வன்சுகுண கணபதிப் பிள்ளைதன் சேய்திருநெல் வேலிவாசன்
றிரமருவு மட்டுவிற் சைவப்ர காசவித் யாசாலை யதிபதிதிரு
நிகழ்கின்ற வேற்பிள்ளை பலபிரதி ரூபங்கள் கொடுதிருத் துபுகழ்த்து
நிகரில்புத் துரையொடச் சிற்பதிப் பித்துலகி னிலவுற விறீ இயினனே.

நல்லூர் வித்துவசிரோமணி

## ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்மேவு நதிமதியொ டரவமருஞ் செய்யசடைச் செம்மன் மேய
வேர்மேவு புலியூரந் தாதிதனக் குரையையியல் வாய்ப்பச் செய்தான்
தார்மேவு பொழில்புடைசூழ் நெல்லையாம் பதியனநந் தமிழின் மிக்கோன்
பேர்மேவு கணபதிவேள் பெறுகுரிசில் வேற்பிள்ளைப் பெயரி னனே.

உடுப்பிட்டி

## ஸ்ரீமத் அ. சிவசம்புப்புலவர்

நேரிசையாசிரியப்பா.

கங்கையு மதியுங் கடுக்கையு மாத்தியுந், தங்கிய மின்னிறச் சடைமுடி நாதன், கருமல மொழித்துக் கதியுயிர்க் கருள, விருமல வுருக்கொடு நின்ற விரசமயன்,யோக முதவிட யோகியாய்ப் பலிறிறப், போக முதவிடப் போகியா யுறைவா, னுவியை யாட்ட வானந்த தாண்டவ, மோவிலா தாடு மோங்கிய கருணையோன், றுன்றிய வுயிர்களைச் சுகநிலை வைப்பா, னென்று மைந்தொழி லியற்று தியற்றுவோன், சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்கா, யோதியாய் நிலவு மொப்புயர் வில்லோ, னோரா னெனமறை யோ

ரொடன் றூற்ற, சீரா ளன்றிருச் செவியிடைச் சேர, வளர்சுவைச் சொற்பொருள் வண்ண மடக்குக், கிளரிரா மேசர் கிளிவிடு தூது, மிகமத முறுகவி வேழத் தொகைக, ளிகறெறு தோட்டியா மிரகு வமிசமு, மாற்றரும் பிணியையு மருந்தையு மினிதுணரத், தேற்றமிக் குளபர ராசசே கரமும், வியனெறிக் கணிதர்கள் விழைவொடு போற்று, மியனெறி யுறுஞ்செகராசசே கரமுஞ், சீலமெய்த் திறனருள் சிவஞ்சி புராணமு, மாலமுற் றொழித்திடு மமுதா கரமு, மறைசையந் தாதிகல் வளையந் தாதியு, நறைமலரடிக்குரு நாத ருலாவுமா, மின்னன பற்பல வியற்றுபு மேன்மை, மன்னியாழ்ப் பாண மாநக ரமர்ந்த, பதரில் கேள்விப் புதரில் வாய்ந்த, விதியிற் கிளர்ந்த மதியிற் றலைவன், கையா ரழலுடை யையா னனற்றொழு, மெய்யார் புனித வையா மரபினன், மாதகல் வாழ்மயில் வாகனப் புலவ, ஞேதிய தென்புலி யூரந் தாதிக், கென்றுநின் றிலங்கவு மெவரு நயப்பவு, மொன்றிய வுரையிங் கொன்றுஞற் றுதியெனு, யாமிய திசைக்கண் றெதிருறு திசைக்குமோ, ரேமநற் கலைமுனி யிருந்தன னென்னப், புடவி சொலக்கலைப் புணரியை முகந்து, திடமொடு தேக்கெறி தேசிகோத் தமனைச், சான்ற கனக சபாபதி யோகியாம், போன்றவர் பிறரிலாப் புண்ணிய னடிதழீஇ, யொவ்வொரு நூலையு மொவ்வொரு முறைவினா, யவ்வவர் சொற்பொருளனைத்தையு மகத்தமைத், தூழ்படு திறமிதென் றுலக முவப்பக், காழ்படு கடுமையிற் கற்றுநிறைந்த, திதமுறு நுண்மதிச் சேனாதிராய, முதலிபா லினுமவன் முதன்மா ணாக்கனா, மண்புகழ் தனக்கு மைத்துன னாயெலாப், பண்பு நிறைந்தசம் பந்தப் புலவன், சிறியேற் கொண்கலை தேற்றுநாட் டானுமெய்ந், நெறியாற் றேற்றிய நீளருட் குரவனுந், தண்டமிழ்க் கடலுமாஞ் சரவண முத்துப், பண்டிதன் பாலினும் பரிவொடு பணிவுறீஇச், சகநா டெங்கணுஞ் சார்ந்தசீ ராறு, முகநா வலனொடு முதிரிசை முழுப்பூண், பூண்டசம் பந்தப் புலவ னொடுங்கெழீஇ. யீண்டிய கேண்மையின் யாண்டுபல கற்றோன், வேலா யுதப்பெயர் மேவிய வித்தகன், காலா யுதக் கொடிக் கந்தனைப் பரவி, யிரங்கிடெந் தாயென் றிணைமலர்த் தாட்கீழ், வரங்கிடந் தீன்ற மாண்புடைச் செம்ம, னன்மா ணாக்கரை நண்புறக் கூஉய்த், தொன்மாண் கலைதருஞ் சுத்த மனத்தோ, னரியநாற் பாதத் தரும்பெனக் காணுஞ், சரியை நியமந் தவாத செல்வன், றெருள்வீற் றிருந்தமெய்ச் சிந்தைகுடி கொண்ட, வருள்வீற் றிருந்த வறுமுகத் தெம்பிரா, ஞானவ முடைக்குமா னந்தமா ணிக்கத், தாணிமி ருத்தமத் தகைசால் பத்தியான், வெண்ணீற் றொளியுரு மேனியைப் பத்திமைக், கண்ணீர்க் கடலிற் கழீஇ வினை கடிவோன், வினையற வெழுந்த வீட்டுநூற் பொருடெரீஇ, மனையறம் வெறுத்த மாசில் காட்சியோன், றேசா ரியல்வகை திருந்திய, கார்த்திகேயாசா ரியன்றனக் கிறபு நூல்பல, திரமுறத் தேற்றிய செவ்விய கிழமையின், விரிவுறு மகிழ்வொடு விளம்பினனாக, வுற்றுக் கவன்மொழி யுள முறத் தலைக்கொளீஇ, யற்று குகவென வாய்ந்து புரிந்தனன், பீடுறு நயி

ட்டிகப் பிரம சாரியாய், நீடுறு சிவார்ச்சனை நெறியின் றரன்பத, முன்னி
ய வாறு முகநா வலன்கனு, மன்னவற் கினியமா ணாக்கனு மருகனுஞ், சர
வண முத்துமா றனையனு மாயபேர், விரவுபொன் னம்பல வித்து வான்க
ணும், பாங்குற வழிபடீஇப் பஃறிற நூற்பொரு, ளோங்குற விளாய்வெளி
ளுழித்தநுண் மதியோன், மாவரு ணிலைமையின் மாறா தொளிரு, மீவி
ரி செங்கேழ் விளக்கொன் றனந்த, மாய தெனவொளி ரணிதிகழ் மணிமு
லைத், தாயெனு மேதகைச் சாந்தநா யகியொடு, மாட்சிசேர் சந்திர மௌலீ
ச ரென்றுங், காட்சிதந் தமருங் கடிமதிற் கோவிலுஞ், செழுநீ லத்தொகை
கெழுநீர் வாவியு, முழுநீர்ப் படுசெங் கழுநீர்த் தடமுஞ், சூதமு மரம்பையு
ந் தொன்னிலங் கீன்றுவேர், மீதெழு முட்புற விரைப்பழ வருக்கையும்,
வாளையே றுகண்டு மடலங் கமுகின், பாளைகீன் றுலவுறூஉம் பதுமவான்
றடமுஞ், செந்நெலின் கன்னற் றெரித்திடக் கந்தியைக், கன்னல்கள் கா
ட்டிடுங் கழனிசூழ் வைப்புந், தடநிலை குலவிய சத்திர முந்திரு, மடமு நி
லாவிய மட்டுவிற் பதியிற், றெய்வவெண் ணீற்றுத் திருவின் றேங்குறூஉ
ஞ், சைவ வித்தியா சாலைக் கதிபன், கண்டரு நதியாற் கவினுறு கண்ணெ
லாந், தொண்டரு மண்டருந் தோணிசெய் நேத்தப், பங்கொரு மயிலுடை
ப் பசுபதி யவர்க்குப், பொங்கருள் செய்தமர் புலோலியம் பதியிற், ஞானவி
னோதமுந் தருமமாண் புந்தவாச், சானவி மரபு தயங்க வுதித்த, காண்டகு
செல்வக் கணபதிப் பிள்ளைதன், மாண்டகு தவமொரு வடிவெடுத் தனையா
னோனுறு கலைப்பொருள் யாவையு மியல்புளி, மாணவ கர்க்கு வழங்குந் தி
யாகி, கல்வியும் வாய்மையுங் கனமும் புகழுஞ், செல்வமு மீகையுஞ் சினக
ர வளமுஞ், சேவிவர் பரம சிவமத நெறியு, மேவியதிருநெல் வேலி வாச,
னின்பரு ளெண்குணத் திறைமாட், டன்பு நிலைமை யருவேற் பிள்ளையே.

---

புலோலிநகர்

## ஸ்ரீமத் ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்.

### நேரிசைவெண்பா.

பாரேறு பல்வளமும் பல்கியொளி ரீழநன்னாட்
டேரேறி யாழ்ப்பாணத் தெய்தியுள—பேரேறு
மாதைப் பதிவாழ் மயில்வாக னப்புலவன்
மேதைசா லன்பு விளைந்து.

துய்யபுலி யூர்வாழுந் தொல்லோன்ப தம்பேணிச்
செய்யபுக ழந்தாதி செப்பினனஃ—தொய்யெனவே
யாரு மினிதுணர வாராய்ந்தோர் நல்லுரையைச்
சீருறவே செய்தான் றெரிந்து,

திருமலியாழ்ப் பாணத்துச் சீரார் புலோலி
வருகணப திப்பிள்ளை வள்ள—றருதனய
னுண்மை பொறையன் புயரடக்க மாதிகுண
வண்மைபெறு செல்வ வரன்.

வரமாரு நல்லைநகர் வான்கிரிதீ பம்போற்
சிரமார் புலவோருட் சீர்த்தி—திரமார்
பலர்புகழுங் கார்த்திகேயோ பாத்யா யன்பொன்னம்
பலபண்டி தேசனிவர் பால்.

ஆன்றூர் புகழுமகா ஞறுமுக நாவலர்பா
லேன்றூர் வியப்பமுறை யெய்தியே—தோன்று
வதிநுட்ப நூல்கள்பல வாய்கல்வி கேள்வி
மதிநுட்ப நன்பா வலன்.

மாசணுகா மட்டுவிலின் மன்னிவளர் சைவப்ர
காசவித்யா சாலை கருதியமைத்—தேசகலக்
கற்பார்க் கறிவூட்டுங் காருண்யன் வேற்பிள்ளை
சொற்பாற் றமிழ்வித் துவான்.

---

புலோலிநகர்

## ஸ்ரீமத் வ. குமாரசுவாமிப்புலவர்.

(அஷ்டகம்) எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மாதங்க மேருகிரி யின்றும் போந்து மனுகுலத்துச் சிங்கவன்மன் மகிழ்வாற் கண்ட, மாதங்க மன்றுமின்றெவ் வுயிர்க்குமாக்கம் வகுத்தளிக்க வளித்தழிக்க வாரீ சத்து, மாதங்க மேனியனு மயனுங் காணு மலர்க்கழலன் பினர்காண மகிழ்வினுடு, மாதங்க மேனியரும் புலியூ ரானை வழுத்தியொரு பிரபந்தம் வகுப்ப னென்றே.

கோதகலு மிந்துசமுத் திரமா னெய்யிற் குலவுமிலங் காதீபக் குவலயத்திற், றீதகலும் வடதிசையாழ்ப் பாணமென்னுந் தீபகற்பத் தொருசாரிற்றிகழுமேன்மை, மாதகலென் றுள்ளவளம் பதிவே ளாள மரபினன்செந் தமிழ்க்கவிஞன் வழுவா தாய்ந்து, வாதகலு மந்தாதி யமக மாக மதித்துமயில் வாகனன்றான் வகுத்தா னன்றே.

அன்றுரைத்த புலியூரந் தாதிக் கர்த்த மறிந்திவொர் சிலரன்றி யறியார் பல்லோர்,சென்றுரைத்த போதனையாற் கொள்ளு முள்ளச் சிறுவருந்தே சிகரின்றித் தெளியுமாற்று, னன்றுரைத்த பொருளெழுது கெனத்தனக்கு நற்றமிழ்போ தித்த நல்லூர் நாயகரேறுங், குன்றுரைத்த தமிழ்க்கலைஞன் கார்த்தி கேயக் குரவனினி துரைத்தபணி சிரமேற் கொண்டே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பல்லூரி னல்லூரும் பலமதத்திற் சிவமதமும் படித்துத் தேருஞ், சொல்லூரும் பாடைகளிற் சுவைத்தமிழு நன்மரபுத் தொகையோர் நான்கின், வில்லூரு மதிவேணி மிசையிசைகக் காகுலமும் விழுப்ப மெய்த, வொல்லாரும் வியந்துரைத்த தூழியினுந் தொலையாதக் குதித்த சீரான்.

ஆகியவுத் தமனாகு மாறுமுக நாவலன்ற னிடத்து மாழ்ந்துள், ளேகியவின் னேன்மருக னியற்றமிழி லெத்திறத்து மிணையி லாதான், வேகியல னேவருக்கும் வித்துவ சிரோமணியாய் விளங்கி யெங்கும், போகியசீ ரான்பொன்னம் பலவனிடத் தினுந்தமிழைப் பொருந்தக் கற்றோன்.

### தரவுகொச்சகக்கலிப்பா.

நட்டுவரி விளைகழனி நன்மருத நாடேயா
மட்டுவிலென் றொருபதியின் மாணவரக் கறியாமை
விட்டுவகை படத்தமிழை விளக்கவொரு கலாசாலை
கட்டுவித்தங் கதிபதியாக் களங்கமற நடத்து விப்போன்.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

தேங்குபுனற் பகீரதியின் குலத்தான் செல்வஞ் சிறந்தகண பதிப்பிள்ளைச் செம்மல் செய்த, வோங்குதவப் பயனெனவந் துதித்தோ னல்லூர்க் கொருசாரிற் றிகழ்வளத்துக் குறைவு ளான, பாங்குபெறு செழுந்திருநெல் வேலி யென்னும் பழம்பதியே விளங்கியதன் பதியாக்கொண்டோன், றூங்குகுட தீபமென விருந்த காலந் தவிர்ந்துகிரி தீபமெனத்தயங்கப்பெற்றே.

சக்கரத்தை யோதிமத்தான் மதித்து முன்னாட் சக்கரத்தான் சுவையமுதந் தந்த வாபோ, லக்கரத்தை யொருவடிவா யடிமுன் னாடி யமைத்தருத்தம் பிறிதுபிறி தாக்கு நூறு, துக்கரத்தை யுடையகவிப் பொருளை யாய்ந்து துகளறவே யெளிதெவருந் துணியு மாற்றான், மிக்கரத்தைப் படுதலின்றி வேலுப் பிள்ளை விரும்புதமி ழறிஞனுரை விளம்பி னானே.

---

புலோலிநகர்

## ஸ்ரீமத் அ. வேன்மயில்வாகனஉபாத்தியாயர்

### கட்டளைக்கலித்துறை.

சேணுற் றிடுபொழில் யாழ்ப்பாண மாதகற் சென்மிதனைப்
பேணுற் றிடுபுல வோன்மயில் வாகனன் பெட்புறச்சொன்
மாணுற் றிடுநெற் புலியூரக் தாதிக்கு வாய்ப்புறவோ
ரேணுற் றிடுமுரை செய்தெழி லாரச் சிறுகியென்றே.

செல்லூரு மிஞ்சிநல் லூரே திகழுஞ் செழும்பதியாச்
சொல்லூர் புகழமை வேலா யுதன்செய்த துய்யதவத்
தெல்லூர் மணியென வந்திசை வைத்தவ னின்றமிழைப்
பல்லூ ரவர்க்கும் பகர்கார்த்தி கேயன் பணித்திடவே.

அன்னோ னிடத்தினு முன்னே புகன்றநல் லூரடைந்த
முன்னோனம் மாறு முகநா வலன்றிரு முன்னருஞ்சொ
லின்னோன் மருக னெனவந்த வித்வ சிரோமணிப்பேர்
மன்னும்பொன் னம்பலப் பிள்ளைதன் மாட்டினும் வாய்த்திடவே.

கற்றோ னிலக்கண லக்கிய மற்றுள கல்வியெலா
மற்றோரொப் பில்லவன் வேளாண் மரபொளிர் மாண்புடையோ
னுற்றோர்ந் திடுமியன் மட்டுவிற் பேர்ப்பதி யுற்றிடுதீங்
கற்றோர்க் கருள்சைவ வக்கழ கத்துக் கதிபதியே.

கயல்சேர்ந்த நீர்வயல் யாழ்ப்பாணத் துக்கனங் காட்டுநயச்
செயல்சேர்ந்த சீர்த்திரு நெல்வேலி யன்றினஞ் செய்தவத்தா
னுயல்சேர் கணபதிப் பிள்ளைக் கொருசுத னுதித்த
வியல்வேலுப் பிள்ளை யுரைசெய் தெழிலச்சி னிட்டனனே.

---

சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர்.

---

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

தில்லைநட ராசனடிக் கன்பு மிக்கோன்
　செயமயில்வா கனப்புலவன் சென்னாட் செய்த
மல்லல்பெறும் புலியூரந் தாதிக் கேற்ப
　வாய்மைமிகு முரையொன்றை வரைந்திட் டீந்தா
னல்லைநகர் நாவலருக் கன்பார் சீட
　னகுதிருநெல் வேலியெனு நகரி வாசன்
சொல்லுகண பதிப்பிள்ளை யருளு மைந்தன்
　சுகுணமுறும் வேற்பிள்ளைத் தோன்றன் மாதோ.

---

உடுப்பிட்டி ஸ்ரீமத். சு. சரவணமுத்துப்பிள்ளை.

---

கட்டளைக்கலித்துறை.

மாதகன் மேவு மயில்வாக னப்புல வன்புலியூர்க்
கோதி லியமக வந்தாதிக் கோருரை கூறினனாற்
றீதக லுந்திரு நெல்வேலி வாழ்பவன் றேறுகலை
யோதிய சீர்த்தியன் வேற்பிள்ளை யென்றிடு முத்தமனே.

---

## வல்வை இயற்றமிழ்ப்போதகாசிரியர்
## ஸ்ரீமத். ச. வைத்தியலிங்கபிள்ளை.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

செய்யவள்சேர் யாழ்ப்பாணச் செழும்பு லோலித் திகழ்கணப திப்பிள்ளை செம்ம லென்ன, வையமிசை யினிதுதித்தோன் மட்டு விற்சை வப்பிரகா சப்பேர்வித் தியாசா லைக்குத், துய்யவதி பதிவேலுப் பிள்ளை நாமன் றெடுகடலி னிலவுமகா வித்து வானெனம், மையலுமற் றயராறு முகனெ னும்பேர் மாநாவ லவனேநல் லூரின் மன்னும்.

கார்த்திகே யோபாத்தி யாய னேமன் கருதுவித்வ சிரோமணிப்பேர் காட்டி விற்குஞ், சீர்த்தியபொன் னம்பலப்பேர்ச் செல்வ னின்னோர் செந்தமிழைப் பயிற்றவுணர் சிறப்பு வாய்ந்தோன், ஆர்த்தியொடு கார்த்திகே யப்பே ரோச னருமதியின் படிபுலியூ ரந்தா திக்குப், பூர்த்திபெற வோருரைசெய் தளித்தா னிந்தப் பூமிசைமா ணவர்மயக்கம் போதன் மெய்யே.

---

## காரைநகர்,
## ஸ்ரீமத் கார்த்திகேயையர் குமாரர் நாகைநாதையர்.

### பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்மேவு மாதைநகர் மயில்வா கனப்புலவர் செய்தசிற் பரமதான
 செம்பொனம் பலமருவு புலியூரி னந்தாதி டீகைநீ செய்கவென்னப்
பேர்மேவு நல்லைநகர் வேலா யுதப்பிள்ளை பெருமகிழ்வொ டருள்செய்கும [ரன்
 ப்ரபலமிகு கார்த்திகே யாசான் புகன்றிடப் பிரியாமலவனிடத்தும்
வார்மேவு சுகுணசர வணமுத்து மதலைபொன் னம்பலவ நாமதேய
 மருவியநல் வித்துவ சிரோமணி யிடத்தினும் வளர்மதிப் பெரியமத்தா
லார்மேவு கல்விப் பயோததி மதித்தரிய பிரசார வமுதமுதவி [ண்டோன்.
 யான்மகோ டிகண்மயற் பசியொழித் தரனடிக் கென்ஞான் று மன்பு பூ
பரமதச் செறியிரு டிசாமுக மறைந்திடப் பாரில்வரு ஞானபானு [ணர்ந்து
 பகருமெக் கொடையினுங் கல்விப் பெருங்கொடைப் பயனதிக மென்று
வரமுதவு தில்லைத் தலத்தினும் வண்ணையினு மிருகழகம் வைத்தமேன்மை
 மண்டலங் கொண்டபுக ழாறுமுக நாவலன் மருகினுங்கற்றவல்லோன்
பொருவில்சீ ராமனது சரிதாதி காவியப் பொருளினி துணர்ந்தநிபுணன்
 பொழில்வளையு மட்டுவிலொர் வித்தியா சாலையைப்போற்றுமதிகாரியா
திருநெல்வே லிப்பதியி னன்கண பதிப்பிள்ளை செய்தவ மெனவுதித்த [கித்
 செய்யுவே லுப்பிள்ளை யுரைபுரிந் தெழுதா வெழுத்தினிற் றீட்டினனே.

ஆறுமுகநாவலர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

நெய்யார்ந்த வாட்கைச் செகராச சேகரப் பேர்விறலி
மெய்யாக விண்ணெண் கலைதமி ழாக விரித்துரைத்த
வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்
பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.



# முகவுரை.

இவ்வந்தாதியுரையிலே எடுத்தோதற்பாலனவாகிய இலக்கணவிதிகளுள்ளும், பிறவற்றுள்ளும், பொருளுணர்ச்சிக்கு ஒருதலையான் இன்றியமையாதன சிலவன்றி, ஏனைய எடுத்தோதப்பட்டில; அங்ஙனம்எடுத்தோதாமை அந்தாதியுரையாசிரியர் தொன்னெறிமரபென்க. அன்றியும், வேற்றுமை அல்வழிகளுள் யாதானுமொருசந்தியாற் றொடர்ந்துநிற்கும் வாசகங்கட்கு அச்சந்தியாற் கொள்ளப்படும் பொருளோடுவிரோதமற, வேறோர்நயம்பற்றிப் பிறிதொருசந்தியாற் பொருளுரைக்கப்பட்டனவும், ஒரோவிடங்களிற் பொருளை இனிது விளக்குதற்பொருட்டுச் சிறுபான்மை சொற்கள் வருவிக்கவேண்டுழிவருவித்துப் பிரயோகிக்கப்பட்டனவுஞ்சிலவுள. அங்ஙனமுரைத்தல், பிரயோகித்தல்களைப் பெரும்பான்மை இளம்பூரணருரை, நச்சினார்க்கினியருரைகளினும், சிறுபான்மை சேனாவரையருரை, பரிமேலழகருரை, சிவஞானமுனிவருரைகளினுங்காண்க.

ம. க. வே.

கணபதிதுணை.

# புலியூரந்தாதி

## மூலமும் உரையும்.

### காப்பு.

கற்பகங்காக்குங்கவுரிபங்காளன்கருதரிய
கற்பகங்காளன்புலியூரந்தாதிகதிதருசங்
கற்பகங்காதரன்செம்மல்செம்முக்கட்கயமுகத்துக்
கற்பகங்காணெமைக்கொண்டேபுகல்வித்துக்காப்பதுவே.

(இதனது பதப்பொருள்:) கற்பு அகம் காக்கும் கவுரி பங்கு ஆளன் - கற்பினைத் தம்மிடத்துப் பாதுகாக்கின்ற பார்ப்பதியை வாமபாகத்தில் ஆளுகின்றவரும்,—கருது அரிய கற்ப கங்காளன் - அறிதற்கரிய கற்பங்களிலே இறந்த (பிரமவிஷ்ணுக்களுடைய) முழுவெலும்பைத் தரித்தவருமாகிய சிவபெருமானது,— புலியூர் அந்தாதி - புலியூரந்தாதியெனப்பெயரிய இப்பிரபந்தத்தை,— கதி தரு சங்கற்ப கங்காதரன் செம்மல் - (ஆன்மாக்கட்கு) முத்தியைக்கொடுக்குஞ் சங்கற்பத்தையுடைய கங்கையைத் தரித்த அச் சிவபெருமானுக்குத் திருக்குமாரராகிய,—செம் முக்கண் கய முகத்துக் கற்பகம் ஏ - செவ்விய மூன்றுகண்களையும் யானைமுகத்தையுமுடைய (மேலைக்கோபுரத்தின்கண் எழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுளாகிய) கற்பகமே,—எமைக் கொண்டு புகல்வித்துக் காப்பது - எம்மை கொண்டு கூறுவித்து (இடையூறுகழாமற்)காத்தலைச்செய்வது. என்றவாறு. காண் அசை. ஏ ஈற்றசை. அந்தாதியைப் புகல்வித்துக் காப்பது எனவியையும். புலியூர் - சிதம்பரம்; புலிமுனி சிவலிங்கோபாசனைசெய்தற்கிடமாகிய ஏதுவிற் பெற்ற பெயர். புலிமுனி - வியாக்கிரபாதமுனிவர். புலியூர் வியாக்கிரபுரம் என்பன ஒருபொருட்சொற்கள்.

பூவாரலங்கலம்பொற்கொன்றைவேணியர்பொன்னுடையார்
பூவாரலங்கலந்தாரெனுமேற்றினர்போதமன்றிப்
பூவாரலங்கலமைந்தமைக்கண்டார்பொருகணிச்சிப்
பூவாரலங்கலங்கைப்புலியூரார்புகலெமக்கே.

(இ-ள்.) பூ ஆர் அலங்கல் அம் பொற்கொன்றை வேணியர் - பொலிவுபொருந்திய திருவாத்திப்பூமாலையையும் அழகிய பொற்கொன்றைமாலையையுந் தரித்த சடையையுடையவரும்,—பொன் உடையார் பூவார் அலம் கலந்தார் எனும் ஏற்றினர் - இலக்குமியையுடையவரும் பூமிதேவியையுடையவருங் கலப்பைப்படை (கையிற்)பொருந்தப்பெற்ற பலராம அவதாரத்தையுடையவருமாகிய விஷ்ணுவென்னும் இடபவாகனத்தையுடையவரும்,—போதம் அன்றிப் பூவார் - (பக்குவான்மாக்கட்கு) ஞானத்தையன்றி அஞ்ஞானத்தைத் (திருவாய்) மலராதவரும்,—அங்கு அல் அமைந்த அல் மைக்கண்டர்- அங்கே (தேவர்களுக்கு) அரணகப்பொருந்திய இருள்போலுங்கரியகண்டத்தையுடையவரும்,-பொரு பூ ஆர் கணிச்சி அலங்கல் அம் கைப் புலியூரர் ஏ- பொருகின்ற கூர்மைபொருந்திய மழுப்படை விளங்குகின்ற அழகிய திருக்கரத்தையுடைய புலியூரருமாகிய சிவபெருமானே,— எமக்குப் புகல் - எமக்குப் புகலிடமாயுள்ளவர். எ-று. அல்-மதில்; அது "இரவுமிருளு மிரும்பின்பெயரு - மெயிலுமிரவியு மல்லெனலாகும்" என்னும் பிங்கலத்தைச்சூத்திரத்தானறிக. அங்கை என்பதற்கு அகங்கை எனப்பொருள் கூறினும் பொருந்தும். (க)

புகமந்தரங்கொடுவேலையினட்டும்புலவரைவெம்
புகமந்தரங்கொடுவந்தநஞ்சுண்டபுனிதனைச்செம்
புகமந்தரங்கொடுரகஞ்செயும்புலியூரனைநம்
புகமந்தரங்கொடுங்கார்வினைபோலப்புரியனெஞ்சே.

(இ-ள்.) மந்தரம் கொடு வேலையில் புக நாட்டும் புலவரை வெம்பு - மந்தரமலையை வளைந்த சமுத்திரத்தில் (மத்தாகப்) புகும்படி நாட்டிய விஷ்ணுமுதலிய தேவர்களைக் கோபித்து, கமம் தரம் கொடு வந்த நஞ்சு உண்ட புனிதனை - நிறைந்த வலிமையைக்கொண்டு (எதிர்த்து) வந்த விஷத்தையுண்ட சுத்தரும்,— சம்புகம் அந்தரம் கொள் துரகம் செயும் புலியூரனை -(திருவாதவூரடிகள்பொருட்டு)நரிகளை ஆகாயகாமிகளாகிய குதிரைகளாக்கிய புலியூரருமாகிய சிவபெருமானை,—நெஞ்சே நம்புக-மனமே நம்பி(அவர்விதித்த பதிபுண்ணியங்களைச்செய்யக்)கடவாய்,--மந்தரம் கொடும் கார்வினை புரியல்- (அஃதன்றி)அறிவின்மையினலே கொடிய பாவத்தொழில்களைச் (சிறிதுஞ்) செய்யாதொழிக. எ—று. கார் ஆகுபெயர். போல உரையசை. குதிரை பூகாமி ஆகாயகாமி என வேகம்பற்றி இருவகைப்படுதலின், அவற்றுட்சிறந்த ஆகாயகாமியை ஈண்டெடுத்துக்கூறினர்.

புரியாதவன்பிற்பிரியாவவுணர்புகுந்திருக்கும்
புரியாதவன்பற்பொடிபடுத்தோனுரபூதரமுப்
புரியாதவன்றெழுமெதன்புலியூர்புகழாரையருள்
புரியாதவன்பதமெய்யன்பினற்புணர்ப்பாய்மனனே.

(இ-ள்.) புரியாத வன்பில் பிரியா அவுணர் புகுந்திருக்கும் புரி- (நல்லோர்) விரும்பாத வல்வினைகளில் (ஒருகாலுந்) தவிராத அசுரர்கள் புகுந்திருக்கப்பெற்ற முப்புரங்களையும்,—ஆதவன் பல் பொடி படுத்தோன் - பகனென்னுமாதித்தனது பல்லையுந் துகளாக்கினவரும்,—பூதரம் உரம் முப்புரி யாதவன் தொழு தென் புலியூர் புகழாரை அருள் புரியாதவன் பதம் - மலைபோலும் மார்பிலே முப்புரியாகிய உபவீதத்தைத்தரித்த கண்ணனுகி, யதுகுலத்திற்பிறந்த திருமால் வணங்குகின்ற தெற்கின்கணுள்ள புலியூரைத் துதியாதவர்க்கு அருள் செய்யாதவருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை,—மனமே மெய் அன்பினல் புணர்ப்பாய் - மனமே மெய்யன்புகொண்டு (இடையருது) சிந்திக்கக்கடவாய். எ-று. புகழாரை உருபுமயக்கம். (ரு)

பாயசங்கண்டுபரியாக்கியத்தபத்தர்க்கினிய
பாயசங்கண்டுநிகர்புலியூரபகையைவெல்லு
பாயசங்கண்டுகரத்தாற்கரியவபாழ்வினைக்குப்
பாயசங்கண்டொடராதெனையாள்கபராபரனே.

(இ-ள்.) பாய் அசம் கண்டு பரி ஆக்கி அத்த- (நாரதமுனிவரதுயாகாக்கினியிற் றோன்றிய) பாய்கின்றதகரால் (உயிர்கட்குவிளைந்ததுன்பத்தைக்) கண்டு அதனை ஊர்தியாக்கியருளிய சுப்பிரமணியக்கடவுளுக்குப்பிதாவே,—பத்தர்க்கு இனிய பாயசம் கண்டு நிகர் புலியூர - அன்பர்கட்கு இனிய பாற்சோற்றையுங் கற்கண்டையும் போலும் புலியூரரே,—பகையை வெல் உபாய- பகைவரை (எளிதில்) வெல்லும் உபாயங்களையுடையவரே,—சங்கு அண்டு கரத்தாற்கு அரியவ - சங்கு பொருந்திய கையையுடைய விஷ்ணுவுக்குக் காணுதற்கரியவரே,—பாழ் வினைக் குப்பாயசங்கண் தொடராது எனை ஆள்க - கேடுபயக்கும் இருவினையாகிய சட்டையையுடைய பிறவிகளிலே இனிச்சம்பந்தப்படாது தமியேனை ஆட்கொண்டருளுக,—பராபரனே - சுத்தமாயாதத்துவத்துக்கு மேலானவரே. எ-று. ஆக்கி என்பது பெயர். சம் - பிறப்பு. (சு)

பரசெம்மலைநிகரும்புலியூரபராபரதா
பரசெம்மலைமுகநாரிபங்காளபரிக்குமங்கைப்
பரசெம்மலைவினையுந்தெறுசூலப்படையவெனப்
பரசெம்மலைமனமேகதியேயம்பலமதற்கே.

(இ-ள்.) பர - (பக்குவான்மாக்கட்கு) முத்தியைக்கொடுப்பவரே,—செம்மலை நிகரும் புலியூர - மாணிக்கமலைபோலும் புலியூரரே,—பர அபர - (முன்னுள்ளதற்கு அதன்) முன்னும் (பின்னுள்ளதற்கு அதன்) பின்னுமுள்ளவரே,—தாபர - எல்லாப்பொருட்குங் களைகணுயுள்ளவரே,—

செம்மல் - எப்பொருட்குமிறைவரே,—ஐமுக - ஐந்து திருமுகங்களையு டையவரே,—நாரி பங்கு ஆள - உமாதேவியை வாமபாகத்தில் ஆளுகின் றவரே,—அங்கை பரிக்கும் பரசு - அழகிய திருக்கரத்திற்றரிக்கும் மழு வையும்,—எ மலை வினையும் தெறு சூலப் படைய எனப் பரசு - எத்துணை ப்பெரிய அமர்வினைகளையுந் தடிகின்ற சூலப்படையையுமுடையவரேயெ ன்று (இங்ஙனந்) துதிப்பாயாக,—எம் அலை மனமே - எமது (விடயங்களி ற்) சுழலுகின்ற மனமே,—அதற்குப் பலம் அம் கதி ஏ - அத்துதிக்குப்பய ன் (எவற்றினும்) சிறந்த பரமுத்தியேயாகும், ஆகலான். எ-று. ஐம்முகம் ஐமுகம் என மகரவொற்றுத் தொக்குநின்றது. பதமுத்திகளிற்பிரித்தலி ன், ஏகாரம் பிரிநிலை. (ரு)

அம்பலவாவிமலாவென்றிடார்க்கருளாதபங்கை
யம்பலவாவியலர்புலியூரருக்காநலம்வே
ளம்பலவாவியடர்ப்பதிவ்வூரவராயெடுக்கு
மம்பலவாவியலர்தூற்றுவார்க்கவையாகவின்றே.

(இ-ள்.) அம்பலவா விமலா என்றிடார்க்கு அருளாத - சபாநாய கரே மலரகிதரே என்று துதியாத அபக்குவர்கட்கு அருள்செய்யாத,—ப ங்கையம் பல வாவி அலர் புலியூரருக்கு நலம் ஆ - தாமரையரும்புகள் ப லதடாகங்களிலே மலரப்பெறுகின்ற புலியூரருக்கே எமதின்பநலம் ஆகக் கடவது, (அதுகிடக்க),— ஆவி அடர்ப்பது வேள் அம்பு அல - எமது யிரையொறுப்பது காமபாணங்களல்ல,— இவ் ஊரவர் ஆய் எடுக்கும் அம் பல் அலர் - இவ்வூரவர்கள் நுண்ணிதாக எடுக்கின்ற அம்பலும் அலருமே யாம்,—அவை இன்று அவாவித் தூற்றுவார்க்கு ஏ ஆக - அவ்வம்பலும் அ லரும் இதுபொழுது (ஒன்றை) உட்கொண்டு தூற்றுகின்ற அவர்கட்கே ஆகக்கடவன. எ-று. அருளாத புலியூரன் என வியையும். பங்கயம் பங் கையம் எனப்போலியாயிற்று. இரண்டாமடியில் ஆக என்னும் வியங் கோளீறு விகாரத்தாற்றொக்கது. அடர்ப்பது என்னும் முடிக்குஞ்சொல் தனித்தனி கூட்டப்படும். ஆய்தல் - நுணுகுதல். அது “ஒய்தலாய்தனி ழத்தல்சாஅ, யாவயினுங்குமுள்ளதனுணுக்கம்” என்னுந் தொல்காப்பிய ச் சொல்லதிகாரவுரியியற் சூத்திரத்தானறிக. அம்பல் சிலரறிந்து தம்மு ட்கூறுவது. அலர் பலரறிந்து புறத்திற்கூறுவது. [தலைவியுடன்போதற் கொருப்பட்டெழுதல்] “அலரேசுமந்துசுமந்திந்தவூர்நின்றழுங்குகவே” எ ன்பதும் இக்கருத்தேபற்றிவந்தது. (சு)

கவின்றிருந்தும்பையுங்கொன்றையுஞ்சூடியகண்ணுதலே
கவின்றிருந்தும்புலியூர்நடராசகங்காதரவென்
கவின்றிருந்தும்பின்முடிதன்மெய்யேநரகங்களிலே
கவின்றிருந்தும்வெளிறுப்வினைதீர்ந்திடுங்காண்மனமே.

(இ-ள்.) இரும் தும்பையுங் கொன்றையும் கவின்று சூடிய கண் நுதல் ஏக - பெருமையாகிய தும்பைப்பூவையுங் கொன்றைமாலையையும் அழகுபொருந்த முடியிற்றரித்த நெற்றிக்கண்ணையுடைய சர்வலோகைக நாயகரே,—இன் திருந்தும் புலியூர் நடராச - சீர்திருந்திய புலியூரிலெழுந் தருளியிருக்கின்ற திருநடராசரே,--கங்காதர- கங்கையைத்தரித்தவரே,-- என்க - என்று துதிப்பாயாக,—இன்று இருந்தும் பின் மூடிதல் மெய்யே - நாம் இதுபொழுதிருக்கினும் பின்னிறத்தல் சத்தியமே,—க நரகங்களிலே இன்று - (இறந்தாற்பின்) அக்கினி நிரயங்களிலே (வேவுதல்) இல்லை,— இருந்தும் வெளிறும் வினை தீர்ந்திடும்- (அதுவன்றியும்) கரியும்வெளிறும்ப டி (இருண்ட) தீவினை எம்மைவிட்டகலும்,—மனமே-நெஞ்சமே.எ-று. கவி ன என்னும்வினையெச்சங் கவின்றெனத்திரிந்துநின்றது. க-அக்கினி. ஈ ற்றடி இருந்தை இறுதி ஐகாரங்கெட்டுநின்றது. இருந்தை - கரி. காண் அசை. நெஞ்சமே நாம் இதுபொழுதிருக்கினும் பின்னிறத்தல் சத்தியம் (ஆகலின்), நாயகரே நடராசரே கங்கையைத்தரித்தவரே என்று துதிப் பாயாக; (அங்ஙனந்துதித்தால்) இறந்தபின் நிரயங்களிலே வேவுதலில்லை; அதுவன்றியும் தீவினை எம்மைவிட்டகலும் எனக்கூட்டுக. (எ)

மனந்தனங்கந்தருசொல்லாலவன்பணிவாய்த்துவிடா
மனந்தனங்கந்தரஞ்சேர்புலியூரனைவந்திப்பர்வா
மனந்தனங்கந்தரமென்னடையார்கண்வலையிற்படா
மனந்தனங்கந்தலென்பார்பவசாகரமாய்ப்பவரே.

(இ-ள்:) மனம் சொல் அங்கம் ஆல் அவன் தரு பணி விடாமல் வாய்த்து - மனவாக்குக்காயங்களினால் அவர்விதித்த திருத்தொண்டுகளை இடையறாதுசெயப்பெற்று,—நந்தனம் கந்தரம் சேர் புலியூரனை வந்திப்ப ர் - திருநந்தனவனங்கள் மேகமண்டலத்திலுயரப்பெற்ற புலியூரில் எழுந் தருளியிருக்குஞ் சிவபெருமானைவழிபடுபவர்,—வாமன் நந்து அனம் கந்த ரம் மெல் நடையார் கண் வலையில் படாமல் - வாமனரூபத்தையுடைய வி ஷ்ணுவினது சங்கையும் பிரமாவினது அன்னப்புள்ளையும்போலுங் கழுத் தையும் மெல்லியநடையினையுமுடைய பெண்களது கண்ணாகிய வலையில கப்படாமல்,—நம் தனம் கந்தல் என்பார் - நம்முடையசெல்வங்கேடு (பய க்கு) மென்று (அதிற்பற்றற்றவ) ராகி,—பவசாகரம் மாய்ப்பவர் - சனன சாகரத்தைக் கடப்பவராவர். எ—று. தன் சாரியை. அன்னம் அனம் என நின்றது. (அ)

கரமாயருந்துதிக்கைமலையாய்ப்பிறவாய்க்கருஞ்சு
கரமாயருந்துதியென்றுவிடாதெனைக்காத்தருள்சக்
கரமாயருந்துதிரணிரைமேய்க்குங்கழிபொருந்து
கரமாயருந்துதிக்கும்புலியூரகங்காதரனே.

(இ-ள்:) கரம் ஆய் - கழுதையாகியும்,—அரும் துதிக்கை மலை ஆய் - அரியதுதிக்கையையுடைய மலைபோலும் யானையாகியும்,—கரும் சூகரம் ஆய் - கரியபன்றியாகியும்,—பிற ஆய் உதி - மற்றையயோனிபேதங்களாகியும் பிறப்பாய்,—அருந்து என்று விடாது எனைக் காத்தருள் - (பிறந்து முன்செய்த இருவினைப்பயன்களாகிய சுகதுக்கங்களை) அநுபவிப்பாயென்று (இன்னும் அப்பிறவிகளில்) விடாது தமியேனைக்காத்தருளும்,—சக்கரம் - சக்கரப்படையும்,—ஆயர் உந்து திரள் நிரை மேய்க்கும் கழி பொருந்து கரமாயரும் துதிக்கும் புலியூர - இடையர்கள் செலுத்துகின்ற கூட்டமாகிய பசுநிரைகளைமேய்க்குங் கோலும் பொருந்திய கையையுடைய திருமாலுந் துதிக்கின்ற புலியூரையுடையவரே,—கங்காதரனே - கங்கையைத்தரித்தவரே. எ—று. (கூ)

கங்காதரன்புலியூர்நகர்காவலன்காருண்யமே
கங்காதரநற்கவுரிபங்காளன்கருதருமோ
கங்காதரன்பரனென்றுபுத்தேளினங்கைதொழுசங்
கங்காதரன்பர்க்கினியரல்லார்க்குக்கசந்தவரே.

(இ-ள்.) கங்காதரன் - கங்கையைத்தரித்தவர்,—புலியூர் நகர் காவலன் - புலியூரை இராசதானியாகவுடைய திருநடராசர்,—காருண்ய மேகம் - கிருபாமேகம்,—கந்தரம் நல் கவுரி பங்கு ஆளன் - விரும்பத்தகும் நல்ல உமாதேவியை வாமபாகத்திலாளுகின்றவர்,—கருது அரு மோகம் காது அரன் - மதித்தற்கரிய (விபரீதஞானம்பயக்கும்) மாயாவிருத்திகளைப் (பக்குவான்மாக்கட்கு) நிக்கிரகிக்கும் அரனென்னுந்திருநாமத்தையுடையவர்,—பரன் என்று இனம் புத்தேள் கை தொழு சங்கம் காதர் - (பசுக்கட்கு) மேலாகிய பதியென்று தொகுதியாகிய தேவர்கள் கைதொழும் சங்கக்குண்டலமணிந்த திருச்செவிகளையுடைய சிவபெருமான்,— அன்பர்க்கு இனியர் - தம்மன்பர்க்கினியவர்,—அல்லார்க்கு கசந்தவர்-அன்பரல்லாதவர்க்கு இனியராகாதவர். எ-று. (கO)

சந்தங்கமழுங்கலாவகையன்பர்க்குத்தாநடந்தோர்
சந்தங்கமழும்புலியூரர்வெற்பிலென்சாந்தணிவா
சந்தங்கமழுந்தணிமுலைதோய்மைந்தரைமறந்த
சந்தங்கமழும்படிகொய்திம்மையறணிவதின்றே.

(இ-ள்.) அன்பர்க்கு அங்கம் அழுங்கலாவகை தாம் சந்து நடந்தோர் - தம்மெய்யன்பராகிய சுந்தரமூர்த்திநாயனருக்குத் திருமேனிவருந்தாமைப் பொருட்டுப் (பரவையாரிடத்துத்) தாமே தூதுசென்றவரும்,—புலியூரார் சந்தம் கமழும் வெற்பில் - புலியூரையுடையவருமாகிய சிவபெருமா

னது சந்தனமரம் (நறுமணங்) கமழுகின்றமலையின்கண்,—சாந்து அணி வாசம் அழுந்து தங்கம் என் அணிமுலை தோய் மைந்தரை மறந்து - கலவைகளையணிந்த பரிமளமும் (இரத்தினங்கள்) பதிக்கப்பெற்ற மாற்றுயர்ந்த பொன்னுபரணமும் (பொருந்திய) எனதழகிய தனங்களைப்புணர்ந்த ஆடவரை மறந்துவிட்டு,—அசம் கம் அழும்படி கொய்து இம் மையல் தணிவது இன்று - ஆட்டினது தலையை அஃதழும்படி அரிவதினால் இம்மயக்கஞ் (சிறிதுந்)தெளிவதின்று. எ-று. தம் சாரியை. [வெறிவிலக்கு.] ()

மையலங்காரம்பயில்கண்டர்வண்புலியூரர்வைத்த
மையலங்காரம்பமாகிப்பெருகிவரக்குளிரா
மையலங்காரம்பகைத்திடவாடைவருத்திடத்திண்
மையலங்காரம்படரவெவ்வாறுயிர்வாழ்பரிசே.

(இ-ள்.) மை அலங்காரம் பயில் கண்டர் - ஆலாகலம் அழகுபொருந்துந் திருக்கழுத்தையுடையவராகிய,— வண் புலியூரர் வைத்த மையல் - வளவியபுலியூரரிடத்துவைத்த மயக்கமானது,—அங்கு ஆரம்பமாகிப் பெருகி வர - (அவரெம்மைக்கலந்த) அவ்விடத்தே (அப்பொழுது)தொடங்கிப் (படி முறையே) பெருகிவருதலால்,—அலங்கு ஆரம் குளிராமைப் பகைத்திட - விளங்குகின்ற முத்துமாலைகள் குளிராது (வெம்மைகான்று) பகைக்க,—வாடை வருத்திட - வடகாற்றுவருத்த,—கார் அம்பு அடரகரியசமுத்திரம்பொர,—திண்மை அலம் - (இவைகளை அவர் வருந்துனையும்பொறுக்குஞ்)சத்தியற்றயாம் - உயிர் வாழ் பரிசு எவ் ஆறு - உயிர்வாழுந்தன்மை எப்படி (க்கூடும்). எ-று. பாங்கியே நீ கூறு என்பது எஞ்சிநின்றது. முதலடியில் மை ஆகுபெயர். புலியூரர் வைத்த என்புழி வழாவது விகாரத்தாற்றொக்கது. [காமமிக்ககழிபடர்கிளவி] (கஉ)

பரிசனவேதியர்சூழ்புலியூரர்பத்தர்க்கினிய
பரிசனவேதியர்பாதவமேவுமனேபவனும்
பரிசனவேதிப்படைமன்னர்நின்முலைப்பாரவிலைப்
பரிசநவேதிணிபொன்கொடுவந்தனர்பான்மொழியே.

(இ-ள்.) பரிசன வேதியர் சூழ் புலியூரர் - தமது சுற்றமாகிய தில்லைவாழந்தணர்கள் சூழப்பெறும் புலியூரையுடையவரும்,—பத்தர்க்கு இனிய பரிசன வேதியர் - தம்மன்பருக்கு இனிய பரிசனவேதியாயுள்ளவருமாகிய சிவபெருமானது,—பாதவம் மேவு மனேபவன் ஆம் பரிசு அன எதிப்படை மன்னர் - மலையில் வசிக்கின்ற (புருடாகிருதிமுதலியவற்றான்) மன்மதனையொத்த இயல்பையும் அந்தவாட்போரையுமுடைய(நந்) தலைவர்,—நின்பாரமுலைவிலைப் பரிசம் திணி பொன் நவு கொடு வந்தனர் - நின

து பருத்தமுலைவிலைப்பரிசமாகத் திண்ணியபொன்னை மரக்கலத்திற் கொடுவந்தனர்,—பால் மொழியே - பால்போலுமினியசொற்களையுடைய தலைவியே. எ—று. அன்ன அன எனவும், நவ்வு நவு எனவும் நின்றன. ஏகாரம் இசைநிறை. பரிசனவேதி இரும்புமுதலிய லோகங்களைப் பரிசித்தவழிப் பொன்னாக்குவதோ ரிரதகுளிகை. [காதலன்முலைவிலைவிடுத்தமை பாங்கிகாதலிக்குணர்த்தல்.] (கங)

பானகந்தந்தம்வலிகெடவோங்கிப்பணைத்ததிரும்
பானகந்தந்தம்பயில்கரித்தோலினன்பாவவிடாய்ப்
பானகந்தந்தனநேரிடைபங்கினன்பத்தரைவைப்
பானகந்தந்தபுலியூரெனிற்கெடும்பாசமன்றே.

(இ-ள்.) பால் நகம் தந்தம் வலி கெட ஓங்கிப் பணைத்து அதிரும் பால் நகம் தந்தம் பயில் கரித்தோலினன் - திக்குமலைகள் தத்தம் வலிமை குன்றும்படி யுயர்ந்து பருத்துப் பிளிறிவந்த பால்போலும் வெண்மையாகிய நகமும் கொம்பும்பொருந்திய யானையினது தோலைப் (போர்வையாக)வுடையவரும்,—பாவ விடாய்ப் பானகம் - (பாவிகளது) பாவமாகிய தாகத்திற்கு (அதுதணிக்கும்) பானகமாயுள்ளவரும்,—தந்து அன நேர் இடை பங்கினன்- நூல்போலும் நேரிய இடையினையுடைய உமாதேவிபாகருமாகிய சிவபெருமான்,—பத்தரை வைப்பான் அகம் தந்த புலியூர் எனில் – தம் மெய்யன்பரை இருத்தற்கு இடங்கொடுத்த புலியூரென்றுதுதிக்கில்,--பாசம் கெடும் – (ஆன்மாவைப்பந்தித்த) பஞ்சபாசங்களுஞ் (சேரக்) கெடும் எ-று. அன்று ஏ அசை. முதலடியிற் பால்– திக்கு. (கச)

சமன்படரால்வருவேதனைதீரத்தகுவினைகள்
சமன்படராசததாமதசாத்துவிகங்கெடப்பா
சமன்படரானதறப்புலியூரிற்றகையுளவா
சமன்படராநின்றவல்லிபங்காகதிதந்தருளே.

(இ-ள்.) சமன் படரால் வரு வேதனை தீர - (மரணகாலத்தில்)யமதூதுவரால் வருந்துன்பங்கள் ஒழியவும்,—தகு வினைகள் சமன்பட - பொருந்திய நல்வினையினால் வருமின்பத்திலுந் தீவினையினால்வருந்துன்பத்திலுஞ் சமபுத்திபண்ணவும்,—சாத்துவிகம் இராசதம் தாமதம் கெட - சாத்துவிகம் இராசதம் தாமதமாகிய முக்குணங்களும் நசிக்கவும், பாசம் மன் படரானது அற – பாசத்தால் வருந்துன்பம் பற்றறவும்,—தகை உள புலியூரில் வாச மன் - பெருமைபொருந்திய புலியூரில் (விசேடமாக) வசிக்குந்தலைவரே,—படரா நின்ற வல்லி பங்கா – படருகின்ற காம வல்லிபோலும் உமாதேவிபாகரே,—தந்து கதி அருள் - தமியேற்கு (வரந்) தந்து

(பின்) முத்தியை ஈந்தருளும். எ—று. பண்ணவும் நசிக்கவும் வரந்தந்து, ஒழியவும் பற்றறவும் முத்தியை ஈந்தருளும் எனக்கூட்டுக. (௧௫)

கதிதந்தருவிழந்தோடும்பர்க்காய்ப்புரங்காய்ந்தவின்ன
கதிதந்தருகயிலைக்கிறைவாகருவித்திருமு
கதிதந்தருசொல்லிடையாள்பங்காகமலம்பணைச்ச
கதிதந்தருநறவார்புலியூரவெற்காத்தருளே.

(இ-ள்.) தம் கதி தரு இழந்து ஒடு உம்பர்க்காய்ப் புரம் காய்ந்த வில் நக - தமதுசுவர்க்கபதவியையும் பஞ்சதருக்களையுமிழந்து ஒடியதேவர்கள்பொருட்டு முப்புரங்களைத் தகித்த மேருமலையாகிய வில்லையுடையவரே,—திதம் தரு கயிலைக்கு இறைவா-நிலைபெற்றகைலாசகிரிக்குத்தலைவரே,—திரு மகதிக் கருவி தந்து அரு சொல் இடையாள் பங்கா-அழகிய மகதியாழிசையையும் நூலையும்போலும் அரியசொல்லையும் இடையையுமுடைய உமாதேவிபாகரே,—கமலம் பணைச்சகதி நறவு தந்து ஆர் அரு புலியூர - தாமரைப்பூக்கள் வயல்களிற் சேறு (பொருந்தும்படி) தம்மிடத்துள்ளதேனைச் சொரிந்து நிறையப்பெற்ற விசிட்டமாகிய புலியூரையுடையவரே,—என் காத்தருள் - தேவரீர் தமியேனைப் பாதுகாத்தருளும்.எ-று. யாழ் - ஆகுபெயர். (௧௬)

காப்பதிற்றாறுயிர்யாமெனநீநற்கலைகளடங்
காப்பதிற்றாறுசதுவிதங்காட்டவுங்காண்கிலனற்
காப்பதிற்றாறுவளவயன்முக்கனிக்கட்கஞ்சமங்
காப்பதிற்றாறுகுக்கும்புலியூர்க்கனகாலயனே.

(இ-ள்.) யாம் உயிர் காப்பது ஆறு இற்று என -"நாமுயிர்களைக்காக்கு நெறி இத்தன்மைத்து" என்று,—நீ அடங்கா நல் பதிற்றாறு சதுவிதம் கலைகள் காட்டவும் - தேவரீர் பரந்த நல்ல அறுபத்துநான்கு பகுதியவாகிய கலைகளைத் (தந்து) அறிவிக்கவும்,—அது காண்கிலன் - (தமியேன்) அதை அறியப்பெற்றிலேன்,—நல் முக்கனிக் காப்பு இற்றுக் கள் ஆறு - நல்ல முக்கனிகளின் காம்பு பதனழிந்து (பெருகும்) மதுவெள்ளத்தை;—வள வயல் அங்காப்பது கஞ்சம் இல் தாறு உகுக்கும் - வளவிய வயல்களிற்பொருந்திய வாய்மலர்ந்தனவாகிய தாமரைப்பூக்களிற் குலைகள் சொரியாநிற்கும்,—புலியூர்க் கனக ஆலயனே - புலியூரிலுள்ள கனகசபையாகிய ஆலயத்தில் வீற்றிருப்பவரே. எ-று. மூன்றாமடியிற் காம்பு காப்பு என வலிந்து நின்றது. ஈற்றடியில் அங்காப்பது - அங்காத்தலைச்செய்வது; சாதியொருமை. (௧௭)

கனகமலைச்சிலைவேணிப்பிரானைக்கயல்வயற்கோ
கனகமலைச்சிலைக்காவியிற்பாயுங்கவின்கொள்வள்ளைக்
கனகமலைச்சிலைமார்பனும்போற்றற்கரும்புலியூர்க்
கனகமலைச்சிலைவாணனைப்போற்றிற்கதியவர்க்கே.

(இ-ள்.) கனம் கம் அலை சிலை வேணிப் பிரானை - நன்குமதிக்கப்படுங் (கங்கா) சலத்தினது திரையொலிக்குஞ் சடையையுடைய எப்பொருட்குமிறைவரும்,—கயல் வயல் கோகனகம் அலைச்சு இலைக் காவியில் பாயும் கவின்கொள் - (வாவிகளிற்பயிலும்) கயன்மற்சங்கள் வயல்களினிற்குந் தாமரைகளையலைத்து (மருங்கிலுள்ள) இலைகளையுடைய கருங்குவளைகளிற்பாயுமழகுபொருந்திய,—வள்ளைக் கனம் கமலை சிலை மார்பனும் போற்றற்கு அரும் - வள்ளையிலைபோலுங் காதுகளையுடைய இலக்குமி (வசிக்கும்) மலைபோலும் மார்பையுடைய விஷ்ணுவுந் துதித்தற்கரிய,—கனக மலைச் சிலைப் புலியூர் வாணனைப் போற்றில் – பொன்மயமாகிய மேருமலையை வில்லாகவுடைய புலியூரில் வாழுபவருமாகிய சிவபெருமானைத் துதிக்கில்,—அவர்க்கே கதி - அவர்களுக்கே முத்தி (சித்திக்கும்). எ-று. கொ[illegible] புலியூர் என வியையும். வள்ளை ஆகுபெயர். மூன்றுமடியிற் கன்னம் கனம் என நின்றது. (கஅ)

அவரஞ்சிவந்தயிநாகாரிவாகனராகத்தில்வா
ழவரஞ்சிவந்தடிபோற்றுமைபாகனகக்கருமை
யவரஞ்சிவந்தருமம்புலியூரனெனக்கருளி
யவரஞ்சிவந்தபதம்பெறலாகுமைந்தக்கரமே.

(இ-ள்.) வந்து அயில் நாக அரி வாகனர் ஆகத்தில் வாழ் அவரஞ்சி அவர் - வாயுவையுண்கின்ற பாம்புக்குப் பகையாகிய கலுழனை வாகனமாகவுடைய விஷ்ணுவினது மார்பில் வாழுகின்ற (சேட்டைக்குக்) கனிட்டையாகிய அந்த இலக்குமியானவர்,—அஞ்சி வந்து அடி போற்று உமை பாகன் – அச்சுற்றுவந்து திருவடிகளைத் துதிக்கப்பெறும் உமையம்மையை வாமபாகத்திலுடையவரும்,— அகம் கரும் ஐபம் அரம் - (தம்மடியவரது) பாவமாகிய கரிய இரும்பைத் (தேய்த்தற்கு) அரமாயுள்ளவரும்,—சிவம் தரும் அம் புலியூரன் - (சகல) நன்மைகளும் பொருந்தும் அழகிய புலியூரையுடையவருமாகிய சிவபெருமான்,—எனக்கு அருளிய வரம் - தமியேனுக்குத் தந்தருளியவரம் (யாதெனில்),—சிவந்த பதம் பெறல் ஆகும் ஐந்து அக்கரம் - (தமது) சிவந்ததிருவடிகளை (என்போலிகளும்) பெறுதற்குக்(கருவி) ஆகிய ஸ்ரீபஞ்சாக்கரோபதேசமேயாம். எ-று. அவரஞ்சி என்பது அபரம் என்னும் முதனிலையும், பெண்பாலிகர விறுதிநிலையும், சகரவொ

ற்றிடைநிலையும், திரிதல் விகாரமும் பெற்று முடிந்த பெயர்ப்பகுபதம். அம்முதனிலைக்குப் பொருள் - பின். அது பகர வகர ஏகீபாவநயம்பற்றி அவரம் என நின்றது. எனவே அவரஞ்சி பின்னை என்றதாயிற்று. பின்னை - இலக்குமி. இனிப் பொன் எனப்பொருள்படும் அபரஞ்சி மேலை ஏகீபாவநயம்பற்றி அவரஞ்சி என நின்றதெனக்கொண்டு, அஃது ஈண்டு இலக்குமியை யுணர்த்திற்றெனப் பொருளுரைத்தலுமொன்று. இன்னும் அபிரமாவும், வரம் விருப்பமும், சீ சரசுவதியும் எனப் பொருள்படுதலின், அதற்குப் பிரமா விரும்புஞ் சரசுவதி எனப்பொருளுரைத்தலுமாம். இப்பொருட்குச் சீ சி எனக்குறுகி நின்றதாக வுரைக்க. அயம் ஐயம் எனப் போலியாயிற்று. ஏகீபாவம் - ஒருமைப்பாவனை. (கக)

கரமஞ்சரிதருவென்னற்கநீசரைக்கட்டுகட்சீ
கரமஞ்சரிதருமம்புலியூரற்கியமன்கடிந
கரமஞ்சரிதருமாயைநெஞ்சேநங்கருவினையக்
கரமஞ்சரிதருமென்றேமொழிககனவிலுமே.

(இ-ள்.) நீசரைக் கரம் மஞ்சு அரி தரு என்னற்க - [குரு லிங்க சங்கம பத்தி யில்லாத] கீழ்மக்களைப் [பொருட்பேறுமுதலியகருதித்] தங்கைகள் [கொடையான்] மேகமும் இந்திரனது பஞ்சதருவு மென்று [புனைந்து] பாடாதொழிக,—புலியூரற்குக் கள் சீகர மஞ்சரி கட்டு - புலியூரில்வீற்றிருக்குஞ் சிவபெருமானுக்குச் சாத்தும்பொருட்டுத் தேன்றுளிக்கும் புஷ்பமாலைகளைக் கட்டுவாயாக,—தருமம் - [இது] சிவதருமமாகும்,—இயமன் கடி நகரம் அஞ்சு - [நாமிறந்தவழி] யமனது காவல் பொருந்திய யமனி என்னும் நகரிற் புகுவதற்கஞ்சி [யொழுகு] வாயாக,—நெஞ்சே அரு மாயை அரிது - [இங்ஙனஞ்செய்யின்] மனமே அருவமாகியமாயாமலம் [எம்மைப்பொருந்துவ] தின்று,—அஞ்சு அக்கரம் நம் கருவினை அரிதரும் என்றே கனவிலும் மொழிக - [அன்றியும்] ஸ்ரீ பஞ்சாக்கரமாகிய சிவமூலமந்திரம் நமதுபிறவியைத் [தப்பாது] அரியுமென்று துணிந்து [அம்மகாமந்திரத்தைச்] சொப்பனத்திலும் செபிக்க. எ-று. (உ0)

கனவைப்படைத்தணத்தார்மூவர்பாடல்களித்திரண்டு
கனவைப்படைத்தவர்தென்புலியூர்வரைக்காதலரைக்
கனவைப்படைத்தணையத்துயில்காண்கிலன்கங்குலும்புக்
கனவைப்படைத்தமலர்க்கோலிற்பாங்கியெற்கண்டிக்கவே.

(இ-ள்.) கன வை படைத் தணத்தார் - கனத்த கூரிய மழுப்படையையுடையவரும்,—மூவர் பாடல் களித்து இரண்டு கன வைப்பு அடைத்தவர் - (சிவஞானச் செல்வர்களாகிய) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தி

ருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னுஞ் சமயகுரவர்மூவர் திருவாய்மலர்ந்தருளிய (பவரோக நிர்மூல அருமருந்தாகிய) தேவாரத்திருப்பதிகங்களை உவந்து தம்முடைய இரண்டுதிருச்செவிகளில் அமைத்தருளினவருமாகிய சிவபிரானது,—தென் புலியூர் வரைக் காதலரை - தெற்கின்கட்பொருந்திய புலியூரிலுள்ள மலையில் வசிக்கு மெனதன்பரை,—கனவைப் படைத்து அணையத் துயில் காண்கிலன் - கனவைப்பெற்றாயினும் அதன்கட்டழுவுதற்குக் கண்டுயில் வரப்பெற்றிலேன்,—கங்குலும் புக்கன - இராக்காலமுங் கழிந்தது,—தைத்த மலர்க் கோலின் பாங்கி கண்டிக்க என் வைப்பள் - (இங்ஙனம்) பட்டமலரம்புகட்குப்போல வருந்தும்படி தோழிகண்டித்துரைக்க என்னைத் [தனக்கெதிர்முகமாக] இருத்துவள் (இதற்கினி யாதுசெய்வேன்). எ-று. தண்ணம் தணம் எனநின்றது. தென் புலியூர் - அழகிய புலியூர் எனினு மமையும். புக்கது புக்கன என ஒருமைப்பன்மை மயக்கம். கனவைப்பு கன்னயாகிய இடம். [கண்படை பெறாது கங்குனோந்திரங்கல்.] (உக)

கண்டலராகமுடிபுனையானைக்கருதினரா
கண்டலராகவைக்கும்புலியூரனைக்காதைமுகங்
கண்டலராகமதாடகமாமெழிற்காரிகையாள்
கண்டலராகமிகுந்தனள்கேட்டகணத்தினிலே.

(இ-ள்.) கண்டல் அராக முடி புனையானை - [பொய்க்கரிகூறிய] தாழம்பூவைச் சிவந்தசடாமுடியிற் றரியாதவரும்,—கருதினர் ஆகண்டலர் ஆக வைக்கும் புலியூரனை - [தம்மைத்] தியானித்த அன்பரை இந்திரராக (மேற்கதியில்) இருத்தும் புலியூருமாகிய தலைவரை,—காதை முகம் ஆகம் கண்டு மது அலர் ஆடகம் ஆம் எழில் காரிகையாள் - சொல்லும் முகமும் மேனியும் [முறையே] கற்கண்டையும் தேன்பொருந்திய செந்தாமரைமலரையும் பொன்னையும் போலும் அழகையுடைய தலைவி,— கண்டு அல கேட்ட கணத்தில் (இ) ராகம் மிகுந்தனள் - கண்டன்று கேட்டமாத்திரையிலே அநுராகமிகுந்தனள். எ-று. கண்டல் ஆகுபெயர். தலைவி தலைவரைக் கண்டன்று கேட்டமாத்திரையிலே அநுராகம் மிகுந்தனளெனக்கூட்டுக. [காதற்சிறப்புரைத்தல்.] (உஉ)

கணத்தினிலேற்றுவருமன்புசெய்யிற்கருதுசிவ
கணத்தினிலேற்றுநினைமனமேசொற்கதிர்செய்வயற்
கணத்தினிலேற்றுக்கயல்பாய்கவின்புலியூரரைப்பொக்
கணத்தினிலேற்றுத்திரிந்தாரைநீதியிற்காதலித்தே.

(இ-ள்.) கணத்தினில் ஏற்று வரும் அன்பு செய்யில் - ஒருகணமேனும் [மனத்தோடு] இயைந்தெழுஞ் சிரத்தையன்பு செயப்பெறி

ல்,—கருது சிவ கணத்தினில் ஏற்றும் - [எம்மை] நன்கு மதிக்கப்படுஞ் சிவகணங்களோடிருத்துவர்,—மனமே நினை - [ஆதலான்] மனமே அவரைத்தியானஞ்செய்வாயாக,—சொல் கதிர் செய் வயற் கண் நத்தினில் ஏற்றுக் கயல் பாய் கவின் புலியூரரை - நெற்பயிர்கள் கதிர்களையீனும் வயலிற் சஞ்சரிக்கும் [பெண்] சங்கில் ஆண்கயல்பாயு மழகிய புலியூரிலெழுந்தருளி யிருப்பவரும்,—பொக்கணத்தினில் ஏற்றுத் திரிந்தாரை - [பிக்ஷாடன மூர்த்தியாகிப்] பொக்கணத்தில் யாசித்துத் திரிந்தவருமாகிய சிவபெருமானை,—நீதியில் காதலித்து - கிரமப்படி விரும்பி. எ-று. மனமே ஒரு கணமேனுஞ் சிரத்தையன்பு செயப்பெறில் எம்மைச் சிவகணங்களோடிருத்துவர், ஆகலாற் சிவபெருமானைக் கிரமப்படி விரும்பித் தியானஞ்செய்யெனக் கூட்டுக. பொக்கணம் - பிக்ஷைப்பை. (உகூ)

திரியும்பணியுமிதழியுமாருஞ்சிறந்திடுபா
திரியும்பணியும்புனைபுலியூரர்சிவார்ச்சனைப்பத்
திரியும்பணியுந்தொழிலும்விடார்க்குச்சிறந்தநெய்தோய்
திரியும்பணியுந்தியவிளக்காஞ்சிவஞானமதே.

(இ-ள்.) திரியும் பணியும் இதழியும் ஆரும் சிறந்திடு பாதிரியும் பணியும் புனை புலியூரர் - நகருகின்ற பாம்பையும் கொன்றைமாலையையும் ஆத்திப்பூவையும் சிறந்த பாதிரிமலரையும் ஆபரணங்களையுந் தரித்த புலியூரரது,—சிவ அர்ச்சனைப் பத்திரியும் பணியுந் தொழிலும் விடார்க்கு - சிவபூசைக்கு [வேண்டப்படும்] பத்திர [புஷ்பமுதலிய உபரகரணங்களை]யும் வணங்குந்தொழிலையுங் கைவிடாத சிவபத்தர்களுக்கு,—திரியும் பணி சிறந்த நெய் தோய் உந்திய விளக்கு சிவஞானம் ஆம் - திரியையுந்திரித்து நல்ல நெய்யிற்றோய்த்துக் [கொளுவித்] தூண்டிய தீபம்போலச் சிவஞானம் பிரகாசிக்கும். எ—று. ஈற்றடியிற் பண்ணி பணி என நின்றது. சிவஞானம் அது சிவஞானமாகிய அது. (உ௪)

அதரங்கரங்களிலவமங்காந்தளழகுறத்தோ
யதரங்கரங்கவர்பூங்குழன்மாதுருவாய்மருவி
யதரங்கரங்கன்பணிபுலியூரனென்றுற்பிறவி
யதரங்கரங்கவடைத்தமுதாக்குமருள்வருமே.

(இ-ள்.) அதரம் கரங்கள் இலவம் அம் காந்தள் அழகு உற - வாயுதடுகளும் கைகளும் [முறையே] இலவமலர் செங்காந்தட்பூ என்பவற்றினழகுபொருந்த,—தோயதரம் கரம் கவர் பூ குழல் மாது உருவாய் மருவிய - முகிலை இறைகவரும் பூவைமுடித்தகூந்தலையுடைய மோகினிவடிவா

இத் தழுவிய,—தரங்க [அ] ரங்கன் பணி புலியூரன் என்றால் - திரைமறி கின்ற ஆற்றிடைக்குறையாகிய சீரங்கத்தில் வசிக்குந் திருமால் வணங்கு கின்ற புலியூரில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானென்று [ஒருகாற்] றுதித்தால்,—பிறவி அதர் அங்கு அரங்க அடைத்து அமுது ஆக்கும் அருள் வரும் - [அவர்க்குப்] பிறவி [வரும்] நெறியை அங்கே முழுவதுமடைத்து முத்தியையுண்டாக்குந் திருவருள்பதியும். எ-று. இலவம் காந்தள் என்பன ஆகுபெயர். தோயதரம் சலதரம். (உரு)

வரவந்தகாரம்பயில்கண்டர்பூமகண்மார்பிடங்க
வரவந்தகாரம்புகொண்டிகல்வாட்டிமகிழ்ந்தபுங்க
வரவந்தகாரம்புலியூரர்மன்னினர்மற்றென்றன்மேல்
வரவந்தகாரமயமின்றுனக்கேவரிலந்தரமே.

(இ-ள்.) வரம் பயில் அந்தகாரம் கண்டர் - மேன்மைபொருந்திய இருள்போலுங் கரிய திருக்கண்டத்தையுடையவரும்,—பூமகள் மார்பு இடம் கவர வந்த கார் அம்பு கொண்டு இகல் வாட்டி மகிழ்ந்த புங்கவர் - இலக்குமி மார்பை யுறைவிடமாகக் கவரப்பெற்ற கரிய விஷ்ணுவாகிய அம்பினாலே மாறுபட்ட அசுரரைவென்று [சுரரை] யுவந்த மகாதேவரும்,—அவம் தகார் - பயனில் கிருத்தியங்களிற் [றிருவுளம்] பொருந்ாதவரும்,—அம் புலியூரர் மன்னினர் - அழகிய புலியூரருமாகிய சிவபெருமான் [என்னிடத்து] நிலைபெற்றிருக்கின்றனர்,—மற்று என்மேல் வரவு அந்தகா [இ] ரமியம் இன்று - அவ்வியல்பையுடைய என்மேல் [உயிர்கவர] வருதற்கு அந்தகனே உனக்குப் பூரணவிருப்பமுண்டாகாது,—வரில் உனக்கே அந்தரம்- [ஒருபோது] வரில் உனக்கே கேடு(சம்பவிக்கும்) எ-று. கவரவந்த என்பதனைக் கவர்ந்த என ஒருசொன்னீர்மைத்தாகக்கொள்க. தன் சாரியை. (உசு)

அந்தரங்கம்பகர்ந்தாயிழையார்செய்யதிமயலா
மந்தரங்கம்படுவேலையில்வீழ்ந்திங்கழிகுவனே
வந்தரங்கம்பயின்மாலயன்போற்றற்கரும்புலியூ
ரந்தரங்கம்பயின்றாடியபாதவமாதங்கனே.

(இ-ள்.) அந்தரங்கம் பகர்ந்து ஆயிழையார் செய் அதி மயல் ஆம் - இரகசியவார்த்தைகளைச்சொல்லிப் பெண்கள்செய்கின்ற மிக்கமயக்கத்தாலாகிய,—அம் தரங்கம் படு வேலையில் வீழ்ந்து இங்கு அழிகுவனே - அழகிய திரைமறிகின்ற [காம] சமுத்திரத்தின்கண் வீழ்ந்து தமியேனிங்கே கெடக்கடவேனோ?,—அந்த (அ) ரங்கம் பயில் மால் அயன் போற்றற்கு அரும் புலியூர் - அந்தத்திருவரங்கத்தில் வசிக்கும் விஷ்ணுவும் பிரமா

வுந் (தன்பெருமை) கூறுதற்கரிய புலியூரிலுள்ள,—அந்தம் அரங்கு பயின்று ஆடிய பாத - அழகிய கனகசபையிலே (பதஞ்சலிமகாமுனிவருக்கு) வாக்குத்தத்தஞ்செய்து, (அவ்வாறே) அநவரததாண்டவஞ் செய்தருளுகின்ற திருவடிகளையுடையவரே,—அ மாது அங்கனே - அந்தவுமாதேவி பொருந்திய திருமேனியையுடையவரே. எ-று. அம் மாது என விற்கற்பாலது அ மாது எனநின்றது. (உஎ)

மாதங்கங்கோடுவிற்றோடாக்கிவண்புலியூரின்மத
மாதங்கங்கோடுறப்பாய்ந்தவப்போதிவண்மாழ்குறவிம்
மாதங்கங்கோடுமருவியகுன்றிடைவந்தவரார்
மாதங்கங்கோடுமுன்வந்தளித்தானொருமன்னவனே.

(இ-ள்.) மா தங்கம் கோடு வில் தோடு ஆக்கி வண் புலியூரில் - மாற்றுயர்ந்த பொன்மயமாகிய மேருவையுஞ் சங்கையும் (முறையே) வில்லுங்காதணியுமாக்கிய சிவபெருமானது வளவியபுலியூரில்,—மத மாதங்கம் கோடு உறப் பாய்ந்த அப்போது இவள் மாழ்குற - மதத்தையுடைய ஒரு யானையானது கொம்பினாலே குற்றும்படி பாய்ந்துவந்த அப்பொழுது இம் மாதுமயங்கிவிட,—விம்மா தங்கு அங்கு ஓடும் அருவிய குன்றிடை வந்தவர் ஆர் - ஒலித்துக்கொண்டுபொருந்திய அவ்விடத்துப்பாயு மருவியையுடைய குன்றின்கண் வந்துகாத்தவரிவர்தாமோ,—மாது அங்கம் கோடு முன் ஒரு மன்னவன் வந்து அளித்தான் - மயங்கிய விம்மாது (குற்றுண்டு) சரீரங் (கீழே) விழுவதற்குமுன் ஒருதலைமகன் வந்துகாத்தனன். எ-று. அவனே இவட்கு நாயகன் என்பது குறிப்பெச்சம். ஆக்கி என்பது பெயர். புலியூரிற் குன்றெனவியையும். செய்யுளாகலிற் சுட்டுமுன் வந்தது. [பாங்கியறத்தொடுநிற்றல்.] (உஅ)

மன்னுவலையுடைத்தோற்றந்தபநின்புகழ்மறவா
மன்னுவலையுரைத்துப்பெறுவேன்கொன்மதிமுடியா
மன்னுவலையுறுதீவிற்சிறந்திடும்வண்புலியூர்
மன்னுவலையுறழ்கண்டாவுன்றூண்மலர்த்தாமரையே.

(இ-ள்.) ஆவலை உடை மன் தோற்றம் தப - அவாவுடைமையான் வரும் பிறவி கெடும் பொருட்டு,—நின் புகழ் மறவாமல் நா வல் உரைத்துப் பெறுவேன் கொல் - தேவரீருடைய திருப்புகழை (ஒருபொழுதும்) மறவாமல் நாவினாலே வல்லவாறு துதித்துப் பெறுவேனோ,—மதி முடியா - பாலசந்திரன்றவழுந் திருமுடியையுடையவரே,—மன் ஐ உறு நாவல் தீவில் சிறந்திடும் வண் புலியூர் மன்னு - (மற்றையதீபங்களில்) மிகுந்தவழகு

பொருந்திய சம்புத்தீபத்துள்ள (சிவக்ஷேத்திரங்களுக்குட்) சிறந்தவளவிய புலியூரிலெழுந்தருளியிருக்குந் தலைவரே,—அலை உறழ் கண்டா - இருளையும் வென்றகரிய திருக்கழுத்தையுடையவரே,—நின் தாமரை மலர்த் தாள் - தேவரீருடைய செந்தாமரைமலர்போலுந் திருவடிகளை. எ-று. இரண்டாமடியில் ஐ சாரியை. நான்காமடியிற் குறிற்கீழொற்று உயிர்வர இரட்டாது நின்றது. புலியூரிலெழுந்தருளியிருக்குந் தலைவரே; பிறவிகெடும்பொருட்டு, முடியையுடையவரே, கழுத்தையுடையவரே, (என்று) தேவரீருடைய திருப்புகழை வல்லவாறு துதித்துத் திருவடிகளைப் பெறுவேனே எனக்கூட்டுக. (உகூ)

தாமரைப்பாலரும்புல்லுரிசாத்தினர்தங்குகரத்
தாமரைப்பாலத்தர்தென்புலியூர்வரைத்தண்டுளபத்
தாமரைப்பாலரையன்னீருமாதுந்தசையொடிங்கே
தாமரைப்பாலருந்தித்தங்குமேகத்தடமரிதே.

(இ-ள்.) தாம் அரும் அரைப் பால் புல் உரி சாத்தினர்—தாமரிய திருவரையின்கண்ணே புலித்தோலையுடுத்தவரும்,—கரத் தாமரைத் தங்கு பாலத்தர்— கையாகிய தாமரைமலரிற்றங்கிய மழுவையுடையவருமாகிய சிவபெருமானது,—தென் புலியூர் வரை - தெற்கின்கணுள்ள புலியூர் வரையில் - தண் துளபத் தாமரை பாலரை அன் நீரும் மாதும் (காத்தற்றொழிலாற்) குளிர்ந்த துளசிமாலையைத்தரித்த விஷ்ணுவையுங் கட்டழகால்] அவ்விஷ்ணுவுக்குப் புதல்வனாகிய மன்மதனையுமொத்த நீரும் இப்பெண்ணும்,— தசை ஒடு தாம் மரைப் பால் அருந்தி இங்குத் தங்கும் - (மான்)நசையோடு தாவுகின்ற மரைப்பாலையுண்டு (இவ்விரவில்) இங்கே தங்குங்கள்,—ஏகத் தடம் அரிது - அப்பாற்செல்லுதற்கு வழியரிது.எ-று. உவமவுருபீறு குறைந்தது. ஈற்றடியில் தாவும் என்பது தாம் எனநின்றது. தசை மான்றசை என்பது "வலைப்பெய்தமான்றசைதேன்றோய்த்தருந்திமரைமுலைப்பா, லுலைப்பெய்தவார்தினைமூரலுமுண்டு" என்பதனுனும் அறிக. [விருந்துவிலக்கல்.] (௩0)

தடங்கடிவேங்கைநிழலொருவித்தவிக்கும்பெரும்பாந்
தடங்கடிவேங்கையுங்காட்டிடில்வேங்கடஞ்சார்ந்தகடி
தடங்கடிவேங்கையுரியார்புலியூரிற்றைபல்கஞ்சத்
தடங்கடிவேங்கையலர்வயலாகசரிப்புண்கிலே.

(இ-ள்.) பெரும் பாந்தள் தடம் கடி வேங்கை நிழல் ஒருவித் தவிக்கும் - (தன்கட்பயிலும்) பெரும்பாம்புகளும் மலைப்பக்கத்திலுள்ள மணம் பொருந்திய வேங்கைமரநிழலை நீங்கியவழி (வெம்மைபொறாது) துடிக்கு

ம்,—தங்கு அடி வேம் - (தன்கட்) சென்றுசார்வோரதடிகளும்வேகும்,—காட்டிடில் கையும் வேம் கடம் - (தன்னைச்) சுட்டிக்காட்டில் அக்கையும் வேகும் (அத்தன்மைத்தாகிய கொடிய) சுரமானது,—சார்ந்த கடி தடம் கடி வேங்கை உரியார் புலியூரில் தையல் சரிப்பு உண்கில் - பொருந்திய திருவரையில்அஞ்சத்தகும் புலியினது தோலையுடுத்த சிவபெருமானது புலியூரில்வசிக்கும் நம்புதல்வி நடக்கப்பெறின்,—கஞ்சத் தடம் கடி வேங்கை அலர் வயல் ஆக - தாமரைப்பொய்கை சிறந்தபொன்போலுந் தாதை இறைக்கும் (தண்ணிய) மருதநிலமாகக்கடவது. எ—று. ஒருவினுலென்னும் வினையெச்சம் ஒருவியெனத்திரிந்து நின்றது. வேகும் என்பது இருவழியும் வேமெனநின்றது. ஈற்றடியில் வேங்கை ஆகுபெயர். கொடிய சுரமானது நம்புதல்விநடக்கப்பெறின், தண்ணியமருதநிலமாகக்கடவது எனக்கூட்டுக. [சுரந்தணிவித்தல்.] (௩௧)

புண்டரிகத்தர்தொழும்புலியூரர்வெண்பூதியணி
புண்டரிகத்தர்புயலார்பொருப்பினிற்போற்றுதிசைப்
புண்டரிகத்தரத்தார்நின்மறக்கவும்போதுமனம்
புண்டரிகத்தரவக்குயிலாலன்றுபோந்தவரே.

(இ-ள்.) புண்டரிகத்தர் தொழும் புலியூரர் - தாமரைமலரை யாசனமாகவுடைய பிரமாவும், நாபிக்கமலத்தையுடைய விஷ்ணுவும் வணங்கும் புலியூரையுடையவரும்,—வெண் பூதி அணி புண்டரி - வெண்மையாகிய விபூதியைத் திரிபுண்டரமாகத்தரித்தவரும்,—கத்தர் - விசுவகருத்தாவுமாகிய சிவபெருமானது,—புயல் ஆர் பொருப்பினில் - முகிலார்ந்தமலையின்கண்,—போற்று திசைப் புண்டரிகத் தரத்தார் - (உலகைக்) காக்குந் திக்கயங்களுட் புண்டரீகம் போலுந்தலைவர்,— து அரவக் குயிலால் மனம் புண் தரிக அன்று போந்தவர் - (தமதுபிரிதற்குறிப்பை அறிந்தமக்குப்) பகையாகிக் கூவுகின்ற குயிலினுலே மனம் புண்பட (அதனைத்தாமறிந்திருந்தும்) அன்று (எம்மைப்பிரிந்து) சென்றவன்கண்ணர் (ஆகலின்),—நின் மறக்கவும் போதும் - (இன்று) நின்னைமறந்திருக்கவுங் கூடும். எ-று. மூன்றாமடியிற் புண்டரீகம் புண்டரிகம் எனவும், நான்காமடியில் தூ து எனவுங் குறுகிநின்றன. இந்நான்காமடியிற் புண்டரிக்க என்பது புண்டரிக என நின்றது. [பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.] (௩௨)

தவராகமாகனகச்சிலைகொண்டவன்றந்தமெழுந்
தவராகமாகவரிதேடரியவன்றண்புலியூர்த்
தவராகமாகரமானேனெமக்கருட்டன்மைதந்து
தவராகமாகவொளியானைப்போற்றறகுதிநெஞ்சே.

(இ-ள்.) கனகம் மா சிலை தவர் ஆக கொண்டவன் - பொன்மயமாகிய மேருகிரியை வில்லாகக்கொண்டவரும்,—தந்தம் எழுந்த வராகம் ஆக அரி தேடு அரியவன் - கொம்புமுளைத்த பன்றியாக விஷ்ணுதேடிக் காணுதற்கரியவரும்,—தண் புலியூர் தவர் ஆகம் ஆகரம் ஆனோன் - தண்ணிய புலியூரையும் துறவிகளது இருதயத்தையுந் தமக்கு வாசஸ்தானமாகவுடையவருமாகிய சிவபெருமான்,—தன்மை அருள் தந்து எமக்கு உதவ - தமக்கு இயற்கையாகிய திருவருளை எமக்குத் தந்துபகரித்தற்பொருட்டு,—[இ]ராக மாகம் ஒளியானைப் போற்றல் தகுதி நெஞ்சே - செவ்வானம்போலுந் திருமேனிப் பிரகாசமுடைய அச்சிவபெருமானை வழிபடுதல் [எம்மாற்செய்யத்] தக்கது மனமே. எ-று. முதலடியில் மா நிறம். (௩௩)

குதிக்கும்புரையற்றபந்தெறிந்தோவண்கொழுங்கயல்கள்
குதிக்கும்புனல்குடைந்தோவிளநீருக்குங்கோட்டிணைத்த
குதிக்கும்புகறருகொங்கையென்வாட்டங்குணக்குன்றனான்
குதிக்கும்புகழ்பெறுதென்புலியூர்வரைக்கோமளமே.

(இ-ள்.) குதிக்கும் புரை அற்ற பந்து எறிந்தோ - [நின்] காற்குதிக்கும் நிகரற்ற பந்தை எறிந்து விளையாடுதலானோ,—வண் கொழும் கயல்கள் குதிக்கும் புனல் குடைந்தோ - அழகிய மதர்த்தகயன்மற்சங்கள் பாயுஞ்சுனையிற் சலக்கிரீடைசெய்தலானோ,—இள நீருக்கும் இணைக் கோட்டுக்கும் தகுதி புகல்தரு கொங்கை வாட்டம் என் - இளநீருக்கும் இரண்டியானைக்கொம்புக்கும் ஒப்புச்சொல்லத்தகும் நின் முலைகள் வாடுதற்குக்காரணம்யாது,—குணக் குன்றன் - குணமலையாகிய சிவபெருமானது,—நான்கு திக்கும் புகழ் பெறு தென் புலியூர் வரைக் கோமளமே - நான்குதிகந்தம்வரையும் புகழ்பொருந்தப்பெற்ற தெற்கின்கணுள்ள புலியூர்மலையில்வசிக்கும் இளமைச்செல்வியையுடைய [நந்] தலைவியே. எ-று. வாட்டம் ஈண்டுக் குறிப்புமொழியாய் விம்முதலை யுணர்த்தி நின்றது. [ஐயங்கரந்து தையலைவினாதல்] (௩௪)

வரையாவனலிபிவேதன்செய்யாதன்பர்மாட்டணுவாய்
வரையாவனலிபெண்ணாணயன்றாபவன்வண்புலியூர்
வரையாவனலிதரமன்னவாமெய்வருத்தமுமேறல்
வரையாவனலிகரியாநம்மாதைமணந்தருளே.

(இ-ள்) வரையா வனம் லிபி வேதன் செய்யாது - வினைப்பயன்களை] வரையறுத்து [எழுதிய] எழுத்தாகிய விதியை [மறித்தும்]பிரமா எழுதாவகை,—அன்பர் மாட்டு அணுவாய் வரையாவன் - தம் மெய்யன்பர் மாட்டணுவைப்போலத் தோன்றாதும் மலையைப்போலத் தோன்றியும் நி

ற்பவரும்,—ஆண் பெண் அலியாய் அன்று ஆபவன் - ஆண் பெண் அலியாகியும் அவையல்லவாகியு மிருப்பவருமாகிய சிவபெருமானது,— வண் புலியூர் வரை - வளவிய புலியூரின்கண்,—ஆவல் நலிதர மன்னவா மெய் வருத்தம் உறேல் - காம [நோய்] வருத்த நந்தலைவரே நீர் மேனிவருந்தாதொழிக,—வரையா - [என் சொல்லை] ஏற்றுக்கொண்டு,—அனலி கரி ஆ நம் மாதை மணந்தருள் - அக்கினிசான்றாக [இனிநீர்] நம்மாதை வரைந்துகொள்ளுக. எ-று. வன்னம் வனம் எனவும், ஆக ஆ எனவும் நின்றன. அணுவாய் வரையாதல் முறையே சாமானிய விசேடவியாபகமாதல். ஆக்கம் ஈண்டு உவமப்பொருள் குறித்துநின்றது. "ஆள்வாரிலிமாடாவேனோ" என்புழிப்போல. [வரைவு கடாதல்.] (௩டு)

மணக்குஞ்சரதத்திருமாற்கரியவர்வண்புலியூர்
மணக்குஞ்சரர்நம்மறந்தனர்சேவல்வரும்பெடையை
மணக்குஞ்சரந்தைபெடையாற்றப்புள்ளுறைவான்கழியே
மணக்குஞ்சரமெய்துவேளெதிர்ந்தானெங்ஙன்வாழ்குவமே.

(இ-ள்.) மண் நக்கும் சரதம் திருமாற்கு அரியவர் - மண்ணுலகையுண்ட மெய்யறிவையுடைய விஷ்ணுவுக்கு [அவ்வறிவுமயங்கியவழிக்] காணுதற்கரிய சிவபெருமானது,—வண் புலியூர் மணம் குஞ்சரர் நம் மறந்தனர் - வளவியபுலியூரின்கண் [அன்று] எம்மை [இனிது] கலந்தமதயானையானவர் [இன்று] எம்மை மறந்தனர் [போலும்],—சேவல் வரும் பெடையை மண பெடை குஞ்சு அரந்தை ஆற்ற - சேவல் தன்னை [அவாவி] வரும்பெடையை [உவப்பனசெய்து] புணைய, அது [அங்ஙனம் வருந்] தன்பார்ப்புக்களை [இரையருத்திப்பசி] வருத்தந் தணிக்க,—புள் உறை வான் கழியே - [இங்ஙனம் ஒன்றனை யொன்றுதரித்துப்] புட்கள் வாழும் பெரியகானலே,—மணக்கும் சரம் வேள் எய்து எதிர்ந்தான் - மணங்கமழும் மலரம்புகளை மன்மதன்பிரயோகித்து எதிர்த்தான்,—எங்ஙன் வாழ்குவம் - இனி எவ்வாறு காமுயிர் வாழுவேம். எ-று. சரதம் ஆகுபெயர். இரண்டாமடியில் மண்ண மண எனவும், ஈற்றடியில் எங்ஙனம் எங்ஙன் எனவும் நின்றன. விளிப்பெயரடை உள்ளுறையுவமப்பொருட்கண் வந்தது. [காமமிக்ககழிபடர்கிளவி.] (௩௬)

குவலயம்போதுவண்டுண்ணுமப்போதுகுறித்திடுசங்
குவலயம்போதுகரத்தன்பர்வேட்டனர்கூட்டமென்சொல்
குவலயம்போதுகண்ணுய்ச்சபைவாணரைக்கூடித்தொழக்
குவலயம்போதுறுதென்புலியூர்வல்லிகூறுகவே.

(இ-ள்.) குவலயம் போது வண்டு உண்ணும் அப்போது - நெய்தற்பூக்களிலுள்ள [தேனை] வண்டுகளுண்ணும் அம்மாலைக்காலத்து,—குறி

த்திடு சங்கு வலயம் போது கரத்து அன்பர் கூட்டம் வேட்டனர் - குறித் துணரப்படுஞ் சங்கரேகை சக்கரரேகைகள் நீளப்பெற்ற கைகளையுடைய நம்மன்பர் வினது சையோகத்தை விரும்பினர்,—என் சொல்குவல் - [இதற்கு] யான் யாதுசொல்வேன்,—ஐ அம்பு ஒது கண்ணாய் - அழகிய அம்பையுவமிக்குங் கண்களையுடையாய்,—சபை வாணரைக் கூடித் தொழ - [சிவமூர்த்திபேதங்கட்குளெல்லாம் ஒப்புயர்வற்ற மகாமூர்த்தியாகிய] சபாநாயகரை [ஒருங்கு] திரண்டு [தரிசித்து] வணங்கும் பொருட்டு,—குவலயம் போது உறு தென் புலியூர் வல்லி - [இங்கிலவுலகத்தவர்] எய்தப்பெறுஞ் [சைவதலங்களுண்] மிக்க தெற்கின்கணுள்ள புலியூரில் வசிக்குங் காமவல்லிபோல்பவளே,—கூறுக-நீகூறுவாயாக. எ-று. போது, சங்கு, வலயம், குவலயம் என்பன ஆகுபெயர். ஐ யம்பு அயம்பு எனத்தொடர்மொழிக்கட் போலியாயிற்று. உடம்படுத்தற்கு உபசாரவிளி ஈரிடத்துந் தந்து கூறிஞளென்க. [பாங்கியிரவுக்குறிவேண்டல்.] (௩௭)

வல்லிக்கரம்பயில்வேன்முலைசொல்விழிமானுமந்த
வல்லிக்கரம்பையுவமையன்றேநண்பவாள்சனன
வல்லிக்கரம்பையமுதன்பர்க்காம்புலியூரர்வரை
வல்லிக்கரம்பற்றிநீக்கிலையங்ஙனென்மால்கடற்கே.

(இ-ள்.) வல் இக்கு அரம் பயில் வேல் மானும் முலை சொல் விழி அந்த வல்லிக்கு - (முறையே) சூதாடுகருவியையும் கருப்பஞ்சாற்றையும் அரத்தொடு பயின்றவேலையும் போலுந் தனங்களையுஞ் சொல்லையுங் கண்களையுமுடைய அந்தமாதுக்கு,—அரம்பை உவமை அன்றே நண்ப - தேவரம்பையும் ஙிகரல்லள் (அதுநிற்க) நண்பனே,—சனன வல்லிக்கு வாள் - சனனவிலங்கையரியும் வாளும்,—அன்பர்க்கு அரம்பை அமுது ஆம் புலியூரர் வரை - தம்மெய்யன்பர்க்குக் கதலிக்கனியும் அமுதுமாகிய புலியூரரது வரையின்கண்,—மால் கடற்கு என் வல் இக்கரம் பற்றி அங்ஙன் நீக்கு இலை - (அம்மாதுதந்த) மோகசமுத்திரத்தினின்றுமென்னை (நின்) வலிய இக்கையினாற்பற்றி அங்கே எடுத்தாயில்லை(இங்கே கழறுவதனாற் பயன்யாது?). எ-று. இக்கு, அரம்பை என்பன ஆகுபெயர். எகாரம் பலரறிதேற்றத்தின்கண்வந்தது. வரையாகிய அங்ஙனெனவிபையும். [கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்] (௩அ)

மானுக்குவந்தனசெய்யாமற்போற்றிடின்மாயையெனு
மானுக்குவந்தனவாய்வருவார்மற்றியானெனதா
மானுக்குவந்தனைசெய்துமுன்வாழ்த்தவளையருளி
மானுக்குவந்தபுலியூரர்மாகலண்கங்கையரே.

(இ—ள்.) மாலுக்கு வந்தன செய்யாமல் போற்றிடின்— மயக்கத்திற்கு (நிமித்தமாய்) வருவனவற்றைச்செய்யாது தம்மைவணங்கித் துதிக்கின்,— மாயை எனும் மாலுக்கு வந்து அனவாய் வருவார் - (அவரது)மாயையென்னும் மேகத்திற்குச் சண்டமாருதம்போல வருவார்,—யான் எனது ஆம் மால் உக்கு முன் வந்தனே செய்து வாழ்த்த - (விஷ்ணு) யான் எனதென்னும் அகங்கார மமகாரங்களாகிய பெருமை குன்றித் திருமுன்னின்று வணங்கித் துதிக்க,—மாலுக்கு வளை அருளி - அவ்விஷ்ணுவுக்குச் சக்கரத்தைக் கொடுத்தவரும்,—உவந்த புலியூரர் - புலியூரை யுவந்தவரும்,—வண் மாக கங்கையர் - வளவிய ஆகாயகங்கையைத்தரித்தவருமாகிய சிவபெருமான். எ-று. மற்று அசைநிலை. அருளி பெயர்; இனி வினையெச்சமெனக்கொண்டு, உவத்தல் வினைக்குச்செயப்படுபொருண் மாலெனக் கோடலுமொன்று. (௩௯)

கங்கைப்பொருவருசெஞ்சடையார்கமலாலயனர்
கங்கைப்பொருளெனக்கொண்டிரந்தார்தமைக்காய்தருமோ
கங்கைப்பொருவினராகத்துள்ளார்செங்கயல்வயலிற்
கங்கைப்பொருபுலியூரரென்பார்க்கில்லைகன்மங்களே.

(இ-ள்.) கங்கைப் பொருவு அரு செம் சடையார் - கங்கையைத்தரித்த நிகரற்றசிவந்த சடையையுடையவர்,—கமல ஆலயனர் கம் கைகொண்டு பொருள் என இரந்தார் - பிரம கபாலத்தைப் (பிக்ஷாபாத்திரமாகக்) கையிற் கொண்டு பொருள் (கொடு) என்று யாசித்தவர்,—தமைக் காய்தரு மோகம் கைப்பு ஒருவினர் ஆகத்து உள்ளார் - (உடைய) தம்மைப் பிறவியில் வீழ்த்துக் கெடுக்கின்ற அவாவை வெறுத்துவிட்ட ஞானிகளது இருதயத்தில் (என்றும்) உள்ளவர்,—செம் கயல் வயலில் கங்கைப் பொரு புலியூரர் என்பார்க்கு - செவ்விய கயன்மற்சங்கள் வயலிலுள்ள வரம்பருகை மோதும் (நீர்வளவிய) புலியூரையுடையவரென்று (இவ்வாறு) துதிக்குஞ் சிவபத்தர்களுக்கு,—கன்மங்கள் இல்லை - கன்மங்கள் ஏறுதலில்லை எ-று. (௪0)

கன்மத்தமுந்துபவங்கெடவேண்டிற்கடல்கடையக்
கன்மத்தமுங்கொளுமால்விடைப்பாகன்கடுக்கையலங்
கன்மத்தமும்புனையும்புலியூரன்கருதுமைம்மு
கன்மத்தமும்மைக்கரியுரியான்புகழ்நற்றிடுமே.

(இ-ள்.) கன்மத்து முந்து பவம் கெட வேண்டில் - கன்மத்தினால் வரும் பிறவிகெட விரும்புகில் - கடல் கடையக் கல் மத்தமும் கொளும் மால் விடைப் பாகன் - கடல்கடையும்பொருட்டு மந்தரமலையை மத்தாகவு

ம், வாசுகிமுதலியவற்றை நாண்முதலியவாகவுந் (திரித்துக்) கொண்ட விஷ்ணுவாகிய இடபத்தை வாகனமாக நடத்துபவரும்,—கடுக்கை அலங்கல் மத்தமும் புனையும் புலியூரன் - கொன்றைமாலையையும் மதுமத்தமாலையையுந் தரித்த புலியூரரும்,—கருதும் ஐ முகன் - (அன்பர்களாலே) தியானிக்கப்படும் ஈசானம்முதலிய ஐந்து திருமுகங்களையுடையவரும்,—மும்மை மத்தக் கரி உரியான் புகழ் கற்றிடும் - மும்மதங்களையுடைய யானைத் தோலைப்போர்த்தவருமாகிய சிவபெருமானது திருப்புகழை (நம்மவர்களே அநவரதமுங்) கற்றுத் துதியுங்கள். எ-று. முதலடியிற் கன்மத்த என்புழி ஈற்றகரஞ் சாரியை. (சக)

கற்கடகத்தளைமுக்கனிதூர்க்கும்கவின்புலியூர்
கற்கடகத்தருநெஞ்சினன்காணவுங்காட்டுங்கொல்லோங்
கற்கடகத்தணிகாசினிபோற்றிடக்கைவலம்பு
கற்கடகத்தகுகாயுணும்போதர்கருத்தனையே.

(இ-ள்.) கற்கடகத்து அளை முக்கனி தூர்க்கும் கவின் புலியூர் - ஞெண்டுகளெடுத்த புற்றை முப்பழந் தூர்க்கு மழகிய புலியூரானது,—கற்கள் தகத்தரு நெஞ்சினனும் காணக் காட்டும் கொல் - கல்லைப்போலக் (கடினம்) பொருந்திய மனத்தையுடைய தமியேனுங் காணுமாறு காட்டுமோ,—கடக ஓங்கல் அணி காசினி போற்றிட கைவலம் புகற்கு - வாளகிரிசூழ்ந்த அழகிய உலகத்தவர் துதிக்க முத்தியிற் பிரவேசித்தற்கு,—அடகு அத்தகு காய் உணும் போதர் கருத்தனை - இலைக்கறியையும் அந்த (உண்ணத்) தக்ககாய்களையும் உண்டு தவஞ்செய்கின்ற ஞானிகளது இருதயத்தின்கண்ணுள்ள சிவபெருமானை. எ-று. இழிவுசிறப்பும்மை மாற்றியுரைக்கப்பட்டது. புலியூரானது, கல்லைப்போலும் மனத்தையுடையதமியேனுஞ் சிவபெருமானைக் காணுமாறுகாட்டுமோ எனக்கூட்டுக. (சஉ)

தனக்கரியானைச்சசிதுணையானைத்தகும்பணியா
தனக்கரியானைப்பிரமனையாள்பவன்றன்னையெண்ணான்
றனக்கரியானைம்முகன்புலியூரன்சதுரனென்னை
தனக்கரியானையன்றாளெனையாளுந்தனிமுதலே.

(இ-ள்.) யானை தனம் சசி துணையானை - யானைபோலுந் தனங்களையுடைய சசிதேவிக்கு மணமகனாகிய இந்திரனையும்,—பணி தகும் ஆதனம் கரியானை - சேஷனாகிய பாம்பைக் [கண்டுயில்] பொருந்துஞ் சயனமாகவுடைய கரிய விஷ்ணுவையும்,—பிரமனை ஆள்பவன் - பிரமாவையும் ஆளுபவரும்,—தன்னை எண்ணான் தனக்கு அரியான் - தம்மை அவமதி

த்த தக்கனுக்குக் காணுதற்கரியவரும்,—ஐ முகன் - ஐந்துதிருமுகங்களையு டையவரும்,—புலியூரன் - புலியூரில் வீற்றிருப்பவரும்,—சதுரன் - நாக ரிகரும்,—என் நாதன் - எனது குருவும்,—அக்கு அரியான் - என்புமாலையையும் பாம்பையுந்தரித்தவரும்,—ஐயன் தான் - பரமபிதாவுமாகிய சிவபெருமானே,—என்னை ஆளுந் தனி முதல் - என்னை அநாதியே அடிமையாகவுடைய முழுமுதற்கடவுள். எ-று. கரியானை கரத்தையுடையதாகிய யானையென இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (சங)

முதலைக்கயவரைக்கன்னலின்மாய்த்தடன்மொய்ம்புகெழு
முதலைக்கயவரைபோற்றியமான்முதற்றேவர்பொரு
முதலைக்கயவரைச்செற்றபிரானைமுதுபுலியூர்
முதலைக்கயவரைப்போதால்வணங்கினர்முத்தர்களே.

(இ-ள்) முதலைக் கயவு அரைக் கன்னலில் மாய்த்து - (கயேந்திரனைப்பற்றிய) முதலையினது பெருமையை அரைநாழிகையில் விக்கிரகித்து,—அடல் மொய்ம்பு கெழுமு வரை தலைக் கயம்-போற்றிய - மிக்கவலிமைபொருந்திய மலைபோலும் அக்கயேந்திரனுக்கு அநுக்கிரகித்த,—மால் முதல் தேவர் பொருமுதலை - திருமால்முதலாகிய தேவர்களது விம்மலையும்,—கயவரைச் செற்ற பிரானை - பதிதர்களாகிய அசுரரையுஞ் (சேர) அழித்த எப்பொருட்கு மிறைவரும்,—முது புலியூர் முதலை - பழைய புலியூரில் வீற்றிருக்குங் கடவுளுமாகியசிவபெருமானை,—கயம் வரை போதால் வணங்கினர் முத்தர்கள் - வாவியின்கணுள்ள பூவாலருச்சித்து வணங்கினவர் மலமுத்தராவர் எ-று. ஆக்கச்சொன் மறைந்து நின்றது. (சச)

முத்தருக்கும்பயின்மூர்க்கருக்குந்தவமுற்றிநிற்கு
முத்தருக்கும்விண்ணதிர்த்திடித்தோங்கிமுழங்குமுரு
முத்தருக்கும்பமுலைமங்கைபங்கர்முதுபுலியூர்
முத்தருக்கும்வனப்பாரிருதாளென்முடிமணியே.

(இ-ள்.) முத் தருக்கும் பயில் மூர்க்கருக்கும் - மூவேடணைகளையுமுடைய பதிதருக்கும்,—தவம் முற்றி நிற்கும் முத்தருக்கும் - தவத்தை முடித்து (உடம்போடுகூடி) நிற்குஞ் சீவன்முத்தருக்கும்,—விண் ஓங்கி அதிர்த்து இடித்து முழங்கும் உருமு தரு - (முறையே) ஆகாயத்திலுயர்ந்து கர்ச்சித்துப் பேரொலிவிளைத்து முழங்குமிடியும்,கற்பகதருவுமாயுள்ளவரும்,—கும்ப முலை மங்கை பங்கர் - பூரணகும்பம்போலும் முலைகளையுடைய உமாதேவிபாகரும்,—முது புலியூர் முத்து அருக்கும் வனப்பார் - பழைய புலியூரிலெழுந்தருளியிருக்கும் முத்தையும் (ஒளி) குன்றுவிக்கும் (விபூதிப்பிரகாச) அழகையுடையவருமாகிய சிவபெருமானது,—இருதாள் எ எ

ன் முடி மணி - இரண்டு திருவடிகளுமே என் சிரோரத்தினம் எ-று. மூவேடணை அத்தவேடணை புத்திரவேடணை உலகவேடணை என்பன. ஏடணை விருப்பம். (௬௫)

மணியருந் துங்கக்கயமுகத் தேவுமருவுசுப்ர
மணியருந் தும்புருநாரதரும்புகழ்வண்புலியூர்
மணியருந் தும்விடத்தார்சிவகாமிமருவியர
மணியருந் தும்விடையாரெனப்போற்றலென்மாகடனே.

(இ—ள்.) மணி அரும் துங்க கயமுகத் தேவும் - அழகிய அரிய உயர்ச்சிபொருந்திய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளும்,—மருவு சுப்ரமணியரும் - (கலியுகவரதரென்று சொல்லும்படி) பொருந்திய சுப்பிரமணியக்கடவுளும்,— தும்புரு நாரதரும் புகழ் வண் புலியூர் மணி - தும்புருநாரதரும் புகழுகின்ற வளவிய புலியூரிலெழுந்தருளியிருக்கும் (எனது கண்) மணி,— அருந்தும் விடத்தார் - நஞ்சையுண்டவர்,—சிவகாமி மருவிய (இ) ரமணியர்- சிவகாமியம்மை வாமபாகத்திற்பொருந்திய மனரம்மியத்தையுடையவர்,— உந்தும் விடையார்-இவர்ந்து (செலுத்து)மிடபயானத்தையுடையவர், எனப் போற்றல் ஏ என் மா கடன் - என்று துதித்தலே எனது விழுமிய கடமையாம். எ-று. மூன்றாமடியில் மணி சிந்தாமணி எனினுமமையும். (௬௬)

கடக்கருமத்தகைமாமகந்தன்னிற்கலந்தசுரர்
கடக்கருமத்தமிகச்செற்றகூத்தன்கவின்புலியூர்க்
கடக்கருமத்தக்கரியுரித்தோனன்பர்க்காய்கருவி
கடக்கருமத்தளைக்கட்டறுக்குங்கதிர்ச்சேகரமே.

(இ-ள்.) கடக்கு அரும் அ மா தகை மகம் தன்னில் கலந்த சுரர்கள் - (ஒருவாற்றானும்) மேலிடுதற்கரிய அத்துணைப்பெருமையையுடைய யாகத்தில்வந்த தேவர்களையும்,—தக்கரும் மத்தம் மிகச் செற்ற கூத்தன்- யாககருத்தாவாகிய தக்கனையும் மயக்கமிகும்படி தண்டித்த (பஞ்சகிருத்திய) நிருத்தரும்,—கவின் புலியூர்க் கரும் கடம் மத்தம் கரி உரித்தோன் ஏ - அழகிய புலியூரில் வீற்றிருக்குங் கரிய மத்தக மதங்கள்பொருந்தியயானையினது தோலை யுரித்தவருமாகிய சிவபெருமானே,—அன்பர்க் கருகாய் விகடம் கருமம் தளைக் கட்டு அறுக்கும் - தம்மெய்யன்பரைப் பிறவியிலுய்த்து வருத்தும் வேறுபாட்டையுடைய இருவினைகளும் பாசபந்தமுமாகிய (இரும்பைத்) துணிக்கவல்ல,—சேகு கதிர் அரம் - வைரம்பொருந்திய கூரிய அரமாயுள்ளவர். எ-று. தக்கர் என்புழிப் பன்மை இழித்தற்கண் வந்தது. கருமந்தளை கருமத்தளை எனநின்றது. மா அளவு. (௬௭)

சேகரிக்குஞ்சரத்தோல்புனைந்தூர்பவன்றேங்கடுக்கை
சேகரிக்குஞ்சடைத்தென்புலியூரன்சிறுபிறைசேர்
சேகரிக்குஞ்சன்னுவிக்குநன்காதலன்றீயவினைச்
சேகரிக்குஞ்சரமென்போநடம்புரிசெம்மலையே.

(இ-ள்.) சே கரிக் குஞ்சரம் தோல் புனைந்து ஊர்பவன் - இடபத்தையும் கரிய யானைத்தோலையுந் (திருமேனியிற்) போர்த்து (வாகனமாக) நடத்துபவரும்,—தேம் கடுக்கை சேகரிக்கும் சடைத் தென் புலியூரன் - மணம்பொருந்திய கொன்றைப்பூமாலையைத் தேடியணியுஞ் சடையையுடைய தெற்கின்கணுள்ள புலியூரரும்,—சிறு பிறை சேர் சேகரிக்கும் சன்னுவிக்கும் நல் காதலன் - பாலசந்திரன்பொருந்திய திருமுடியையுடைய உமையம்மைக்குங் கங்கைக்கு மினிய நாயகருமாகிய,—நடம்புரி செம்மலை - (கனகசபையிலே) அநவரததாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானை,—தீய சேகு வினை அரிக்கும் சரம் என்போம் - (எமது) கொடிய திண்ணிய இருவினைகளை அரிதலைச்செய்யும் அம்பென்று துதிப்போம். எ-று. எதிர் நிரனிறை. கடுக்கை இருமடியாகுபெயர். சன்னுவி - சானவி. (௪௮)

மலையசத்தார்தருகொங்கைமின்னாரைமகிழ்ந்தொருவா
மலையசத்தாதிவிடயத்தின்மூழ்குற்றுமாழ்குவனே
மலையசத்தானங்கைவீட்டியத்தக்கன்மகத்தின்மற்ற
மலையசத்தாகச்செயும்புலியூருறைவானவனே.

(இ-ள்.) மலையசம் ஆர்தரு கொங்கை மின்னாரை மகிழ்ந்து - சந்தனக்குழம்பையணிந்த தனங்களையுடைய மின்போலும் மகளிரையுவந்து,—ஒருவாமல் - (அவரைஒருகணமும்) விட்டுநீங்காமல்,—ஐய - சுவாமீ,—சத்தம் ஆதி விடயத்தின் மூழ்குற்று மாழ்குவனே;—(தமியேன் அவர்மாட்டுள்ள) சத்தாதிவிடயங்களில் அமிழ்ந்திக்கெடுவேனோ?,—மலை அசத்தான் அம் கை வீட்டி - பொருகின்ற தகரை வாகனமாகவுடைய அக்கினிதேவனது அழகிய கையைத்துணித்து,—அத் தக்கன் மற்று மக அமலை அசத்து ஆகச் செயும் - அத்தக்கனது மற்றைய யாகோபகரணப் பொருட்டொகுதியையெல்லாம் பயனிலவாகச் செய்தருளிய,—புலியூர் உறை வானவனே - புலியூரிலெழுந்தருளியிருக்கின்ற சிதாகாசசொரூபரே. எ-று. சத்தாதிவிடயங்கள் சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்கள். (௪௯)

வானவன்பாலன்றுபாணன்கையோலைவரைந்தனுப்பும்
வானவன்பாலன்னபூதியினான்மயிலோன்பயில்கா.
வானவன்பாலன்றலைக்கறியுண்டவன்வண்பதஞ்சேர்
வானவன்பாலனம்வாழ்புலியூரைவணங்குதுமே.

(இ-ள்.) ஓலை வரைந்து பாணன் கை வானவன் பால் அன்று அனுப்பும் வானவன் - (தமதருமைத்திருக்கரத்தினாலே) 'மதிமலிபுரிசை' என்னுந்திருமுகப்பாசுரத்தை வரைந்து பாணபத்திரரதுகையிற் (கொடுத்துச்) சேரமான்பெருமாணாயனாரிடத் தக்காலத்தனுப்பிய மகாதேவரும்,—பால் அன்ன பூதியினான் - பால்போலும் வெண்மையாகிய விபூதியைத்தரித்தவரும்,—மயிலோன் பயில் கவானவன் - மயில்வாகனத்தையுடைய சுப்பிரமணியக்கடவுள்பொருந்திய திருத்தொடையையுடையவரும்,—பாலன் தலைக்கறி உண்டவன் - (சிறுத்தொண்டநாயனாரது சங்கமபத்தியை எம்போலிகட்குணர்த்தியுய்விக்கத் திருவுளங்கொண்டு) அவருடைய திருக்குமாரராகிய சீராளதேவரது தலைக்கறியைத் திருவமுதுசெய்தவருமாகிய சிவபெருமானது,—வண் பதம் சேர்வான் - சீபாதங்களையடையும் பொருட்டு,—அ அன்பால் - அம்மெய்யன்போடு,—அனம் வாழ் புலியூரை வணங்குதும் - அன்னப்புட்கள்வாழும் (நீர்வளமிய அவரது) புலியூரைத் (தரிசித்து) வணங்குவேமாக. எ-று. ஈற்றடியில் அவ்வன்பால் என நிற்கற்பாலது அவன்பால் என நின்றது. (௫0)

குதலைப்பணியமொழிமங்கைபங்கனைக்கொல்விடங்கக்
குதலைப்பணியணியும்புலியூரனைக்கூடிவணங்
குதலைப்பணியதவப்பயனால்யமகோட்டியின்மாழ்
குதலைப்பணியறுத்தென்மனக்கல்லைக்குழைவித்ததே.

(இ-ள்.) பண் இய குதலை மொழி மங்கை பங்கனை - பண்போலவினிய குதலைச்சொற்களை வசனிக்கும் உமையம்மையை வாமபாகத்திலுடையவரும்,—கொல் விடம் கக்கு தலைப் பணி அணியும் புலியூரனை - கொல்லாநின்ற விஷத்தைக்கக்கும் வாயையுடைய பாம்பை (ஆபரணமாகத்) தரித்த புலியூருமாகிய சிவபெருமானை,—கூடி வணங்குதலைப் பணிய தவப்பயன் - (அடியாரோடு) கூடி வணங்குதலைச்செய்த (எனது) தவப்பயனானது,—யமகோட்டியில் மாழ்கு தலைப் பணி அறுத்து - யமனது தருமசபையில் மயக்கமுறுவிக்குந் தண்டத்தொழிலை விலக்கி,—என் மனக் கல்லைக் குழைவித்தது - எனது மனமாகிய கல்லை நெகிழுவித்தது. எ-று. முதலடியில் இனிய எனற்பாலது இய எனவும், மூன்றாமடியிற் பண்ணிய எனற்பாலது பணிய எனவும் நின்றன. இரண்டாமடியில் தலை ஆகுபெயர். ஆல் அசைநிலை. நான்காமடியில் தலைப்பணி என்புழித் தலை-தலைமை. தலைமை அதிகாரம். தலைமைபற்றி நிகழுந்தண்டத்தைத்தலைமையென்றது உபசாரம். பணியமொழி என்பதற்குப் பணிவைப்புலப்படுத்திய மொழி எனினும் பொருந்தும். (௫௧)

வித்தகத்தாலரவம்புலிக்காகவிழுப்பொதுமே
வித்தகத்தாவெனநிர்த்தம்புரிந்துமெய்ஞ்ஞானமுணர்
வித்தகத்தாபுலியூராவினியென்வினைகளெனும்
வித்தகத்தாற்பவமங்குரியாமல்விலக்குகவே.

(இ-ள்.) வித்தகத்தால் அரவம் புலிக்கு ஆக விழுப் பொது மேவி - சதுரப்பாட்டினுற் பதஞ்சலிமுனிவர் வியாக்கிரபாதமுனிவர் பொருட்டு விழுமிய கனகசபையிலே (சதாகாலமும்) பொருந்தி,—தக தா என நிர்த்தம் புரிந்து - தகதாஎனத் திருநிருத்தஞ் செய்தருளி,—மெய் ஞானம் உணர் வித்தகத்தா,—(அதுவாயிலாக) அவர்கட்குத் தத்துவஞானத்தை உபதேசித்த நிமித்தகாரணரே,—புலியூரா - புலியூரை (அதிமுக்கியவாசஸ்தானமாக) வுடையவரே,—இனி என் வினைகள் எனும் வித்து அகத்தால் பவம் அங்குரியாமல் விலக்குக - இனி எனது இருவினைகளாகிய வித்தினுண்ணின்றும் பிறவியாகிய (முளை) தோன்ருமற் தேவரீர் விலக்கியருளுக. எ-று. (கூஉ)

குகரப்பருப்பதமங்கைபங்காளர்கொடிறிறந்து
குகரப்பருப்பதத்தோலுரியார்குலவும்புலியூர்க்
குகரப்பருப்பதங்கொள்வார்கொளார்க்குளங்கூசியொருங்
குகரப்பருப்பதன்மேற்கதிர்போல்வந்துகூடுவரே.

(இ-ள்.) குகர பருப்பத மங்கை பங்கு ஆளர் - குகைபொருந்திய இமையமலையரசனுக்குப் புதல்வியாகிய உமையம்மையை வாமபாகத்தில் ஆளுகின்றவரும்,—கொடிறு இறந்து உகு கரம் பரும் பதம் தோல் உரியார் - (மதசலம்) கதுப்பைநீங்கி யொழுகப்பெறுந்துதிக்கையையும் பருத்த கால்களையுமுடைய யானையைத் (தோல்) உரித்தவரும்,—குலவும் புலியூர்க் குகர் அப்பர் - (எங்குந்தன்பெயர்) விளங்குகின்ற புலியூரில் எழுந்தருளியிருக்குஞ் சுப்பிரமணியக்கடவுளுக்குப் பிதாவுமாகிய சிவபெருமான்,—உப்பதம் உளம் கொள்வார் கொளார்க்கு - தந்திருவடிகளைஉட்கொள்பவரும் கொள்ளாதவருமாகிய இருதிறத்தருக்கும்,—கூசி ஒருங்கு கரப்பர் - நாணி முழுதும் மறைவர்,—உப்பு அதன் மேல் கதிர் போல் வந்து கூடுவர் அவ்வுவர்க்கடன்மேல்வருஞ் சூரியனைப்போலத் தாமேவந்தடைவர். எ-று. எதிர் நிரனிறை. (கூங)

கூடம்புடைத்தவயிற்கண்ணிகேள்வன்குளிர்புலியூர்க்
கூடம்புடைத்தமலைமுலைமாதின்குறுமுயலின்
கூடம்புடைத்தமுகங்கண்ணெனவுண்டுகொல்வண்டுகாள்
கூடம்புடைத்தடவாரிசநீலங்கொளக்கண்டதே.

(இ-ள்.) கூடம் புடைத்த அயில் கண்ணி கேள்வன் குளிர் புலியூர் - (கம்மியர்) கூடங்கொண்டு புடைத்தியற்றிய வேல்போலுங் கண்களையுடைய உமையம்மைக்கு நாயகராகிய சிவபெருமானது குளிர்ச்சிபொருந்திய புலியூரில் (வசிக்கும்),—புடைத்த கூடம் மலை முலை மாதின்- புடைப்புப்பொருந்திய குவடு (உயர்ந்த) மலைபோலுந் தனங்களையுடைய நம்மாதினது,—குறு முயலின் கூடு அம்பு உடைத்த முகம் கண் என - குறிய முயற்கூடாகிய சந்திரனையும் அம்பையும் (முறையே) வென்ற முகத்தையும் (அம்முகத்திற்பொருந்திய) கண்களையும்போல,—கூடு அம்பு உடை தடம் நீலம் கொள் வாரிசம் வண்டுகாள் கண்டது உண்டு கொல்- பொருந்திய நீரையுடைய தடாகங்களிலே (இரண்டு) கருங்குவளைமலர்களைத் [தன்மேற்] கொண்டு [விகசித்த] ஒருசெந்தாமரைப்பூவை வண்டுகளே நீங்கள் கண்டதுண்டோ [சொல்லுக.] எ-று. கொண்டென்னுஞ் செய்தெனெச்சங்கொளவெனத் திரிந்துநின்றது. "கண்ணுங்கொளச்சேறிநெஞ்சே" என்புழிப்போல. முடிக்குஞ்சொல் வருவித்துரைக்கப்பட்டது. [பெருநயப்புரைத்தல்.] (ருச)

கண்டதுண்டம்பழமுண்டனசொல்வளைகாமர்குமிழ்க்
கண்டதுண்டம்பயிலொண்டொடிவஞ்சியைக்கைதவரைக்
கண்டதுண்டம்படுத்தும்புலியூரர்கனவரையிற்
கண்டதுண்டம்பகநண்பாவெனெஞ்சங்கலக்கியதே.

(இ-ள்.) கண்டு அம் பழம் உண்டு உண்டு அது அன சொல் - கற்கண்டையும் அழகிய முக்கனிகளையும் மேன்மேலுண்டால் அதையொத்த [இனிய] சொல்லும்,—வளை காமர் குமிழ் கண்டம் துண்டம் பயில் ஒள் தொடி வஞ்சியை - சங்கையும் அழகிய குமிழம்பூவையுமொத்த கழுத்தும் மூக்குமுடைய ஒளிபொருந்திய வளையலைத்தரித்த வஞ்சிபோல்பவளை,—கைதவரைக் கண்டதுண்டம் படுத்தும் புலியூரர் கன வரையில் கண்டது உண்டு - கீழ்மக்களாகிய அசுரரைப் பலதுண்டப்படுத்திய புலியூரையுடைய் சிவபெருமானது முகில்படிகின்ற மலையின்கண் [ஒருகால்யான்] கண்டதுமாத்திரமுண்டு,—அம்பக நண்பா என் நெஞ்சம் கலக்கியது - கண்போலச்சிறந்த நண்பனே [அஃதொன்றுமே] எனது திடசித்தத்தை [இங்ஙனம்] நிலைகலங்கும்படிசெய்தது. எ-று. [தலைமகன் பாங்கற்குத் தன்னியல்பு கிளத்தல்.] (ருரு)

கலகத்தனங்கனைச்செற்றுழல்பூவைக்கவின்மலயக்
கலகத்தனந்ததவமுனியாற்சமங்கண்டொருபக்
கலகத்தனம்பயின்மென்னடையாளைக்கலந்தவன்சூ
கலகத்தனம்புலியூரனென்றூல்வருங்கைவலமே.

(இ-ள்.) கலகம் அநங்கனைச் செற்று - [தம்மோடு] காமயுத்தஞ் செய்த மன்மதனைக்கொன்று,—கவின் மலயக் கல் அகத்து அநந்த தவ முனியால் உழல் பூவைச் சமம் கண்டு - அழகிய பொதியமலையில் [வசிக்கும்] முடிவற்ற தவத்தையுடைய அகத்தியமுனிவராற் [றன்னிலை] திரிந்த பூமியை [முன்போல] ஒப்பநிற்பச்செய்து,—அகத்துப் பயில் அனம் மெல் நடையாளை ஒரு பக்கல் கலந்தவன் - [தம்மை] மனத்திற்கொண்டு [அருந்தவஞ்செய்த] அன்னம்போலுஞ் சுகுமாரநடையினையுடைய உமாதேவியைத் [திருமணஞ்செய்து] ஒரு திருமருங்கிற் சேர்த்துக்கொண்டவர்,- சகலம் கத்தன் - சகலபிரபஞ்சங்கட்குங் கருத்தா,—அம் புலியூரன் என்றால் - அழகிய புலியூரையுடையவரென்று [இங்ஙனந்] துதித்தால்,—கைவலம் வரும் - [ஒருதலையாக] முத்தி சித்திக்கும். எ-று. (ருசு)

வலம்புரியுங்கழுநீருங்குலாவுமதுமலர்ச்சை
வலம்புரியுங்குழலன்பர்தணந்தபின்வண்புலியூர்
வலம்புரியுங்கொணராழியுமாதர்க்குவான்பகையாய்
வலம்புரியுங்குயிலுந்துணையாயவசந்தனுக்கே.

(இ-ள்.) வலம்புரியும் கழுநீரும் மது குலாவும் மலர் - நந்தியாவர்த்தமுஞ் செங்கழுநீருமாகிய இவற்றின் றேன்பொருந்திய பூக்களை [முடித்த],—சைவலம் புரியும் குழல் அன்பர் தணந்த பின் - நீர்ப்பாசியும்விரும்புங் கூந்தலையுடைய உமாபதியாகிய [நங்] காதலர் [எம்மைப்] பிரிந்தபின்பு,—வண் புலியூர் வலம்புரியும் கொணர் ஆழியும் - வளவிய புலியூரில் வலம்புரியென்னுஞ் சங்கையும் ஒக்கோலை முதலிய பிறவற்றையுங் கொடுவந்தொதுக்கும் [முரசாகிய] சமுத்திரமும்,—மாதர்க்கு வான் பகையாய் வலம் புரியும் குயிலும் - [இங்ஙனமே முன்னுந்தங்காதலரைப்பிரிந்த] மகளிர்க்குறுபகையாய் வென்றிகுறிக்கும் [விருதாகிய] குயிலும்,— வசந்தனுக்குத் துணை ஆய - [இதுபொழுது] தம்மன்மதனுக்குப் போர்த்துணையாயின. எ-று. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. [தலைவி தலைமகன் பிரிவாற்றாமை.] (ருஎ)

சந்தனத்தேவைநிகர்களக்கண்டையலார்மொழிகாற்
சந்தனத்தேவைகுவேள்கணைபாடிடத்தாரணிவா
சந்தனத்தேவைத்துவண்புலியூரரைத்தந்தருளுஞ்
சந்தனத்தேவையல்லாற்பணியேன்றெய்வந்தாம்பிறவே.

(இ-ள்.) சந்த நத்து ஏவை நிகர் களம் கண் தையலார் மொழி - அழகிய சங்கையும் அம்பையும்போலுங் கழுத்தையுங் கண்களையுமுடைய பெண்கள்கூறும் பழிமொழியும்,—கால் சந்தனத்து வைகு வேள் கணை

பாறிட - தென்றற்காற்றாகிய தேரிற்றங்கும் மன்மதனது மலரம்புகளும் பற்றற,—அணி வாசம் தார் தனத்து வைத்து - [புலியூரர்] அணிந்த மணம்பொருந்திய மாலையை [அரிதிற்பெற்று] எனது தனங்களில்வைத்து [ஆற்றி],—வண்புலியூரரைத் தந்தருளும் சந்து அனத் தேவை அல்லால் -[பின்] அவரை [மெய்யுற்றுப்புணரும்படி] எனக்குத் தந்தருளிய தூது [போய்மீண்ட] அன்னமாகிய தெய்வத்தையல்லது,—பிற தெய்வமே பணியேன் - பிறதெய்வங்களை இனி ஒருகாலும் வணங்கேன். எ-று. களங்கண் களக்கண் என நின்றது. இரண்டாமடியிற் சயந்தனம் சந்தனம் என யகரந்தொக்கது. ஏகாரங்கள் இசைநிறை. தாமென்பது கட்டுரைச்சுவைக்கண்வந்தது. [ஒற்றேதெய்வம் மற்றிலையென்றல்.] (ருஅ)

தானங்கடியிடநீள்கரித்தோலினர்தண்புலியூர்த்
தானங்கடியிடமாநடராசர்தணத்தலிற்சந்
தானங்கடியிடராகவில்வேள்சலசத்தையெடுத்
தானங்கடியிடவந்ததுமாரன்சதுரங்கமே.

(இ-ள்.) கடி இட தானம் நீள் கரித் தோலினர் - மணங்கமழ மதம்பில்கும் யானையது தோலையுரித்துப்போர்த்தவரும்,—தண் புலியூர்த் தானம் கடி இடம் ஆம் நடராசர்-தண்ணிய புலியூராகிய [திவ்விய] ஸ்தானத்தைப் பிரதான ராசதானியாகக்கொண்டரசுவீற்றிருக்குந் திருநடராசருமாகிய நங்காதலர்,—தணத்தலில் - [எம்மைப்] பிரிந்தமையினால்;—சந்தானம் கடி இடர் ஆக - சந்தனம் [முதலிய] சைத்தியோபசாரங்கள் கடியப்படும் உஷ்ணோபசாரங்களாகித் துன்பந்தர,—வேள் வில் சலசத்தை எடுத்தான் அடியிட - மன்மதன் கருப்புவில்லையும் வனசவாளியையுங் [கையில்] எடுத்துப் [போர்] தொடங்க,—மாரன் சதுர் அங்கம் அங்கு வந்தது - அவனது சதுர்வித அங்கமும் அங்கே (ஒருங்கு) வந்தது. எ-று. சந்தனம் சந்தானம் என நீண்டது. எடுத்தென்னுஞ் செய்தெனெச்சம் முற்றாய்த்திரிந்து நின்றது. மாரன் சதுரங்கம் தென்றல், இருள், கிளி முதலாயின. (தலைவி பிரிவாற்றாமை.) (ருகூ)

துரங்கமுந்தானையும்யானையுந்தேருமிச்சொல்லிடுஞ்சா
துரங்கமுந்தந்தருளும்புலியூரன்றுதித்தவர்க்கோ
துரங்கமுந்துங்கண்ணனுக்கரியான்றொண்டினர்க்குறுமா
துரங்கமுந்துஞ்சடையானல்குமுத்திச்சுகந்தனையே.

(இ-ள்.) தேரும் யானையும் துரங்கமும் தானையும் இச்சொல்லிடும் சாதுரங்கமும் - இரத கச துரக பதாதியென் றிங்ஙனஞ் சொல்லப்படுஞ் சதுர்வித அங்கங்களையுந் துணைக்கருவியாகவுடைய இராசரீகத்தை,—து

தித்தவர்க்கு தந்தருளும் - தம்மைத்துதித்தவருக்கு (இம்மையிற்) கொடுத்தருளுவர்,—புலியூரன் - புலியூரரும்,—ஓது (அ) ரங்கம் முந்தும் கண்ணனுக்கு அரியான் - புகழப்படுஞ் சீரங்கத்தைத் தமக்குஉற்கிருஷ்டஸ்தலமாகவுடையவிஷ்ணுவுக்குத் (திருவடி) அரியவரும்,— தொண்டினர்க்கு உறு மாதுரம் - தம்மடியவர்க்கு மிகத் தித்திப்பவரும்,—கம் உந்தும் சடையான் - கங்காசலம்பிரவாகிக்குஞ் சடையையுடையவருமாகிய சிவபெருமான்,—முத்திச் சுகந்தனை நல்கும்- (தேகாந்தத்தில்) முத்தியின்பத்தைக்கொடுத்தருளுவர். எ—று. சிவபெருமான் தம்மைத்துதித்தவருக்கு இம்மையில் இராசரீகத்தைக் கொடுத்தருளுவர், தேகாந்தத்தில் முத்தியின்பத்தைக்கொடுத்தருளுவர் எனக்கூட்டுக. (௪0)

கந்தனையாகமங்கேட்டாற்குமைமணங்காட்டியெறுழ்க்
கந்தனையாகவந்தாற்கரியானைக்கதங்கொடக்கன்
கந்தனையாகத்தடுபுலியூரனைக்கண்டுகண்டு
கந்தனையாகவக்கண்ணார்மயலைக்கடந்தனையே.

(இ-ள்.) கந்தனை ஆகமம் கேட்டாற்கு உமை மணம் காட்டி - சுப்பிரமணியக்கடவுளிடத்துச் சிவாகமங்களைக்கேட்ட அகத்தியமுனிவருக்குத் தாமுமையம்மையைவிவாகஞ்செய்த திருமணக்கோலத்தைத் தரிசிப்பித்து,— எறுழ்க் கந்து அனை ஆக வந்தாற்கு அரியானை - வலிய கற்றூணை மாதாவாகக்கொண்டு (நரசிங்கமாகத்) தோன்றிய விஷ்ணுவுக்குத் (திருவடிதானுந்தரிசித்தற்கு) அரியவரும், கதம் கொள் தக்கன் கந்தனை யாகத்து அடு புலியூரனைக் கண்டு கண்டு உகந்தனை - (செல்லாவழித்தோன்றித் தனக்கே எதம்பயக்கும்நிமித்தமாய) கோபத்தையுடைய தக்கனது தலையை யாகசாலையிற்றுணித்த புலியூரருமாகிய சிவபெருமானைத் தரிசித்துத்தரிசித்து மகிழ்ந்தனை (ஆகலினன்றோ),— ஆகவக் கண்ணார் மயலைக் கடந்தனை - (எனதுமனமே) அமர்த்தகண்களையுடைய பெண்களால்வரும் மயக்கமாகிய (பகையை) வென்றாய். எ-று. முதலடியிற்கந்தனை உருபுமயக்கம். இரண்டாமடியில் அன்னை அனை என நின்றது. [புலியூர் தரிசனமாத்திரையில் முத்திகொடுக்குமென்பது கருத்து.] (௪௧)

தனையாதரிக்கும்பிரமத்தையோதெனச்சண்முகநா
தனையாதரிக்கும்புகழ்ப்புலியூரனைத்தாணுவைநித்
தனையாதரிக்கும்பர்தாருவென்றோர்கிலர்சார்பவப்பந்
தனையாதரிக்குமந்தோவிருப்பாரித்தரணியிலே.

(இ-ள்.)தனையா தரிக்கும் பிரமத்தை ஓது என- பிள்ளையே நின் (மனத்திற்) றங்கிய பிரணவப்பொருளைச் சொல்லென்று,--சண்முகநாதனை ஆதரிக்கும் புகழ்ப் புலியூரனை - ஆறுதிருமுகங்களையுடைய சுப்பிரமணியக்கடவுளை அன்புமுதிர்ந்து வினவிய புகழையுடைய புலியூரரும்,—தாணு

வை - இலிங்கவடிவையுடைய திருமூலட்டானேசுரரும்,—சித்தனை - என்றுமுள்ளவருமாகிய சிவபெருமானை,—ஆதர் இக்கு உம்பர் தாரு என்று ஓர்கிலர் - அறிவிலாதார் கரும்புந் தேவதரு பஞ்சதருவுமென்று கருதி வழிபட்டிலர்,—சார் பவப் பந்தனை யாது அரிக்கும் (என்று) இத்தரணியில் அந்தோ இருப்பார் - அவர் (அநாதியே) சகசித்த பிறவிக்கேதுவாகிய பாசபந்தத்தை வேறியாது அரிதலைச் செய்யுமென்று கருதி (ஒரு சிந்தனையுமற்று) இப்பூமியில் அந்தோ (வாளா) இருக்கின்றனர். எ-று. தனயன் தனையன் எனப்போலியாயிற்று. ஈற்றடியில் அரிக்கும் என்புழி என்றென்னுஞ்சொல் அவாய்நிலையான் வருவித்துரைக்கப்பட்டது. (சுஉ)

தரணியிலேகையைசேர்புலியூரதருகவரந்
தரணியிலேகைதவத்துழலாமற்சதுமறைவி
தரணியிலேகைவரையாமலெய்துசமன்படர்வை
தரணியிலேகைதொடுத்தயர்தண்டந்தகாதெனக்கே.

(இ-ள்.) தரணியில் ஏகு ஐயை சேர் புலியூர - (கைலாசகிரியினின்றும்) இமையமலையிற்சென்று (குழந்தையாகி அருந்தவஞ்செய்த) உமையம்மைதழுவும் புலியூரரே,—தரணியிலே கைதவத்து உழலாமல் - இப்பூமியிலே அநித்தியமாகிய தொழின்முயற்சிகளிற் சுழன்றுதிரியாமலும்,—சது மறை விதரணி இலேகை வரையாமல் - சதுர்வேத தாதாவாகிய பிரமா (வினைப்போகங்களை வரையறுத்து) விதித்தெழுதாமலும்,—எய்து சமன் படர் வைதரணியிலே கை தொடுத்து அயர் தண்டம் தகாது - [மரணகாலத்திற்றப்பாது) வரும் யமதூதுவர் வைதரணியாற்றிலே கையிற்பற்றி (ஈர்த்துச்)செய்யுந் தண்டனைபொருந்தாமலும்,—எனக்கு வரம் தருக - தேவரீர் தமியேனுக்கு வரந்தந்தருளுக. எ-று. (சுங)

தண்டாதிருக்குஞ்சடைப்புலியூரதபனியக்கோ
தண்டாதிருக்குழைச்சங்காகராவிச்சகந்தனிலே
தண்டாதிருக்குமொழிந்தருள்வெள்ளித்தடக்குலவே
தண்டாதிருக்குமுடித்தாளெனைப்பொய்தகாமலுக்கே.

(இ-ள்.) தண் தாது இருக்கும் சடைப் புலியூர - தண்ணிய பூந்தாது பொருந்துஞ் சடையையுடைய புலியூரரே,—தபனியக் கோதண்டா - பொன்மயமாகிய மேருகிரியை வில்லாகவுடையவரே,—திருக் குழைச் சங்கா - திருச்செவியிலே சங்கக்குண்டலத்தைத் தரித்தவரே,—கரா - நஞ்சையுண்டவரே,—இச் சகந்தனில் தண்டாது இருக்கு மொழிந்தருள் வெள்ளித் தட குல வேதண்டா - இவ்வுலகின்கண் நீங்காது (வழங்கும்) வேதத்தைச்சொல்லியருளிய வெள்ளிமயமாகிய பெரிய குலகிரியில் வீற்றிருப்பவரே,—பொய் தகாமலுக்கு - பொய்யாகிய பிரபஞ்சத்தை (மெய்யெனக்கொண்டு) மயங்காமைப்பொருட்டு,—திருக்கு முடித்து எனை ஆ

ள் - அநாதியே சகசித்த ஆணவமலத்தை அகற்றித் தமியேனை (இனி) அடிமைக்கொண்டருளுக. எ-று. ஏகாரம் இசைநிறை. (௬௪)

காமதகனந்தருவீரசெய்க்கனிக்கட்கள்பெரு
காமதகனந்தரம்பாய்கவின்புலியூரகலங்
காமதகனந்தகுகரிச்சன்மகன்மக்கடன்மீ
காமதகனந்தனையாண்டருளுன்கழற்சித்தியே.

(இ-ள்.) காமன் தகனம் தரு வீர - மன்மதனைத்தகித்தவீரரே,—கனிக் கட்கள் பெருகா செய் மதகு அனந்தரம் பாய் கவின் புலியூர - [சோலையிற்பொருந்திய] கனிகளிலுள்ள தேன்பெருகி வயன்மதகுகடோறும் பிரதிதினம்பாயும் அழகிய புலியூரையுடையவரே,—கலங்கா மதம் கனம் தகு கரிச் சன்ம - அஞ்சாத மதத்தையுடைய முகில்போலும் யானையினதுதோலைப் [போர்வையாக] உடையவரே,—கன்மக் கடல் மீகாம - [ஆன்மாக்களைப்] பாவசமுத்திரத்தினின்றும் [ஏற்றிமுத்திக்கரையில்விடும்] மாலுமியாயுள்ளவரே,—தக நந்தமை ஆண்டு உன் கழல் சித்தி அருள் - [பரிபக்குவத்திற்குத்] தக எம்மை [இனி] அடிமைக்கொண்டு தேவரீருடைய திருவடியை அடைதலாகிய முத்தியைத்தந்தருளுக. எ-று. (௬௫)

சித்திரைக்குண்மதன்போர்க்கிலக்காயசென்மச்சலரா
சித்திரைக்குப்பதைத்துச்சலியார்சிற்சபைதனினே
சித்திரைக்கும்மறைத்தென்புலியூரன்றிருக்கரம்வீ
சித்திரைக்குண்ணின்றுதூக்கியபாதத்தைச்சிந்திக்கினே.

(இ-ள்.) சித்திரைக்கு உள் மதன் போர்க்கு இலக்கு ஆய - வசந்தகாலத்துக்கு[அரசனாகக்] கருதப்படும் மன்மதன்செய்யும் போருக்கு இலக்காகிய,—சென்மச் சலராசித் திரைக்கு பதைத்து சலியார் - பிறவியாகிய சமுத்திரத்தின்கண்மறியும் [துன்பமாகிய] திரைமோத அதற்குச் சிறிதுந்தளரார்,—மறை இரைக்கும் தென் புலியூரன் - வேதங்களொலிக்கப்பெறுந் தெற்கின்கணுள்ள புலியூரில்வீற்றிருக்குந் திருநடராசர்,—சிற்சபைதனின் நேசித்துத் திருக் கரம் வீசி - சிற்சபையிலே [உயிர்களிடத்து] அன்புமுதிர்ந்து திருக்கரத்தைவீசி,—திரைக்கு உள் நின்று தூக்கிய பாதத்தை சிந்திக்கின் - இடுதிரைக்குண்ணின்று [திருத்தஞ்செய்வதாகத்] தூக்கியருளிய திருவடியைத் தியானஞ்செய்யின். எ-று. இரைக்கும் மறை என்புழி மகரவொற்று விரித்துநின்றது. தியானஞ்செய்யிற் றளரார் எனக்கூட்டுக. (௬௬)

சிந்துரமுங்கிரியும்பகச்சூரன்சிதைந்துடன்
சிந்துரமும்முயிரும்பிளவாகச்செய்சேயுமைமங்கைச்
சிந்துரமுங்கொழுந்தென்புலியூரற்றிசைமுநதற்
சிந்துரமுந்தியவந்தரிபங்கற்றியானித்துமே.

(இ-ள்.) சிந்து உரமும் கிரியும் பக - (இந்திரனதுபணியினால் வருணன் மதுரைமேல்விடுத்த) சமுத்திரவலியும் கிரௌஞ்சகிரியும் பகிரவும்,—சூரன் சிதைந்து உடல் நசிந்து உரமும் உயிரும் பிளவு ஆக செய்சேயும் - சூரபன்மா (மனம்) அழிந்து சரீரநெரிந்து மார்புமுயிரும் இருபிளவாகவுஞ் செய்த சுப்பிரமணியக்கடவுளும்,—ஐங்கை சிந்துரமும் தொழு தென் புலியூரன்- ஐந்துதிருக்கரங்களையும் யானைவதனத்தையுமுடைய விநாயகக்கடவுளும் வணங்குந்தெற்கின்கணுள்ள புலியூரரும்,—நுதல் சிந்துரம் திகழும் முந்திய அந்தரி பங்கன் தியானித்தும் - திருநுதலிற் சிறுபொட்டுவிளங்குஞ் (சத்திகளுண்) மிக்க உமாதேவிபாகருமாகிய சிவபெருமானைத் தியானஞ்செய்வேமாக. எ—று. சிந்துரம் ஆகுபெயர். (சுஎ)

ஆனித்திருவிழவிற்கண்டு போற்றிடுமப்படித்தி
யானித்திருமெங்களம்புலியூரனையன்புடைமை
யானித்திருவுமுடலுமெல்லாநிலைபன்மைகண்டீ
ரானித்திருமுற்பவமறுப்பீரரும்பாதகரே.

(இ-ள்.) ஆனித் திரு விழவில் கண்டு போற்றிடும் அப்படி - ஆனிமாசத்துத்திரு (வுத்தரநக்ஷத்திர) மகோற்சவத்திற்றரிசித்து (வணங்கித்) துதித்த அப்பெற்றியே,—எங்கள் அம் புலியூரனை அன்பு உடைமையால் தியானித்து இரும் - எம்முடைய அழகிய புலியூரில் வீற்றிருக்குஞ் சபாநடேசரைச் (சிரத்தை) அன்போடு (என்றுந்) தியானித்துக்கொண்டிருங்கள்,—இத்திருவும் உடலும் எல்லாம் நிலை அன்மை கண்டீர் - [உள்வழி நிலையுதலுடையவென்று நீர் மாறுபடக்கருதிய) இச்செல்வமுஞ் சரீரமுமாகிய எனது யான் எனப்படும் பிரபஞ்சங்களெல்லாம் நிலையாமையை (இல்வழிநீரே பிரத்தியக்ஷமாகக்) கண்டீர்கள் (ஆகலான் அக்கருத்தை அகற்றிவிட்டு),—திரும் உற்பவம் ஆனி அறுப்பீர் - (முற்கூறிய சிவத்தியானமாகிய வாளினால்) பிரவாகநாதியாய்வருஞ் சனனமரணமாகிய மரத்தை அரியக்கடவீர்கள்,—அரும் பாதகரே - (பிராயச்சித்தங்களானீக்கிக் கோடற்கு) அரிய பெரும்பாதகங்களைச்செய்த நம்மவர்களே. எ-று. கேடெனப்பொருள்படும் ஆனி ஈண்டு மரணத்தின்மேலும், திரும்புதலெனப் பொருள்படும் திருமென்னும் முதனிலைத்தொழிற்பெயர் ஈண்டு மீளமீளவருதன்மேலும் நின்றன. (சுஅ)

பாதவத்தைக்குறித்தேழெய்தகேழன்முன்பார்க்கரிய
பாதவத்தைக்குமெய்ப்பங்களித்தோய்புலியூர்ப்பதியப்
பாதவத்தைக்குறுகேனுயிர்போமப்பகலிடைத்தப்
பாதவத்தைக்குதவுற்றிடுவாய்பரிக்தஞ்சலென்றே.

(இ-ள்.) பாதவத்தைக் குறித்து ஏழ் எய்த கேழல் முன் பார்க்கு அரிய பாத- ஒருமராமரத்தை (இலக்காகக்) குறித்து ஏழுமராமரத்தை (உ

ருவும்படி ஒருபாணத்தை) எய்த விஷ்ணுவாகியபன்றி முன்னே காணாதற்
கரிய திருவடிகளையுடையவரே,—அத்தைக்குப் பங்கு மெய் அளித்தோய்-
மங்கையர்க்கரசியாகிய பார்ப்பதிதேவிக்குப் பாதித்திருமேனியைக் கொடு
த்தருளினவரே,—புலியூர்ப் பதி அப்பா - புலியூரைத்திருப்பதியாகவுடை
ய பரமபிதாவே,—தவத்தைக் குறுகேன் உயிர் போம் அப் பகல் இடை -
தவவொழுக்கத்தை மேற்கொள்ளாத தமியேனது (உடம்பினின்றும்) உ
யிர்நீங்கும் அம்மரணகாலத்தில்,—பரிந்து தப்பாது அவத்தைக்கு அஞ்சல்
என்று உதவுற்றிடுவாய் - அன்புகூர்ந்து தவறாது (எழுந்தருளிவந்து) அம்
மரணாவத்தைக்குச் (சிறிதும்) அஞ்சற்கவென்று தேவரீர் உபகரித்தருளு
க.எ-று. (௬௯)

சலஞ்சலம்போலற்றதாபதர்போலவென்றன்னையுமஞ்
சலஞ்சலம்போருகத்தாடந்தவாவெனத்தந்தருளாய்
சலஞ்சலம்போதென்றறல்பாய்வயலிடைச்சஞ்சலமாய்ச்
சலஞ்சலம்போதுளைந்தோடுந்தமிழ்ப்புலியூரவனே.

(இ-ள்.) சலம் சலம் போல் அற்ற தாபதர் போல - கோபமாகிய
(அக்கினி) தண்ணீர்போல (வெம்மை) தணியப்பெற்ற துறவிகட்குப்போ
ல,—என் தன்னையும் அஞ்சல் அஞ்சல் (என்று),—அது தணியப்பெறாத
தமியேனையும் அஞ்சற்க அஞ்சற்கவென்று அபயமளித்து,—அம்போருகம்
தாள் தந்தவா எனத் தந்தருளாய் - தமது செந்தாமரைமலர்போலுந் திரு
வடிகளைக்கொடுத்தபடி என்னையென்று (இவ்வுலகம்வியந்துரைக்குமாறு)
அவற்றைத்தந்தருளும்,—சலம் சலம் என்று போது அறல் பாய் வயல் இ
டைப்போது சலஞ்சலம் - சலசலவென்று (எப்) பொழுதும் நீர்பாயும் வய
லின்கணுள்ள தாமரைப்பூவாகிய [சேக்கையிலுறையுஞ்] சலஞ்சலமாகிய
சங்குகள்,—உளைந்து சஞ்சலம் ஆய் ஓடும் தமிழ் புலியூரவனே - ஈற்றுளை
ந்து வியாகுலமுற்று (அதனையாற்றாது புறத்திற்குதித்து] ஓடும்(நீர்வளவி
ய] இனிய புலியூரையுடையவரே. இரண்டாமடியில் அஞ்சலஞ்சல் என்
புழி என்றென்பது அவாய்நிலையான் வருவித்துரைக்கப்பட்டது. தந்தவா
று எனற்பாலது தந்தவா எனக் கடைக்குறைந்து நின்றதோர் செய்யுண்
முடிபு. மூன்றாமடியிற் சலசல என நிற்கற்பாலது மெல்லொற்று விரிந்து
சலஞ்சலம் என நின்றது. (௭௰)

புலியரவங்கண்டுகொண்டாடவாடும்புராதனனம்
புலியரவங்கங்கைசேர்சடையான்றிருப்பொற்பதத்தைப்
புலியரவங்கணசங்கரவண்புலியூரவென்னார்
புலியரவங்கடியாதுழல்வாரிப்புவனியிலே.

(இ-ள்.) புலி அரவம் கண்டு கொண்டாட ஆடும் புராதனன் - வி
யாக்கிரபாதமுனிவரும் பதஞ்சலிமுனிவருந் தரிசித்து [வணங்கித்] துதி

க்கக் [கனகசபையிலே பஞ்சகிருத்திய] விருத்தஞ்செய்தருளும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாயுள்ளவரும்,—அம்புலி அரவம் கங்கை சேர் சடையான் - பாலசந்திரனும் ஒலியையுடைய கங்கையும் பொருந்திய சடையையுடையவருமாகிய சிவபெருமானது,—பொன் திருப் பதத்தைப் புலி - பொன்போலுந்திருவடிகளைச் [சிரசில்] வைத்து வணங்கி,—அர - [பாசத்தை] அரிப்பவரே,—அங்கண - அருட்கண்ணையுடையவரே,—சங்கர - சுகஞ்செய்பவரே,—வண் புலியூர என்னார் - வளவிய புலியூரையுடையவரே என்று துதிக்கப்பெற்றிலர்,—புலியர் அவம் கடியாது இப்புவனியில் உழல்வார் - அவ்வற்பர் [அதன்மேலும்] பயனின் முயற்சிகளை நீக்காது [மேற்கொண்டு] இப்பூமியில் ஒருகணமேனுந்தரியாது] சுழன்று திரிவர் [அவரதுள்ளக்கிடக்கையாதோ?] எ-று. இரண்டாமடியில் அரவக்கங்கை அரவங்கங்கை எனவும், மூன்றாமடியிற் புல்லி எனற்பாலது புலி எனவும், நான்காமடியிற் புல்லியர் எனற்பாலது புலியர் எனவும் நின்றன. (எக)

புவனமுங்காலுங்ககனமுமற்றும்புணர்ந்துமன்றாய்ப்
புவனமுங்காலுமமுதகதிரும்புனைந்துகருப்
புவனமுங்காலுந்தரளம்புரள்புலியூரனைநம்
புவனமுங்காலுமழகுந்தியானித்துப்போற்றுநெஞ்சே.

(இ-ள்.) புவனமும் மற்றும் காலும் ககனமும் புணர்ந்தும் அன்றாய் [உம்]-பிரிதிவியுமப்புவுந்தேயுவும் வாயுவுமாகாயமுமாகிய பஞ்சபூதங்களாகியும் அவையல்லவாகியும்,— புவனமும் அமுதம் காலும் கதிரும் புனைந்து [உம்]-கங்காநீரையும் அமுதகிரணங்காலுஞ்சந்திரகலையையுந் [திருமுடியிற்] றரித்தும், கருப்பு வனமும் காலும் தரளம்புரள் புலியூரனை நம்பு - கருப்பஞ்சோலைகளிலுங்கால்வாய்களிலும் முத்துக்கள் புரளப்பெறும் புலியூரில்வீற்றிருக்குஞ் சிவபெருமானை விசுவசித்து,— வனமும் காலும் அழகும் தியானித்து போற்று - [அவருடைய] திருமேனியையுந் திருவடிகளையுந் திருவழகையுந் தியானித்துவணங்கித் துதிக்கக்கடவாய்,—நெஞ்சே - மனமே. எ-று. ஈண்டுப் புலியூரன் என்பது குறிப்புவினையாலணையும்பெயராய்ப், புனைந்தென்னுமெச்சத்திற்குமுடிபாயிற்று. நான்காமடியில் வன்னம் வனம் எனநின்றது. (எஎ)

சேடனென்றோதியசெவ்வேணடுவொற்றுச்சேருமவன்
சேடனென்றோர்புகழ்தென்புலியூரவன்றெய்வதவி
சேடனென்றோமறுப்பான்பதிமீதுமதேர்செயல்குற்
சேடனென்றோவெற்கருடருமோதுந்திகிரிமின்னே.

(இ-ள்.) சேடன் என்று ஓதிய செவ்வேள் நடு ஒற்றுச் சேரும் அவன் சேடன் என்றோர்- என்றுமிளையோரென்று [அறிஞர்] கூறிய சுப்பி

ரமணியக்கடவுளும், அச்சுப்பிரமணியக்கடவுட்கு முன்றோன்றிய விநாயகக்கடவுளும் என்பவர்,— புகழ் தென் புலியூரவன் - புகழ்ந்துரைக்குந் தெற்கின்கணுள்ள புலியூரரும்,—தெய்வத விசேடன் - மகாதேவரும்,— என் தோம் அறுப்பான் - எனது காமவெகுளி மயக்கமென்னுங் குற்றங்களை ஒழிப்பவருமாகிய சிவபெருமானது,—பதி மீது தேர் செய் உம அல்குல் சேடன் - திருப்பதியிற் [பொருந்துந்] தேரினதழகைச்செய்யும் நுமதல்குலாகிய சேஷனுனது,—என்றோ எற்கு அருள் தரும் ஓதும் - [இனி] எஞ்ஞான்றோ எனக்கு இரங்குவது சொல்லும்,—திகிரி மின்னே - [அவரது] மலையில்வசிக்கும் மின்போல்பவரே. எ-று. நடு ஒற்றுச் சேரும் அவன் சேடன் என்பது மேனிற்குஞ்சேடனென்னும் பகுபதந் தன்முதலயலில் ஒரு டகரவல்லொற்றுச் சேரப்பெறும் அவனதுசேடனெனப்பொருள்படும்; படவே, அவனது சேட்டன் என்றவாறாயிற்று. சேட்டன் - தமையன். என்றோரென்பது ஈண்டெழுவாயுருபு. [தலைமகன் குறையிரந்தலமரலுறுதல்.] (எ௩)

திகிரிக்கனநிகர்மாலாகமீதுறைசெங்கமலத்
திகிரிக்கனமுலைவாணியிந்த்ராணிதினஞ்தொழுஞ்சீர்த்
திகிரிக்கனன்மொழிமங்கைபங்காளர்திகழ்புலியூர்த்
திகிரிக்கனமுத்தெனவுதித்தாரெங்கடெய்வதமே.

(இ-ள்.) திகிரிக் கனம் நிகர் மால் ஆக மீது உறை செம் கமலத்தி - சக்கரத்தையுடைய மேகம்போலும் விஷ்ணுவினது திருமார்பில்வசிக்குஞ் செந்தாமரையாசனியாகிய இலக்குமியும்,—கிரிக் கனம் முலை வாணி - மலைபோலும் பருத்த முலைகளையுடைய சரஸ்வதியும்,—இந்த்ராணி - இந்திராணியும்,—தினம் தொழும் சீர் - நாடோறும் வந்து வணங்கப்பெறுஞ் சிறப்பையுடைய,—திகிரிக் கனல் மொழி மங்கை பங்கு ஆளர் - இமையமலையிற் [றவஞ்செய்த] கரும்புபோலுமினியசொற்களை வசனிக்கும் உமாதேவியை வாமபாகத்தில் ஆளுகின்றவரும்,—கனம் திகிரி முத்து என உதித்தார் ஏ - [திருநெல்வேலியென்னுந் திருப்பதியிலே] நன்குமதிக்கப்படும் மூங்கின் முத்தாகத் தோன்றியருளினவருமாகிய சிவபெருமானே,- திகழ் புலியூர் எங்கள் தெய்வதம் - விளங்காநின்ற புலியூரிலெழுந்தருளியிருக்கும் எம்முடைய முழுமுதற்கடவுள். எ-று. மூன்றாமடியிற் கன்னல் கனல் என நின்றது. (எ௪)

வதனங்களையைந்துடைப்புலியூரன்மரபுடைத்தெய்
வதநங்களையகழ்மன்னனென்றோர்க்குவளர்ந்துமிகு
வதனங்களையுறுமோடைசெய்காமனைவன்மைபுகு
வதனங்களோங்கதிமாக்கரிவையமகுடங்களே.

(இ-ள்.) ஐந்து வதனங்களை உடைப் புலியூரன் - ஐந்துதிருமுகங் களையுடைய புலியூரர்,—மரபு உடைத் தெய்வதம் - [எல்லா] நன்மைக ளையும் [ஒருங்கே] யுடைய கடவுள்,—நம் களை அகழ் மன்னன் என்றோர்க்கு - நம்முடைய மலமாகியகளையைப்பறிக்கின்ற பரமபதிஎன்று [இங்ஙனம்] துதிப்பவர்களுக்கு,—வளர்ந்து மிகுவது - [இம்மையிற்] பெருகிமிகுவன [யாவையெனின்],—அனங்களை உறும் ஓடை - அன்னங்களையுடைய நீர்நிலையும்,—செய் - விளையுளும்,—கா - சோலையும்,—மனை - உறையுளும்,—வன்மை - அரோகதிடகாத்திரமும்,—புகுவ தனங்கள் - [ஒருவரிடத்தும் நிலையுதலின்றி எல்லாரிடத்துங் கடிதின்மாறிமாறிப்] புகுவனவாகிய திரவியங்களும்,—ஐங் கதி மா - ஐங்கதிகளையுடையகுதிரையும்,—கரி - யானையும்,—வையம் - உலகபரிபாலனமும்,—மகுடங்களே - கிரீடமுமென்பவைகளேயாம். எ-று. மரபுடையவற்றை மரபு என்றது உபசாரம். மிகுவது பன்மை ஒருமை மயக்கம். வன்மை ஆகுபெயர். வண்மை எனப் பாடமோதி, உதாரகுணமெனப் பொருள்கூறுதலுமொன்று. (எகு)

குடந்தக்திரிமுலைச்சொல்லீருலகங்குளிர்புனற்ச
குடந்தந்திரிபென்பவர்க்கிகலேகுறிப்பீர்புரிவன்
குடந்தந்திரிகரணம்முமக்கேசெய்வன்கோமதன்ம
குடந்தந்திரித்திடுவீர்புலியூரர்தங்குன்றிடத்தே.

(இ-ள்.) குடம் தந்திரி முலை சொல்லீர் - குடமும் யாழோசையும் போலும் முலைகளையுஞ் சொற்களையுமுடையீர்,—உலகம் தம் திரிபு சகுடம் குளிர் புனல் என்பவர்க்கு இகலே குறிப்பீர் - உலகமுந் தாமும் ஒன்றியும் ஒன்றாதுநிற்றல் சகுடநிலையுங் குளிர்ந்தசலமும் ஒன்றியும் ஒன்றாது நிற்றல் போலுமென்று கூறப்படும் ஞானிகட்கும் பிரதிகூல வினைவிளைவுகளையே [விளைக்கக்] கருதுவீர்,—குடந்தம் புரிவன் - குடந்தத்தைச் செய்வேன்,—திரி கரணம் உமக்கே செய்வன் - மனவாக்குக் காயமென்னுந் திரிகரணங்களையும் உமக்கே சமர்ப்பிப்பேன்,—கோ மதன் மகுடம் தந்து இரித்திடுவீர் - நும்மரசனாகிய மன்மதனது மகுடம்போலுந் தனங்களை [அணையத்] தந்து [இம்மயக்கத்தை] ஒழித்துவிடுவீர்,—புலியூரர்தம் குன்று இடத்து - புலியூரரது இம்மலையின்கண்ணே. எ-று. தந்திரி, சகுடம், மகுடம் என்பன ஆகுபெயர். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. குடந்தம் ஓர்வகைக்கூத்துநிலை; அதனாற் றன் பணிந்த சொற் செயலுடைமை விளக்கி மகிழ்வித்தல் பெறப்படும். இரித்தல்வினைக்குச் செயப்படுபொருள் வருவித்துரைக்கப்பட்டது. [இரந்துபின்னிற்றல்.] (எசு)

இடந்தாலமாவுறையன்றிலும்பேடுமெழிற்சத்திமார்
பிடந்தாலம்வைத்திடுமூவரும்போன்மின்னுமேந்தலுமண்

ண்ணிடந்தாலம்வாழரியேற்றோனுறையிணர்மேய்ந்திகன்ம
கிடந்தாலமன்னுமியற்புலியூர்நகர்க்கேகினரே.

(இ-ள்.) தாலம் உறை இடம் ஆ அன்றிலும் பேடும் (போல்) - பனையை உறைவிடமாகவுடைய அன்றிலையும் அதன் பெடையையும்போலவும்,—எழில் சத்தி மார்பு இடம் தாலம் வைத்திடு மூவரும் போல் - அழகியசத்திகளையும், அச்சத்திகளை மார்பிலும் வாமபாகத்திலும் நாவிலும் வைத்த சத்திமான்களாகிய திரிமூர்த்திகளையும் போலவும்,—மின்னும் ஏந்தலும் - தலைமகளுந் தலைமகனும்,—மண் இடந்து ஆலம் வாழ் அரி ஏற்றோன் உறை - பூமியை அகழ்ந்து ஆலிலையிற்றுயின்ற விஷ்ணுவாகிய இடபவாகனத்தையுடைய சிவபெருமான்வீற்றிருக்கும்,—இகல் மகிடம் இணர் மேய்ந்து தாலம் மன்னும் இயல் புலியூர் நகர்க்கு ஏகினர் - வலிய எருமைகள் பூங்கொத்துக்களை மேய்ந்து வயலிற்றங்கு மியல்பையுடைய புலியூர்நகர்க்குச் சென்றனர். எ-று. உறை புலியூர்நகர் என வியையும். [தம்பதியடைந்தமைகண்டோர்கூறுதல்.] (எஎ)

ஏகாசலம்பமியறிருமார்பவிரணியமா
மேகாசலம்பயில்விற்புலியூரவெண்ணுன்கறஞ்செ
யேகாசலம்பணிசேர்கொங்கைபங்கவென்றேத்தினல்லா
லேகாசலம்படிதொல்வினையாயவிருட்கடலே.

(இ-ள்.) ஏகாசம் (இ) லம்பம் இயல் திருமார்ப - உத்தரீயந் தொங்கியசையுந் திருமார்பையுடையவரே,—இரணியம் ஆம் ஏக அசலம் வில் பயில் புலியூர - பொன்மயமாகிய ஒப்பற்ற மேருகிரியை வில்லாகவளைத்த புலியூரரே,—எண் நான்கு அறம் செய் - (காஞ்சிபுரத்திலே சாமானிய) தருமங்கள் முப்பத்திரண்டையும் வளர்க்கின்ற - காசு அலம்பு அணி சேர் கொங்கை பங்க என்று ஏத்தின் அல்லால் - முத்துமாலைபுரளும் அழகிய (பர அபரஞானமாகிய) தனங்களையுடைய பார்ப்பதிதேவியை வாமபாகத்திலுடையவரே யென்று (இங்ஙனம்) துதித்தாலன்றி,—சலம் படி தொல் வினை ஆய இருள் கடல் ஏகா - கோப (முதலிய) தூர்க்குணங்களாகிய நீர்பொருந்திய பழைய வல்வினையாகிய பாவசமுத்திரம் வற்றாது. எ-று. ஈற்றயலடிமுதல் ஏகாரம் இசைநிறை. ஈற்றடிமுதல் ஏகாது என்னும் அஃறிணையொன்றன்பாற்படர்க்கை எதிர்மறைவினைமுற்று விகுதிகுறைந்து ஏகா என நின்றது. சலம் இரட்டுறமொழிதல். (எஅ)

கடநாகமன்னுகயிலையினான்கருதார்க்கொருவி
கடனாகமன்புலியூரன்பரோர்கிலர்கொல்கவினார்
கடனாகமன்னகடிதடத்தாயெமைக்காய்வதுவே
கடனாகமன்பிறைப்பன்மாலைக்கூற்றமங்காந்ததுவே.

(இ-ள்.) கடம் நாகம் மன்னு கயிலையினன் - மதம்பொருந்திய யானைகள்சஞ்சரிக்குங் கைலாசகிரியில் வீற்றிருப்பவரும்,—கருதார்க்கு ஒரு விகடன் - (தம்மை உள்ளபடி) சிந்தியாதவர்கட்கொருவிகடரும்,—ஆகமன் - சைவாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளினவருமாகிய சிவபெருமானது,—புலியூர் அன்பர் ஓர்கிலர் கொல் - புலியூரில் எம்மன்பர் அறியார்போலும்,—கவின் ஆர் கடல் நாகம் அன்ன கடி தடத்தாய் - அழகுபொருந்திய கடலையுஞ் சர்ப்பபடத்தையும்போலும் அல்குலையுடையபாங்கியே,—ஏமைக் காய்வதுவே கடன் ஆக - எம்மை வருத்துவதே தனக்குக்கடமையாக,—மாலைக் கூற்றம் பிறைப் பல் அங்காந்தது - மாலையாகியகூற்றம் பிறையாகிய பல்லையுடைய செவ்வானமாகிய வாயைத் திறந்தது. எ-று. இதற்கினியாதுசெய்வேம் நீ கூறுக எனப் பொருள்படுதலின், மன் ஒழியிசைக்கண்வந்தது. பிறைப்பல் என்பது பிறையாகியபல்லையுடையது எனப்பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய், ஈண்டுச் செவ்வானையுணர்த்திநின்றது. அது மேலை உருவகங்கட்கேற்ப வாயாக உருவிக்கப்படுதலே ஆசிரியர் கருத்தென்பது அங்காந்தது என்னும் முற்றுவினையாற் பெறப்பட்டது. இவ்வன்மொழித்தொகை தொக்க இருமொழிப் பொருளிற் றீராதுநின்றே புறமொழிப்பொருளும் பயத்தலின், விடாதவன்மொழித்தொகை எனப்படுமென்பது முதற்சூத்திரவிருத்தி முதலியவற்றுட்காண்க. விகடன் வேறுபாட்டையுடையவன்; அது "பொக்கமிக்கவர்பூவுநீருங்கண்டு, நக்குநிற்பனவர்தமைநாணியே" என்னுந் திருவாக்கானுமுணர்க. [தலைவன் பிரிந்துழித் தலைவி மாலை கண்டிரங்கல்.] (எகூ)

காந்தத்தில்வீழுமி ரும்பினைப்போற்கனற்கண்ணுதலிற்
காந்தத்திலகநுதலாண்மருங்குறைகத்தனையே
காந்தத்தில்வீழிற்கவின்புலியூரன்கமலமதங்
காந்தத்தில்வந்தகளிவண்டிற்றோன்றுங்கருத்துறவே.

(இ-ள்.) காந்தத்தில் வீழும் இரும்பினைப் போல் - காந்தத்திற்பற்றுமிரும்பைப்போல,—கனல் கண் நுதலில் காந்த - அக்கினிக்கண் நெற்றியிற்சுவாலிக்க,—திலக நுதலாள் மருங்கு உறை கத்தனை - சிறுபொட்டையணிந்த நெற்றியையுடைய சிவகாமியம்மைக்கு வலப்பாகத்தில் நின்றருளும் விசுவகருத்தாவாகிய திருநடராசரை,—ஏகாந்தத்தில் வீழில் - கேவலஸ்தானத்திலே (விடயவிக்கிரகஸ்திதியோடிருந்து திரிகரணங்களாலும்) பற்றி (வழிபடின்,)—கவின் புலியூரன் - அழகிய அப்புலியூரர்,—அங்காந்தத்து கமலமதில் வந்த களி வண்டில் - விகசித்ததொருதாமரைப்பூவிற்றானே சென்றுசாரும் மதுமயக்கத்தையுடைய வண்டைப்போல,—கருத்து உறத் தோன்றும் - அவரதிருதயகமலத்திற்றாமேவந்து தோன்றியருளுவர். எ-று. அங்காந்தது எனற்பாலது அங்காந்தத்து எனத் தகரவல்லொற்றுவிரிந்துநின்றது. காந்தத்திற்பற்றுமிரும்பைப்போலத் திருநடராச

ரைத்திரிகரணங்களாலும்பற்றி வழிபடின், அப்புலியூரர் தாமரைப்பூவிற்கு னேசென்றுசாரும்வண்டைப்போல அவரதிருதயகமலத்திற் றாமேவந்து தோன்றியருளுவரெனக்கூட்டுக. (அ0)

கருத்தரவல்குலவர்பானிறுத்துங்கசட்டுயிர்காள்
கருத்தரவல்லவினைகெடல்வேண்டிற்கல்லானிழல்யோ
கருத்தரவல்லசலச்சிலையார்புலியூர்க்கருணைக்
கருத்தரவலமிலாரெனப்போற்றல்கைகோள்கடிந்தே.

(இ-ள்.) கருத்து அரவு அல்குலவர் பால் இறுத்தும் கசட்டு உயிர் காள் - மனத்தைச் சர்ப்பபடம்போலும் அல்குலையுடைய மகளிரிடத்துப்ப தித்த பேதைகளே,—கருத் தர வல்ல வினை கெடல் வேண்டில் - (மேன் மேலும்) பிறவியைத் தரவல்ல நம்வினைகள் கேடுபடுதலை நீர் விரும்புகி ல் - கல் ஆல் நிழல் யோகர் - கல்லாலின்கீழ்ச் (சனகர்முதலியமுனீந்திர ர்நால்வருக்கும்) யோகாப்பியாசஞ்செய்துகொடுத்தவர்,—வல் உத்தர அச லச் சிலையார் - வலிய வடமலையாகிய மேருவை வில்லாகவுடையவர், புலி யூர்க் கருணைக் கருத்தர் - புலியூரிலெழுந்தருளியிருக்குஞ் சிவகாருண்ணி யகருத்தா,—அவலம் இலார் எனப் போற்றல்- ஒருதுன்பமுமில்லாதவரெ ன்று துதிக்க,—கை கோள் கடிந்து - (நீவிர்) மேற்கொண்ட (இவ்) வொ ழுக்கத்தைத்தவிர்ந்து. எ-று. (அக)

கோகநகத்தைச்சகச்சணிமாமுலைக்கோதைநல்லார்
கோகனகத்தைநிகர்முகத்தாரென்றுகூறிமகிழ்
கோகனகத்தைவிடாய்புலியூரனைக்கூடியைய
கோகனகத்தையைபங்கவென்னாய்கும்பிக்காய்கொடிறே.

(இ-ள்.) கோகம் நகு அத் தைச்ச கச்சு அணி மா முலைக் கோதை நல்லார் - சக்கரவாகப்புள்ளையும் நகுகின்ற அத்துன்னிய கச்சையணிந்த பெரியமுலைகளையுடைய மாலையைத்தரித்த பெண்களை,—கோகனகத்தை நிகர் முகத்தார் என்று கூறி மகிழ் -செந்தாமரைமலரைநிகர்த்த முகத்தை யுடையவரென்று (புனைந்து) கூறிக்களிக்கின்ற,—கோகு அன கத்தை விடாய் - கழுதையதுகத்தையொத்த வின்பிதற்றைவிட்டு,—புலியூரனைக் கூடி - புலியூரரைக்குறுகி,—ஐயகோ - அந்தோ;—கல் நகத்து ஐயை பங்க என்னாய் - இமயமலையிற்றோன்றிய உமையம்மைபொருந்திய வாமபாக த்தையுடையவரே என்று துதித்தாயில்லை,—கும்பிக் காய் கொடிறே- (எ ன்னை) நரகில் (வீழ்த்தி) வருத்தும் (மனமாகிய) கொடிறே. எ-று. சுட்டு முலைமேற்று. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நல்லாரென்னும்பெய ரடைகத்துவிடாமைக் கேதுவிளக்குதற்கண்வந்தது. கோகு ஆகுபெயர். விட்டென்னுஞ்செய்தெனெச்சம் முற்றாய்த்திரிந்தது. இனம் பற்றி இமை யமலை கல்லாயிற்று. 'கொண்டது விடாமையாற் பேதமின்மை

யின் மனங்கொடிருகஉருவகிக்கப்பட்டது. கொடிறு - குறடு. கத்துண்மை யுந் துதியின்மையும் வாக்கின்குற்றமாயினும், மனமடியாகவருதலின், அத ன்பாற்பட்டன. (அஉ)

காயத்தைக்கும்பியைநன்றென்றிரோங்கைக்கடுங்கணையிற்
காயத்தைக்கும்பிவிழியிற்படோங்கதியைப்பரமா
காயத்தைக்கும்பிடுமன்பர்க்கமுதைக்கதிரைநற்ச
காயத்தைக்கும்பிநுதற்புலியூரனைக்கைதொழுதே.

(இ-ள்.) காயத்தைக் குப்பியை நன்று என்று இரோம் - இந்தச்ச ரீரத்தையும் (இதுபற்றிவரும்) நரகயாதனையையும் (யாம்) நன்றென்றுகரு தியிருக்கின்றிலம்,—கைக் கடும் கணையில் காயத் தைக்கும் பி விழியில்ப டோம் - (வீரரது) கையிற்பொருந்திய கொடிய அம்பைப்போல (வருத்து ம்படி) உருவும் (மகளிரது) அழகிய கண்ணுக்கு இலக்காகின்றிலம்,—கதி யை - புகலிடமும்,—பரம ஆகாயத்தை - சிதாகாயமும்,—கும்பிடும் அன் பர்க்கு அமுதை - (தம்மை) வழிபடும் பத்தர்க்குக் (கழிபெருஞ்சுவையோ டுறுதிபயக்கும்) அமுதும்,—கதிரை - (அவரதஞ்ஞானவிருளையோட்டுஞ்) சூரியனும்,—நல் சகாயத்தை - நல்ல (உயிர்த்) துணையும்,—நுதல் கும்பி புலியூரனைக் கை தொழுது - நெற்றியிலே அக்கினிக் (கண்ணையுடைய பு லியூரருமாகிய சிவபெருமானைத் (தரிசித்துக்) கைகுவித்துவணங்குதலால், எ-று. நன்று தனித்தனி கூட்டப்படும். இரண்டாமடியிற் பி- அழகு. நா ன்காமடியிற் கும்பி - அக்கினி. வணங்குதலாற் கருதியிருக்கின்றிலம் இ லக்காகின்றிலம் எனக்கூட்டுக. (அங)

கைவலமும்மைத்தொழிற்புலியூரகளுலுமது
கைவலமும்மிகுமுப்புரந்தீயிட்டகண்ணுதலே
கைவலமும்மிடமும்மறியாதகருத்திலிக்குங்
கைவலமும்புரிந்தாடற்பரையிருகண்மணியே.

(இ-ள்.) கை வல - (ஆன்மாக்கட்கறிவுறுத்தும்பொருட்டொழுகு ம்) ஒழுக்கத்தில்வல்லவரே,—மும்மைத் தொழில் புலியூர - சிருட்டி திதி சங்காரம் என்னும் மூத்தொழில்களையுஞ்செய்யும் புலியூரரே,—களுலும் மதுகை (யும்) வலமும் மிகு முப்புரம் தீ இட்ட கண்ணுதலே - (ஆகாயத் தில்) எழுந்துசெல்லும் வலிமையும் வெற்றியும் மிகுந்த முப்புரங்களில் அ க்கினிகொளுவிய நெற்றிக்கண்ணையுடையவரே,—கை வலமும் இடமும் அறியாத கருத்திலிக்கும் - கைகளுள் வலக்கையிதுவென்றும் இடக்கையி துவென்றும் பகுத்தறியாத பேதையாகிய தமியேனுக்கும்,—கைவலமும்- புரிந்து ஆள் - ஆட்கொண்டு முத்தியை ஈந்தருளும்,—தற்பரை இரு க ண்மணியே - உமையும்மைக் கிருகண்மணியாயுள்ளவரே. எ-று. (அச)

தற்கங்கள்செய்யுஞ்சமயங்கடோறுஞ்சரிப்பவன்மா
தற்கங்கமைஞ்செழுத்தாம்புலியூரன்சகத்தவரோர்
தற்கங்கமாகமமாரணந்தந்தவன்றாழ்புலிப்பா
தற்கங்கருநடங்காட்டியென்பார்க்கில்லைதற்கையமே.

(இ-ள்.) தற்கங்கள் செய்யும் சமயங்கள் தோறும் சரிப்பவன் - [தம்முளிகலித்] தருக்கங்கள்செய்யுஞ் சமயகோடிகடோறும் அவ்வச்சமயகருத்தாவாயிருப்பவர்,—மா தற்கு அங்கம் அஞ்சு எழுத்து ஆம் புலியூரன் - மாட்சிமைப்பட்ட தமக்குப் பரியங்கம் ஸ்ரீபஞ்சாக்ஷரமாகவுடைய புலியூரர்,—சகத்தவர் ஓர்தற்கு அங்கம் ஆகமம் ஆரணம் தந்தவன் - உலகின்கண் வசிப்பவர் [அச்சமயசொரூபங்களை] அறிந்துதன்ளற்குஞ் [சித்தாந்தசைவத்திருநெறிப்பட்டுத்தம்மையே பரமபதியென்று] கொள்ளற்கும் ஆறங்கங்களையும் இருபத்தெட்டாகமங்களையும் நான்குவேதங்களையுங் கொடுத்தருளினவர்,—தாழ் புலிப்பாதற்கு அங்கு அரு நடம் காட்டி என்பார்க்கு - [தம்மைப்பூசித்து] வணங்கிய வியாக்கிரபாதமுனிவருக்கு அங்கேபெறுதற்கரிய திருநடனத்தைத் தரிசிப்பித்தவரென்று துதிப்பவர்கட்கு,—ஐயம் தற்கு இல்லை - அம்முதனூல்களிற் சந்தேகவிபரீதக் காட்சிகளுண்டாதலில்லை. எ-று. தருக்கம் தற்கம் எனமருவிற்று. தன்கு தற்குஎன வலித்தல்விகாரம் பெற்றுநின்றது. [திருவருளை முன்னிட்டுநின்றோர்பவருக்கே அவற்றது மெய்ப்பொருடோன்றுமென்பது கருத்து.] பரியங்கம்-கட்டில். (அரு)

கைச்சுந்தரித்துமணியும்புனைந்தகதிர்முலையோ
கைச்சுந்தரிவல்லவன்புலியூரன்கறுத்துமுன்னை
கைச்சுந்தரியலரைச்சிதைத்தோன்பொய்க்கபடிகளைக்
கைச்சுந்தரிவிடையானுடையான்கழல்பாடுதுமே.

(இ-ள்.) கைச்சும் தரித்து மணியும் புனைந்த கதிர் முலை ஓகைச் சுந்தரி வல்லவன் - கச்சையுமணிந்து முத்துமாலையையுந்தரித்த பர அபர ஞானமாகிய தனங்களையும் (எஞ்ஞான்றுமொருபெற்றித்தாய)பேரின்பவாழ்வையுமுடைய சிவகாமசுந்தரிக்குநாயகரும்,— புலியூரன் - புலியூரையுடையவரும்,—முன் கறுத்து தரியலரை நகைச்சும் சிதைத்தோன் - முன்வெகுண்டு தாரகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி என்னும் பகைவரை முறுவலினலும் வதைத்தவரும்,—பொய்க் கபடிகளைக் கைச்சு உந்து அரி விடையான் - பொய்யை அநுசரித்தொழுகும் படிறர்களை உவர்த்து ஏற்றிவிடுகின்ற விஷ்ணுவாகிய இடபத்தையுடையவரும்,—உடையான் - (எம்மை அநாதியே அடிமையாக) உடைய பசுபதியுமாகிய சிவபெருமானது,—கழல் பாடுதும் - திருவடிகளை (என்றும் இப்பெற்றியே) பாடுவேமாக. எ-று. முதலடியிற் கச்சு கைச்சு எனப் போலியாயிற்று. ஓகை - ஆகு

பெயர். கதிர் - ஒளி; என்றது ஞானத்தை. அது "சுடச்சுடரும்பொன்போ லொளிவிடும்" என்பதனானுமுணர்க. நகைச்சுமென்னுமும்மை இழிவு சிறப்பு. (அசு)

பாடலங்கந்தம்பயில்சடையார்பதுமத்துமள்ளர்
பாடலங்கந்தத்துழும்புலியூரர்செம்பங்கியிரு
பாடலங்கந்தகற்செற்றாரெனவொன்றுபாடுகிலீர்
பாடலங்கந்தமையாதினுக்கோதுவிர்பாவலரே.

(இ-ள்.) பாடலம் கந்தம் பயில் சடையார் - பாதிரிப்பூக்களினது பரிமளம் பொருந்துஞ்சடையையுடையவர்,—மள்ளர் பதுமத்துக் கந்தத்துப் பாடு அலம் உழும் புலியூரர் - உழவர்கள் தாமரைக்கிழங்கிற் பெருமை பொருந்திய கலப்பைகளினாலுழும் புலியூரில் வீற்றிருப்பவர்,—செம் பங்கி இருபாடு அலங்கு அந்தகன் செற்றார் என ஒன்று பாடுகிலீர் - சிவந்தமயிர் இரண்டுபக்கத்துந் [தொங்கி] அசையப்பெறுங் கூற்றுவனை வதைத்தவர் என்று துதித்துஒருபிரபந்தமும் பாடுகின்றீர்களில்லை,—அங்கம் பாடல் தமை யாதினுக்கு ஓதுவிர் - சருக்கம் இலம்பகம் படலமுதலிய அவயவங்களையுடைய அவயவிகளாகிய வேறுபிரபந்தங்களை எதன்பொருட்டுப்பாடுகின்றீர்கள்,—பாவலரே - புலவர்களே. எ-று. (அஎ)

பாவிக்குண்மிக்கபெரும்பாவியான்புலியூர்ப்பதியப்
பாவிக்குநேர்மொழிபங்காவெனாதவன்பாடுமிந்தப்
பாவிக்குவலயமீதேவழங்கவும்பண்ணியவாற்
பாவிக்குமன்பர்க்கமுதாமதிகன்பதாம்புயமே.

(இ-ள்.) பாவிக்குள் மிக்க பெரும் பாவி - பாவிகளுக்குளெல்லாம் மிகப்பெரும்பாவியும்,—புலியூர்ப் பதி அப்பா இக்கு நேர் மொழி பங்கா எனாதவன் யான் - புலியூரைத் திருப்பதியாகவுடைய பரமபிதாவே கரும்பினதுசாற்றைநிகர்க்கும் இன்சொற்களைவசனிக்கும் பார்ப்பதிதேவியை வாமபாகத்திலுடையவரே என்று (விசுவசித்துத்) துதியாத பொறியிலியுமாகிய தமியேன்,—பாடும் இந்தப் பாவும் இக்குவலயம் மீது வழங்கப் பண்ணிய - பாடுகின்ற புலியூரந்தாதியாகிய இப்பிரபந்தமும் இவ்வுலகின்கண் வழங்கும்படிசெய்தன,—பாவிக்கும் அன்பர்க்கு அமுது ஆம் அதிகன் பத அம்புயம் - தம்மைப் பாவனைபண்ணும் மெய்யன்பருக் கமுதுபோலும் விச்சுவாதிகராகிய சிவபெருமானுடைய உபயதிருவடித்தாமரைகள். எ-று. இக்கு ஆகுபெயர். இழிவுசிறப்பும்மை மாற்றியுரைக்கப்பட்டது. பண்ணும் என எதிர்காலத்தாற் கூறற்பாலது தெளிவுபற்றிப் பண்ணிய என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. ஆல் அசைநிலை. (அஅ)

பதாம்புயங்காணவொருகானனிவரம்பாலிப்பதப்
பதாம்புயங்கும்புயக்கண்ணற்கெட்டாதவபாழியிரு
பதாம்புயங்கொண்டவற்செற்றபகவபணுமணிமொய்ப்
பதாம்புயங்காபரணப்புலியூரநின்பான்மையதே.

(இ-ள்.) பத அம்புயம் ஒருகால் காண நனி வரம் பாலிப்பது - தேவரீருடைய உபயதிருவடித்தாமரைகளை ஒருகாற் றரிசிக்க மிக வரங்கொடுப்பது,—அப்ப - பரமபிதாவே,—தாம்பு உயங்கும் புயக் கண்ணற்கு எட்டாதவ - (அசோதைபிணித்த) கயிற்றான்வருந்திய புயங்களையுடைய விஷ்ணுவுக்குக் காணுதற்கரியவரே,—பாழி இருபது ஆம் புயம் கொண்டவற் செற்ற பகவ - வலிய இருபதாகிய புயங்களையுடைய இராவணனைக் (குற்றத்திற்குத்தகத்) தண்டித்த ஆதிபகவரே,—பணு மணி மொய்ப்பது ஆம் புயங்க ஆபரணப் புலியூர - படத்தின்கண் இரத்தினங்கள் நெருங்கப்பெறுஞ் சர்ப்பாபரணத்தையுடைய புலியூரரே,—நின் பான்மையதே - தேவரீருக்கு இயற்கையேயாம். எ-று. வரம்பாலிப்பது நின்பான்மையது என வியையும். புலியூர் தரிசிக்க முத்திகொடுக்குந் தேவஸ்தானமாதலின், இங்ஙனங் கூறப்பட்டது. (௮௧)

பானம்பரிந்துடையாரில்லின்மோழைபயின்றநற்சோ
பானம்பரிந்துதிரியவிடார்மிகுபத்திமையிற்
பானம்பரிந்துமுடிப்புலியூரர்பதாம்புயத்தின்
பானம்பரிந்துவிடுவார்நம்மின்னலைப்பாண்மனமே.

(இ-ள்.) மோழை பானம் பரிந்து-(பசிமிகவாற்) கஞ்சிமுதற் பருகுவனவற்றையாயினும் (பெற) விரும்பி,—உடையார் இல்லின் பயின்ற நல் சோபானம் பரிந்து திரிய விடார் - செல்வரது வீடுகளிற் பொருந்திய நல்ல தாழ்வாரங்கடோறுஞ் சுழன்றுதிரிய(இம்மையில்)விடார்,—மிகு பத்திமையில் - பேரன்பினால்,—நம்பர் - அதிபரமாப்தரும்,—பால் இந்து முடிப் புலியூரர் - வெண்மையாகிய பாலசந்திரனைத்தரித்த திருமுடியையுடைய புபுலியூரருமாகிய சிவபெருமானது,—பத அம்புயத்தின் பால் நம்பு - பாததாமரைகளில் விசுவசி,—நம் இன்னலை அரிந்து விடுவார் - (அங்ஙனம் விசுவசிக்கின் அவர்) நம் பிறவித்துன்பத்தைத் (தேகநீக்கத்திற்) றப்பாது களைந்துவிடுவர்,—பாண் மனமே - பாழாகிய எமது மனமே. எ-று. பாழ் பாண் என மருவிற்று. 'ஐம்மூன்றதாமுடல்வன்மைபின்வந்திடிலாறுடைந்தா, மெய்ம்மாண்பதாகவ்வரின்முன்னழிந்துபின்மிக்கணவ்வா, மய்மேல்வரினிருமூன்றாமுடல்' என்னும் விதிபற்றி இன்னோரன்னவற்றை மரூஉமுடிபென்றது விதிமுடிபென்றலுமொன்று. மனமே, சிவபெருமானது பாதங்களிற் பேரன்பினால் விசுவசி, அங்ஙனம் விசுவசிக்கின், அவர் இம்மையி

ற்ருழ்வாரங்கடோறுந் திரியவிடார், தேகநீக்கத்திற் பிறவித்துன்பத்தைத் தப்பாது களைவர் எனக் கூட்டுக. (௯0)

பாணித்திலகமெனுங்கங்கைவேணியனைப்பதுமப்
பாணித்திலமன்னதுண்டத்தனப்பொற்பரியபொருப்
பாணித்திலநகைசேர்புலியூரனைப்பாடிநெஞ்சே
பாணித்திலமினியெவ்வண்ணமோநம்பவஞ்சிந்துமே.

(இ-ள்.) பாணித் திலகம் எனும் கங்கை வேணியனை - யமுனை சரசுவதி நருமதைமுதலிய நதிகட்கெல்லாந் திலகமென்றுசொல்லத்தகுங் கங்காநதிபொருந்திய சடையையுடையவரும்,—பதுமம் பாணி - செந்தாமரைமலர்போலுந் திருக்கைகளும், — திலம் அன்ன துண்டம் - எட்பூவையொத்த திருமூக்கும்,--தனம் பரிய பொன் பொருப்பாள் - தனங்களாகிய பெரிய பொன்மலைகளுமுடையவராகிய,—மித்திலநகை சேர் புலியூரனை - முத்துப்போலும் பற்களையுடைய உமாதேவி தழுவும் புலியூரருமாகிய சிவபெருமானையே (கவிநாயகராகக் கொண்டு),—நெஞ்சே பாடிப் பாணித்திலம் - மனமே (இங்ஙனந் துதிரூபமாகிய பிரபந்தங்களைப்) பாடிக் காலநீட்டித்திலம்,—இனி எவ்வண்ணமோ நம் பவம் சிந்தும் - இனி எவ்வாற்றானே நம் பிறவியறும். எ-று. பதுமம் திலம் என்பன ஆகுபெயர். மித்திலநகை அன்மொழித்தொகை. காலநீட்டித்திலம் என்பதற்குக் காலங்கழித்திலம் என்பது கருத்தாகக்கொள்க. (௯௧)

சிந்தாமணிதென்றலன்றிலுமற்றுமென்சிற்றுயிரைச்
சிந்தாமணியைச்சிதைவிக்குமாற்செகந்தாளிரக்கச்
சிந்தாமணிதுளவத்தோன்பரவுந்திகழ்புலியூர்ச்
சிந்தாமணியைவரக்கண்டிலேனின்னந்தேனினமே.

(இ-ள்.) சிந்து - சமுத்திரமும்,—ஆ மணி - பசுமணியும்,—தென்றல் - மந்தமாருதமும்,—அன்றில் - மகன்றிலும்,—மற்றும் - இவைபோல்வனபிறவும்,—என் சிற்று உயிரைச் சிந்தா - எனது [அறிவாற்] சிறிய உயிரை நலிவித்து,—மணியைச் சிதைவிக்கும் - அழகை அழிக்கின்றன,-- செகம் தாள் இரக்கச் சிந்து ஆம் அணி துளவத்தோன் பரவும் - [மாபலியிடத்துப்] பூமியைப் பாதத்தான் [அளந்து] யாசிக்கும்பொருட்டு வாமனரூபங்கொண்ட துளசிமாலையைத்தரித்த விஷ்ணுபுகழும்,—திகழ் புலியூர்ச் சிந்தாமணியை இன்னம் வரக் கண்டிலேன் [தலவிசேடமுதலியவற்றுற்சிறந்து] விளங்குகின்ற புலியூரில் எழுந்தருளியிருக்குஞ் சிந்தித்தனவற்றை எஞ்சாதுகொடுக்குந் தேவமணிபோலுமென்றலைவரை இன்னும் வரக் கண்ணுற்றிலேன்,—இனம் தேனே - [துணைபிரியாது ஒன்றற்கொன்

று) இனமாகிமருவும் வண்டுகளே. எ-று. ஆல் அசைநிலை. [வரவுநீடத்த லைவியிரங்கல்.] (௫௨)

தேனினம்பார்ந்துதெவிட்டியுவட்டிச்செருக்குமிகுந்
தேனினம்பாய்கொன்றையன்புலியூரனைச்சென்றுபணிந்
தேனினம்பாதசெலவாற்புலத்தவர்தீமைசிதைத்
தேனினம்பாவிநெஞ்சேசெல்வனேபழிச்சென்மத்திலே.

(இ-ள்.) தேன் இன் அம்பு ஆர்ந்து தெவிட்டி உவட்டிச் செருக்கு மிகும் தேன் இனம் பாய் - தேனாகிய இனிய நீரையுண்டு தேக்கியுவர்த்துக் களிப்புமிகும் வண்டினங்கள் பரவியிருக்கப்பெறும்,— கொன்றையன் புலியூரனைச் சென்று பணிந்து - கொன்றைமாலையைத்தரித்தவராகிய புலியூரரை (அங்கே) சென்று (தரிசித்து) வணங்கி,—நின் நம்பாத செலவால் புலத்தவர் தீமை சிதைத்தேன் - நினது நம்புதற்கரிய செலவுகாரணமாக ஐம்புலவேட்டுவர் செய்த தீமைகளைப்பரிகரித்தேன்,—பாவி நெஞ்சே இனம் பழிச் சென்மத்தில் செல்வனோ - பாவியாகிய எனது மனமே (நின்பொருட்டு) இன்னமும் பழிக்கப்படும் பிறவியிற் பிரவேசிப்பேனோ. எ—று. ஈற்றயலடிமுதல் ஏகாரம் இசைநிறை. ஈற்றடியில் இன்னம் என நிற்கற்பாலது இனம் என நின்றது. [மறித்தும் விடயவெதிர்முகமாகிய மனத்தை நோக்கிக்கூறியது.] (௫௩)

மத்தன்பராபரைகொண்கன்முகிறொடுமந்தரமா
மத்தன்பராகமலர்த்தாதிறைத்துமணத்தபது
மத்தன்பராவுறுதென்புலியூரன்மனமெனுஞ்சே
மத்தன்பராலறியப்படுவானெங்குமாய்ந்திருந்தே.

(இ-ள்.) மத்தன் - நித்தியானந்தரும்,—பராபரை கொண்கன் - பராசத்திக்குச்சத்திமானுயுள்ளவரும்,—முகில் தொடும் மந்தரம் ஆம் மத்தன் - மேகமண்டலத்தைத்தொடுகின்ற மந்தரமலையாகிய மத்தையுடைய விஷ்ணுவும்,—பராக மலர்த் தாது இறைத்து மணத்த பதுமத்தன் பராவுறு - அணுவடிவாகிய பூந்தாதையிறைத்து வாசனைகமழுஞ் செந்தாமரைமலரையாசனமாகவுடைய பிரமாவுந் (தரிசித்துவணங்கித்) துதிக்கப்பெறும்,—தென் புலியூரன் - தெற்கின்கணுள்ள புலியூரில் வீற்றிருப்பவருமாகிய சிவபெருமான்,—எங்கும் மாய்ந்து இருந்து- (பாலிநெய்போல வெளிப்படாது) எங்கும் மறைந்து வியாபித்திருக்கினும்,—மனம் எனும் சேமத்து அன்பரால் அறியப்படுவான் - மனக்காவலையுடைய தம் மெய்யன்பர்களிடத்துத் (தயிரிநெய்போல வெளிப்பட்டுநின்று) அவரால் அறியப்படுவர். எ-று. இருந்தும் என நிற்கற்பாலது உம்மைதொக்கு இருந்து என நின்றது. மாய்தல் - மறைதல்; அது "செங்நெலின், வான்புகழ்களிறுமாய்கழனியாக்கமும்" என்பதனானுமறிக. (௫௪)

இரும்பனகத்தைக்குழைத்தமின்னேயிரங்காதினிதா
யிரும்பனகத்துநுஞ்சாரலிற்கேட்குமிரண்டுறழை
யிரும்பனகத்திரளிற்கொலைசூழ்வதிலீர்ம்புலியூ
ரிரும்பனகத்தணியான்சிலம்போசையெனுஞ்செல்வமே.

(இ-ள்.) இரும்பு அன் (ன) அகத்தைக் குழைத்த மின்னே- இரும்பையொத்த திண்ணிய என்னெஞ்சை நெகிழ்ந்துருகும்படிசெய்த மின்போல்பவரே,—இரங்காது இனிது ஆய் இரும் - (யானிதுபொழுதுபிரிவலெனவும், பிரிந்தாற் பின் வரவுநீட்டிக்குமெனவும் உட்கொண்டு நீர்சிறிதும்) இரங்காமலீண்டினிதாகவிரும்,—பல் நகத்து நும் சாரலில் கேட்கும் - பலமரங்களையுடைய நும்மலைச்சாரலின்கண் நுஞ்செவிக்குப் புலப்படாவிற்கும்,—இரண்டு உறழ் ஐ இரு உம்பல் நகத் திரளில் கொலை சூழ்வது இல் ஈர்ம் புலி ஊர் - இரண்டாலுறழ்ந்த பத்தாகிய இருபது வலிய நகக்குழுவாலுங் கோறலை (மனத்தின்கண்ணு நகாற்) சிந்திக்கவும் பெறாத சீவகாருண்ணிய முதிர்ச்சியையுடைய புலி (சிவலிங்கோபாசனை செயப்பெற்றகாரணத்தாற்) புலியூர் எனப்பெயர்பெறுஞ் சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கும்,—இரும் பனகத்து அணியான் சிலம்பு ஓசை எனும் செல்வம் - பெரியபாம்பை ஆபரணமாகத்தரித்த சிவபெருமானது திருவடிகளிற் பொருந்திய திருச்சிலம்பொலியாகிய பேரானந்தப்பெருஞ்செல்வமானது எ-று. முதலடியில் அன்ன என்னும் உவமவுருபு ஈறுதொக்கு அன் என நின்றது. செல்வமானது புலப்படாவிற்கும் எனக்கூட்டுக. [இடமணித்தென்றல்.] (கரு)

செல்வாரணக்குழற்கண்டத்தர்மாயையுட்சேர்ந்திடினுஞ்
செல்வாரணமுதற்சென்மமுற்றாலுமென்செய்திடினுஞ்
செல்வாரணக்கணிச்சிப்புலியூரசிறியன்முத்திச்
செல்வாரணவுநின்றாண்மறவாவரஞ்செய்தருளே.

(இ-ள்.) செல் வாரணம் குழல் கண்டத்தர் மாயை உள் சேர்ந்திடினும் - முகிலையுஞ் சங்கையும் போலுங் கூந்தலையுங் கழுத்தையுமுடைய மகளிர்செய்யும் மாயாகாரியங்களாகிய காமலீலைகளுட் பிரவேசிக்கினும்,- வாரணம் முதல் செல் சென்மம் உற்றாலும்-அத்திமுதல் எறும்பு (ஈறாகிய) யோனிபேதங்களிற் பிறக்கினும்,—என் செய்திடினும் - அப்பிறவிகளில் எத்துணைப்பெரும்பாதகங்களைச்செய்யினும்,—செல்வா - அருட்செல்வரே,—(இ) ரணம் கணிச்சிப் புலியூர - விரணத்தைச்செய்யும் மழுப்படையையுடைய புலியூரரே,—சிறியன் - ஒன்றுக்கும்பற்றாதசிறியேன்,- முத்திச் செல்வார் அணவும் நின் தாள் மறவா வரம் செய்தருள் - முத்தியின்கட்செல்லுஞ்சத்திநிபாதருக்கு அணிமையாகுந் தேவரீருடைய திருவடிகளை (ஒருகணமும்) மறவாத இவ்வரமொன்றையும் பிரசாதித்தருளுக. எ-று. மறவாத என்னும்பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. இரண்டாமடிமுதற் செல்-சிதல். அஃது ஈண்டு அறிவுமுதலிய ஒப்புமை நயம்பற்றி எறும்பின்மேற்று; "கோடுநான்குடையவேழந்தாரகன்குறைத்தகோட்டைப் பாடறநோற்றுப்பெற்றபதியிது" என்புழிப்போல. (கசு)

செய்யானனந்தங்குசேக்கையம்வாரிசத்தேன்பெருகிச்
செய்யானனந்தலைபாய்புலியூரன்செழுங்கருணை
செய்யானனந்தமைமைந்துடையான்றிருமேனிமிகச்
செய்யானனந்தரஞ்சேர்வானஞ்சிந்தையென்பஞ்சரமே.

(இ-ள்.) செய்யான்-நடுவு நிலைமையினையுடையவரும்,—அனம் தங்கு சேக்கை அம் வாரிசத் தேன் பெருகிச் செய்யால் நனந்தலை பாய் புலியூரன் - அன்னப்புட்களுறங்குஞ் சேக்கையாகிய அழகிய தாமரைப்பூவிலுள்ள தேன்பெருகி வயன்மத்தியிற் பிரவாகிக்கும் புலியூரையுடையவரும்,—செழும் கருணை செய் ஆனனந்தமை ஐந்து உடையான் - செழுமையாகிய திருவருள் சுரக்குந் திருமுகங்களை ஐந்தாகவுடையவரும்,—திருமேனி மிகச் செய்யான் - திருமேனி மிகச்சிவந்தவருமாகிய சிவபெருமான், நம் சிந்தை என் பஞ்சரம் அனந்தரம் சேர்வான் - நமது இருதயமாகிய கூட்டின்கண் எஞ்ஞான்றும் (இனிது) வாழுவர் (இஃதென்னையற்புதம்!) எ-று. இரண்டாமடியிற் செய்யால் என்பது உருபுமயக்கம். (கூஎ)

பஞ்சரங்கண்டகிளிமொழிபாகபவவதன
பஞ்சரங்கண்பணியும்புலியூரவெனப்புகழ்பா
பஞ்சரங்கன்றிடவாடுநெஞ்சேநம்பவங்களெனும்
பஞ்சரங்கற்கழலாம்பயில்விக்குமின்பச்சுகமே.

(இ-ள்.) பஞ்சரம் கண்ட கிளி மொழி பாக - கூட்டின்கட் காணப்படுங் கிளியினதுசொல்லைப்போலும் இனிய சொற்களை வசனிக்கும் உமாதேவிக்கு வலப்பாகரே,—பவ - விசுவகாரணரே,—பஞ்ச வதன - ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களையுடையவரே,—(அ) ரங்கன் பணியும் புலியூர எனப் புகழ் - சீரங்கத்தில் வசிக்குந் திருமால் வணங்கும் புலியூரரே என்று (இங்ஙனம்) துதிப்பாயாக,—பாபம் சரம் கன்றிட வாடு நெஞ்சே - (பூருவசன்மங்களில் ஆர்ச்சித்த) பாவமானது அம்பைப்போல நலிய வாடுகின்றமனமே,—நம் பவங்கள் எனும் பஞ்சு அரங்கற்கு அழலாம் - (அங்ஙனந்துதித்தால் அத்துதி) நம்முடைய அப்பாவங்களாகிய பஞ்சுதீதற்கு அக்கினியாகும்,—இன்பச் சுகம் பயில்விக்கும் - (அதுவன்றியுஞ் சிவஞானம்வாயிலாக) நிரதிசயவின்ப பரசுகாநுபவத்தையும் எமக்குப் பொருந்தச்செய்யும். எ-று. அரங்கல்-அழிதல். (கூஅ)

சுகம்பன்னகஞ்சொனிதம்பமம்பாலிகைதூயநற்கிஞ்
சுகம்பன்னகஞ்சசியின்சின்னநண்பவத்தோகைக்குநஞ்
சுகம்பன்னகண்கழுந்தம்புலியூரர்சுடர்க்கிரிமேற்
சுகம்பன்னகங்கொள்ளுமோமெய்யெலாமச்சுராபுத்தமே.

(இ-ள்.) சொல் நிதம்பம் சுகம் பன்னகம் (அன்ன) - சொல்லும் நிதம்பமும் (நிரனிறையே) கிளிமொழியையுஞ் சர்ப்பபடத்தையும் ஒப்பனவாம்,—தூய அம் பாலிகை நல் கிஞ்சுகம் (அன்ன) - சுத்தமாகிய அழகிய வாயிதழ்கள் (நடுவிற்கொய்த) நல்ல முருக்கலரை ஒப்பனவாம்,—பல் நகம் சசி சின்னம் (அன்ன) - பல்லும் நகமும் (எதிர்நிரனிறையே) சந்தி

ரனையும் சங்கினது முத்தையும் ஒப்பனவாம்,—நண்ப - பாங்கனே,—அத் தோகைக்கு - (சாயலான்) மயிலை (ஒத்த) அத்தலைமகட்கு,— கண் கழுத்து நஞ்சு கம்பு அன்ன - கண்களும் கழுத்தும் (முறையே) நஞ்சைபுஞ் சங்கையும் ஒப்பனவாம்,—அம் புலியூரர் சுடர்க் கிரி மேல் சுகம் பன் (ன) அகம் கொள்ளுமோ - அழகிய புலியூரரது (செய்மைக்கண் விளங்காநின்ற) சுடரையுடைய மலையின்கண் (அத்தலைமகண்மாட்டநுபவித்த) காமசுகத்தை (நினக்குச்) சொல்ல அதனை நின்னுள்ளம் அமைத்துக் கொள்ளுமோ,—மெய் எலாம் அச் சுர அபுத்தம் (அன்ன) - ஒழிந்த உறுப்புக்களெல்லாம் அத்தேவர் உண்டறியாத (புதிய) அமுதை ஒப்பனவாம். எ-று. இன் காரியை. சின்னம்-சங்கு. அஃதாகுபெயராய் ஈண்டு முத்தையுணர்த்திநின்றது. தோகை உடம்பொடுபுணர்த்தல். அன்ன என்னும் உவமவுருபு எனையிடத்துக்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஈற்றடியிற் பன்ன என நிற்கற்பாலது பன் என நின்றது. அபுத்தம் - உண்ணப்படாதது. [தலைமகளெழினலந் தலைமகன் பாங்கற் குரைத்தல்.] (கூகூ)

புத்திக்குறும்பசுந்தேனமுதாம்புலியூரரெனிற்
புத்திக்குடையகலைமங்கைசேரும்புரையில்பொருப்
புத்திக்குலவிப்புகழ்மிகநீடும்புவனியிலே
புத்திக்குரியபொருடந்துமேவிடும்பூந்திருவே.

(இ-ள்.) புத்து இக்கு உறும் பசும் தேன் அமுது ஆம் புலியூரர் எனில் - (தம்மெய்யன்பருக்குப்) புதிய கருப்பஞ்சாற்றையும் இறுகிய பசிய தேனையும் அமுதையும்போலத் தித்திக்கும் புலியூரர் என்று (சிரத்தையன்போடு ஒருகாற்) றுதிக்கின்,—புத்திக்கு உடைய கலைமங்கை சேரும் - (அவரிடத்து) அறிவிற்குரிய கலைமகள் சென்று சேருவள்,—புரை இல் புகழ் திக்குப் பொருப்பு உலவி மிக நீடும் - (ஆதாரமாகிய உலகம் பொன்றுந்துணையும் ஆதேயமாகிநிற்றலிற் றனக்கு) நிகரில்லாதபுகழானது திக்குமலையைப்போல விளங்கி மிகுந்தோங்கும்,—புவனியில் பூ திரு புத்திக்கு உரிய பொருள் தந்து மேவிடும் - இப்பூமியின்கண் அழகிய இலக்குமி அநுபவத்திற்குரிய செல்வப்பொருள்களைக்கொடுத்து (அவரில்லின்கணீங்காது) வதிவள். எ-று. உலாவி உலவி என நின்றது. ஏகாரம் முன்னையது இசைநிறை. பின்னையதுஈற்றசை. [புலியூரர் எனச்சிரத்தையன்போடொருகாற்றுதிக்கிற் கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளும் பெரும்பான்மையும் இவற்றின்வரும் புகழும் அவரை விட்டுநீங்கா என்பது கருத்து. (கOO)

புலியூரந்தாதியுரை முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.